28
பக்கங்கள்

யாழ்., வன்னி 20/=

# உதயன்

சுடர்: 29 கதிர்: 275 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 12, வியாழன் 28.08.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

முறையாக ... புகையிரத சேவை
தொடர்புகளுக்கு:
மனோஜ்
எக்ஸ்பிரஸ் சேர்விஸ்
(யாழ். - கொழும்பு)
T.P: 0777 517 019
0772 293 206

# தீர்வை ஜனாதிபதியே தரவேண்டும் சர்வதேசத்தால் எதுவுமே முடியாது

## பூநகரியில் வைத்துத் தெரிவித்தார் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ



கிளிநொச்சி, ஓக.28
இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே தர வேண்டும். வெளிநாடுகளிடம் முறையிடுவதால் தீர்வு எதுவும் கிடைக்கப் போவதில்லை. அதனால் எந்தப் பயனும் இல்லை. இவ்வாறு நேற்று பூநகரியில் வைத்து அடித்துக் கூறினார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும், ஜனாதிபதியின் சகோதரருமான பஸில் ராஜபக்ஷ.

26 ஆம் பக்கம் பார்க்க

## அச்சுவேலி கைத்தொழில் பேட்டை நேற்று உத்தியோகபூர்வமாக திறப்பு



யாழ்ப்பாணம், ஓக. 28
275 மில்லியன் ரூபா செலவில் மீள நிர்மாணிக்கப்பட்ட அச்சுவேலி கைத்தொழில் பேட்டை நேற்று உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இந்தக் கைத்தொழில்பேட்டை முழுமையாகச் செயற்பட ஆரம்பித்த பின்னர் 7 ஆயிரம் பேர் வரையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொழில்வாய்ப்பை பெற்றுக் கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
1971ஆம் ஆண்டு அச்சுவேலிகைத்தொழில் பேட்டை ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின்னர் 1991 ஆம் ஆண்டு போர் காரணமாக அதன் செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டு இதனை மீள ஆரம்பிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.
மீள் நிர்மாணத்துக்காக இந்திய அரசால்

26 ஆம் பக்கம் பார்க்க





எவருக்கு ஆலோசகர்கள்?

பக்கம் 18

## இணைந்து செயற்பட அழைக்கிறது இந்தியா

### கொழும்பு, வடக்கு அரசுகளுக்கு நேற்று விடுத்தார் இந்தியத் தூதுவர்

யாழ்ப்பாணம், ஓக. 28
வடக்கு மாகாண சபையும், இலங்கை மத்திய அரசும் இந்தியாவுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா.
மீளநிர்மாணிக்கப்பட்ட அச்சுவேலிக் கைத்தொழில் பேட்டையின் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. அதில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார். அங்கு வைத்தே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.
"வடக்கு மக்களின் சுபீட்சத்துக்காக, இலங்கையின் மத்திய அரசும், வடக்கு மாகாண சபையும்எங்களுடன்இணைந்து செயற்பட வேண்டும்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது,
"இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் வரலாற்று ரீதி

26 ஆம் பக்கம் பார்க்க

## இலத்திரனியல் அ.அட்டைக்கு வவுனியாவில் எதிர்ப்பு

கொழும்பு, ஓக.28
அரசால் அறிமுகப்படுத்தப் படவுள்ள இலத்திரனியல் அடையாள அட்டைக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னிலை சோசலிசக் கட்சி வவுனியாவின் பல்வேறு இடங்களில் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது.
வவுனியா நகர சந்தை, பஸ் நிலையம், கண்டி வீதி, ஏ-9 வீதி, ஹொரவப்பொத்தான வீதி உட்பட பல்வேறு இடங்களில் இந்தச் சுவரொட்டிகளைக் காணமுடிகின்றது. அரசால் கைவிரல் அடையாளங்களுடன் கூடிய இந்த இலத்திரனியல் அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்படுவதால், இரா

26 ஆம் பக்கம் பார்க்க



அரச மற்றும் தனியார் தொழிற்றுறை ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படவேண்டும் என்று கோரியும், சலுகைகள் பாரபட்சமின்றி வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியும் நேற்று கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## அதிகரிக்கும் தேர்தல் வன்முறைகள்

யாழ்ப்பாணம், ஓக 28
ஊவா மாகாண சபைத் தேர்தல் நெருங்கும் நிலையில் தேர்தல் வன்முறைகள் தொடர்பில் இதுவரை 88 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தெரிவித்துள்ள கபே அமைப்பு, அரச சொத்துக்கள் சட்டவிரோதமாகப் பயன்படுத்துவது அதிகமாகவுள்ளது என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.
நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே இது தொடர்பில் விடுத்துள்ள செய்திக்

26 ஆம் பக்கம் பார்க்க

## நவிப்பிள்ளை போன்றே புதிய ஆணையாளரும் செயற்படுவார்

### நம்பிக்கை வெளியிடுகின்றது சட்டத்தரணிகள் கூட்டமைப்பு

கொழும்பு, ஓக.28
ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் புதிய ஆணையாளர், பதவி விலகும் ஆணையாளர் நவநீதம் பிள்ளையை பின்பற்றிச் செயற்படுவார் என எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ள இலங்கையின் சட்டத்தரணிகள் கூட்டமைப்பு, ஆனால் துரதிர்ஷ்டவசமாக இலங்கை அரசு புதிய மனித உரிமை ஆணையாளர், மனித உரிமை விழுமியங்களுக்கு மாறாகச் செயற்படுவார் என எதிர்பார்க்கின்றது என்று சுட்டிக்காட்டியுள்ளது.
பதவி விலகும் ஆணையாளரை பாராட்டி அந்தக் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது. இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
"இலங்கையில் எதேச்சதிகாரப் போக்கு தென்படுவதையும் பயங்கரவாதம் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களையும் மிகச் சரியாக இனம் கண்டவர் நவநீதம்பிள்ளை. அவர் தனது பணியை எவ்வித அச்சமும் இன்றி நிறைவேற்றினார். மனித உரிமை ஆணையாளரால் சர்வதேச அமைதியை எப்படி ஏற்படுத்த முடியும் என நிரூபித்துக் காண்பித்தார். மனித உரிமை என்பது எல்லைகளுக்கு அப்பாற்பட்ட சர்வதேச விடயம் என்பதை தனது தலைமைத்துவம் மூலம் அவர் உலகத் தலைவர்களுக்குப் புரியவைத்தார். இலங்கைக்கான அவரது பயணத்தை நாங்கள் நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

26 ஆம் பக்கம் பார்க்க

## சந்தேகத்தில் கொள்கலன்கள் தடுப்பு




கொழும்பு, ஓக.28
பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயங்களுடன் இரண்டு கொள்கலன்களை ஒருகொடவத்தை கொள்கலன் களஞ்சிய சாலையில் நேற்றுப் புதன்கிழமை மாலை சந்தேகத்தின் அடிப்படையில் சுங்க அதிகாரிகள் தடுத்து வைத்துள்ளனர் என்று சுங்கத்திணைக்கள ஊடக பேச்சளார் லெஸ்லி காமினி தெரிவித்தார்.
இந்த கொள்கலன்களை திறந்து சோதனையிடுவதற்கு நீதிமன்ற உத்தரவு கிடைக்கும் வரை காத்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ற)

# இலங்கைக்கெதிரான பரப்புரையை முறியடிப்பது தொடர்பில் ஆராய்வு

### தூதுவர்களுடன் நடத்தினார் ஜீ.எல்.பீரிஸ்



கொழும்பு, ஓக.28
இலங்கைக்கு எதிரான பரப்புரைகளில் முக்கிய ஆயுதமாக மனித உரிமை விடயங்கள் பயன்படுத்தப்படுவதை எவ்வாறு முறியடிப்பது என்பது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஐரோப்பிய நாடுகளுக்கான இலங்கைத் தூதுவர்களுடன் கலந்தாலோசித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி ஆகியவற்றின் தூதுவர்கள் மற்றும் ஜெனீவாவுக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஆகியோருடனே வெளிவிவகார அமைச்சர் சந்திப்பை நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பு ரோமில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் நடந்துள்ளது என்று வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
இந்தச் சந்திப்பின்போது இலங்கைக்கெதிரான முக்கிய ஆயுதமாக மனித உரிமை விடயங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு பரப்புரைகள் மேற்கொள்ளப்படுவது தொடர்பிலும், அவற்றை எவ்வாறு முறியடிப்பது என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டதுடன், குறித்த நாடுகளுடனான பொருளாதார உறவுகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



வரலாற்றுப் புகழ் மிக்க தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின் கொடியேற்ற நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அடியார்களின் 'அரோகரா' கோஷத்துடன் மிக பக்தி பூர்மாக நடந்தேறியது. அதில் ஆயிரக்கணக்கான அடியார்கள் குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வந்து கலந்து துர்க்கை அருள் வேண்டினர்.
கொடியேற்றத்தை முன்னிட்டு தெல்லிப்பழை பொலிஸார் முழுமையாக கடமையில் ஈடுபட்டு இருந்ததுடன் வீதிப் போக்குவரத்து கண்காணிப்பையும் மேற்கொண்டிருந்தனர். (ற-86)

# இலஞ்ச ஊழல்களுக்கு எதிராக வடக்கில் 7 மாதங்களில் 929 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, ஓக.28
லஞ்ச ஊழல்களுக்கு எதிரான இலவச சட்ட ஆலோசனை நிலையத்தின் வடபிராந்திய அலுவலகத்தில் 929 முறைப்பாடுகள் கடந்த ஏழு மாதங்களில்கிடைத்துள்ளன என்றுதெரிவித்துள்ளார் வடபிராந்திய இணைப்பாளர் ரவீந்திர டி சில்வா.
நில அபகரிப்பு, இந்திய வீடமைப்புத் திட்டத்தில் முறைகேடுகள், அரச நிறுவனங்களில் ஊழல் மோசடி, நிதிப் பிரச்சினைகள் என்பன வட பகுதி மக்களால் முன் வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ள அவர், இது தொடர்பாக பதிவுசெய்யப்பட்ட முறைப்பாடுகள் கொழும்புதலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.
அரச நிறுவனங்களில் அமைச்சர்களின் செல்வாக்குகளுடன் வேலை வாய்ப்புகள் மற்றும் சலுகைகள் சிலருக்கு வழங்கப்படுகின்றன என்றும், அரசியல் தேவைகளுக்கு ஏற்ப மக்களுக்கு சலுகைள் வழங்கப் படுவதால் ஏனைய மக்கள் பாதிக்கப்படுகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.
கடந்த தை மாதத்தில் இருந்து ஜூலை மாதம் வரை பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளில் அதிகமானவை நில அபகரிப்புத் தொடர்பான முறைப்பாடுகள் என்றும் படையினருக்கு எதிரான அந்த முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன என்றும் ரவீந்திர டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (ற)












அச்சுவேலி கைத்தொழில் பேட்டை திறப்பு விழாவின் சுவாரசிய காட்சிகள்...





நேற்று நல்லூரில் இராணுவத்தினர் விசேட பூசை வழிபாடுகளில் ஈடுபட்டனர். காவடிகளும் எடுத்தனர்.











பக்கங்கள்: இருபத்தெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 12 வியாழன் (28.08.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 276

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதற்கு அரசு தயார்

## சம்பந்தன் இன்னும் கோரிக்கை விடவில்லை என்று குற்றச்சாட்டு



கொழும்பு, ஒகஸ்ட் 28

**தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக்காண்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இருதரப்பு பேச்சுகளை முன்னெடுப்பதற்கு தாம் தயாராக இருப்பதாக அரசு நேற்று அறிவித்தது. அத்துடன், இது விடயம் சம்பந்தமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப் பிடமிருந்து இன்னும் கோரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை எனவும் அது தெரிவித்தது.**

**எனவே, இருதரப்பு பேச்சு சம்பந்தமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முறையாக கோரிக்கை விடுத்தால், அது பற்றி பரிசீலிப்பதற்கு அரசு தயாராகவே இருக்கின்றது [illegible]றும், எனினும், தேசியப் பொறி முறைக்கமையவே அரசின் நகர்வுகள் இடம்பெறும் எனவும் கூட்டணி அரசின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டார்.**

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதில் பங்கேற்று ஊவா மாகாணசபைத் தேர்தல் கள நிலைவரம், அரசின் பரப்புரை வியூகம், சு.கவின் வருடாந்த மாநாடு ஆகியன தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த விளக்கமளித்தார்.

இதனையடுத்து,இடம்பெற்ற கேள்விச்சுற்றின்போது, அரசியல் தீர்வுத் திட்ட விவகாரம் பற்றி ஊடகவியலாளர்களால் அமைச்சரிடம் கேள்விகள் தொடுக்கப்பட்டன.

அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையில் பேச்சு நடத்தப்பட்டு அதில் எட்டப்படும் இணக்கப்பாட்டை ஆராயும் களமாகவே நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைய வேண்டும் என கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. அத்துடன், நாடாளுமன்றத் தெரிவுக்குழு விடயத்தில் அரசும் உறுதியாக இருக்கின்றது. நிலைமை இப்படியிருந்தால் தீர்வு விடயத்தில் இழுத்தடிப்பு மாத்திரம்தானே இடம்பெறும் என்று ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இருதரப்பு பேச்சுக்கு அரசு தயாராக இருக்கின்றது என்ற தகவலை அமைச்சர் வெளியிட்டார்.

அரசியல் தீர்வுத் திட்ட விவகாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரட்டை நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து வருகின்றது. இதற்கு முன்னரும் அரசு கூட்டமைப்புடன் பேச்சு நடத்தியுள்ளது. இருதரப்பு பேச்சுக்கு அரசு என்றுமே எதிர்ப்

(26ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர் மீது இரும்பினால் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஒக. 28

இரும்பினால் தாக்கப்பட்ட இளைஞர் ஒருவர் தலை மற்றும் கழுத்துப் பகுதியில் காயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். யாழ். குருநகரில் நேற்று மதியம் இந்தச் சம்பவம் வீதியில் வைத்து இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த சண்முகதாசன்.டெனிஸ்ரன் (வயது 17) என்பவரே தாக்குதலில் காயமடைந்தார். மது போதையில் சென்ற ஒருவரே தன்னைத் தாக்கியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். முள் போன்ற இரும்பு ஒன்றினால் தான் தாக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார். (த-4)

## அச்சுவேலியில் நேற்றுத் தரையில் அமர்த்தப்பட்ட அதிகாரிகள், மக்கள்

யாழ்ப்பாணம், ஒக. 28

மாவட்டச் செயலக அரச அதிகாரிகள், பிரதேச செயலாளர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் அச்சுவேலி கைத்தொழில் பேட்டைத் திறப்பு விழாவுக்கு நேற்று அழைத்துச் செல்லப்பட்டு நிலத்தில் அமர விடப்பட்டனர்.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. இதில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பங்கேற்றிருந்தார்.

இந்த நிகழ்வுக்காக யாழ்.

(26ஆம் பக்கம் பார்க்க)



## ஒக்ரோபர் முற்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு ரயில்

### இந்தியத் தூதுவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக. 28

ஒக்ரோபர் மாத ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்ப்பதாக இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹா யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுத் தெரிவித்தார்.

அத்துடன் புனரமைக்கப்பட்டு வரும் யாழ். மத்திய ரயில் நிலையத்தையும் தூதுவர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ஆகியோர் பார்வையிட்டனர்.

வடபகுதிக்கான ரயில் பாதைப் புனரமைப்பு நடவடிக்கைக்கு இந்திய அரசு உதவி

(26ஆம் பக்கம் பார்க்க)

## மோடியுடனான பேச்சால் கூட்டமைப்புக்கே பாதகம்

### அமைச்சர் வாசு தெரிவிப்பு



கொழும்பு, ஒக. 28

இலங்கை அரச தரப்பைப் புறக்கணித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் டில்லிக்கு பயணம் மேற்கொண்டு இந்தியப் பிரதமர் மோடியுடன் பேச்சு நடத்தியமையானது, அவர்களுக்கே பிரதிகூலமாக அமையும் என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப் பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக் கார 'உதயனு'க்கு வழங்கிய விசேட செவ்வியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

"இந்தியப் பிரதமர் மோடி 13ஆவது திருத்தம் தொடர்

(26ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய துணைத் தூதருக்கு யாழில் நேர்ந்த சோதனை

யாழ்ப்பாணம், ஒக. 28

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொள்ளச் சென்ற இந்தியத் தூதரகத்தின் யாழ்.துணைத் தூதர் எல்.கே. மூர்த்தி உடற் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

நேற்றைய தினம் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் புதிய கட்டுமானத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். குறித்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதுவர் எல்.கே. மூர்த்தி விளையாட்ட அரங்குக்குச் சென்றபோது அவரை அரங்க நுழைவாயிலில் நின்ற இராணுவத்தினர் உடற் பரிசோதனைக்கு உட்படுத்தியே உள்ளே செல்ல அனுமதித்தனர்.

இவர் இவ்வாறு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டமை விளையாட்டரங்கில் நின்ற ஏனைய அதிகாரிகளை ஆச்சரியம் அடையச் செய்தது. சில அதிகாரிகள் உடற்பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-7)

## சீனாவில் தங்கியிருக்கும் நிலைமை இலங்கைக்கு

### இழப்புகள் குறித்து எச்சரிக்கை

கொழும்பு, ஒக.28

இலங்கை, சீனாவிடமிருந்து அதிகளவு நிதியுதவிகளைப் பெறுவதால் அந்த நாட்டில் தங்கியிருக்க வேண்டிய நிலை உருவாகி வருகிறது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு இதனால் பெரியளவு நன்மைகள் எதுவுமில்லை. மாறாக அவதானமாக இல்லாவிட்டால் பெருமளவு இழப்புகள் ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுகுறித்து அல்ஜசீரா தொலைக் காட்சி தெரிவித்துள்ளதாவது,

உள்நாட்டு யுத்தம் 2009 இல் முடிவடைந்த காலம் முதல் இலங்கை பெருமளவு நிதிக்காக சீனாவில் தங்கியிருக்கும் நாடாக மாறியுள்ளது. 4 பில்லியன் டொலர் வரை அந்த நாடு நிதியுதவி வழங்கியுள்ளது. இலங்கைக்கு மிகவும் அவசியமாகவுள்ள உட்கட்டமைப்புத் திட்டங்கள் சாத்தியமாவதற்கு அந்தக் கடன்கள் உதவியுள்ளதாக அரசு தெரிவிக்கும் அதே வேளை, நாடு சீனாவை நம்பியிருக்க வேண்டிய நிலை உருவாக்கப்படுவதாக எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் எச்சரிக்கின்றனர்.

அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம் உட்பட 70 வீதமான உட்கட்டமைப்பு வசதிகளுக்கான நிதியுதவியை சீனாவே வழங்கியுள்ளது. உலகவங்கி, சர்வதேச நாணயநிதியம் போன்றவை போல இல்லாமல் சீனா நிபந்தனையின்றி கடன்வழங்குகின்றது என சுட்டிக்காட்டும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்

(26ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வேலையாள்கள் தேவை

மர அரிவு நிலையத்துக்கு அனுபவம் மிக்க வேலையாள்கள் உடன் தேவை.
தொடர்பு: 078 896 7168 (47259) (10.6.3)

## TVகள் மலிவு விற்பனை

Sony, பனசோனிக் TVகள் 29" - 16000/=, 21" - 15000/= முதல், 14" - 9500/= ரேடியோ கசெற் 2500/= DVD - 2950/=, DTS அம்பிளிபயர் குளிர்சாதனப் பெட்டிகள் - 22000/=
தொடர்பு: 077 044 0570
சோனி ரேட்றசென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்)
56, K.K.S வீதி, சுன்னாகம். (51279) (12.3.6)

## வேலையாள் தேவை

மேசன், கூலி ஆள்கள் தேவை:
தொடர்பு: (51283) (10.6.3)
077 634 7251, 077 146 3187

## விற்பனைக்கு

32 H/P Black Ston என்ஜின் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 331 9949 (47260) (10.6.3)

## பொது மக்களுக்கான அறிவித்தல்

**பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள்**

(31.07.2014 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. அமானா பாங்க் லிமிடெட்
4. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
5. இந்தியன் பாங்க்
6. இலங்கை வங்கி
7. எம்சிபி பாங்க் லிமிடெட்
8. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
9. ஹபிப் பாங்க் லிமிடெட்
10. கார்கில்ஸ் பாங்க் லிமிடெட்
11. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
12. சம்பத் பாங்க் பிஎல்சி
13. சிற்றி பாங்க் என்ஏ
14. செலான் பாங்க் பிஎல்சி
15. டீஎவ்சீசீ வர்தன பாங்க் பிஎல்சி
16. டொயிச் பாங்க் ஏஜி
17. த ஹொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
18. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
19. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
20. பப்ளிக் பாங்க் பெர்காட்
21. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
22. மக்கள் வங்கி
23. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
24. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்
25. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. இந்திரா பினான்ஸ் லிமிடெட்
6. ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிடெட்
7. எம்சிஎஸ்எல் பினான்ஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்
8. எல் பீ பினான்ஸ் பிஎல்சி
9. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
10. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
11. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
12. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
13. ஒரியன்ட் பினான்ஸ் பிஎல்சி
14. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
15. கப்பிட்டல் எலையன்ஸ் பினான்ஸ் பிஎல்சி
16. கொமர்ஷல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
17. கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
18. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
19. சிலோவ் பினான்ஸ் பிஎல்சி
20. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
21. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
22. சியபத பினான்ஸ் லிமிடெட்
23. சிற்றிசன்ஸ் டிவலொப்மென்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
24. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி*
25. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
26. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
27. சொவ்றலொயிக் பினான்ஸ் பிஎல்சி
28. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
29. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
30. த ஸ்ரான்டட் கிறடிற் பினான்ஸ் லிமிடெட்
31. தேசோதய டெவலப்மென்ட் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
32. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
33. ப்ரெக் லங்கா பினான்ஸ் பிஎல்சி
34. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
35. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
36. பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
37. பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
38. பீப்பிள்ஸ் மர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
39. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
40. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
41. மெல்ஸ்டா ரீகல் பினான்ஸ் லிமிடெட்
42. யூ பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
43. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
44. ரிச்சர்ட் பீரிஸ் ஆர்பிகோ பினான்ஸ் லிமிடெட்
45. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
46. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
47. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் ஸர்விஸஸ் பிஎல்சி
48. ஜோர்ஜ் ஸ்டுவர்ட் பினான்ஸ் பிஎல்சி

* இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவரினால் முகாமைத்துவம் செய்யப்படுவதுடன் மீள்கட்டமைப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. அதே வேளை, வைப்புக்களைத் திரட்டுதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளில் சில தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒருங்கிணைப்பு செயற்பாட்டின் கீழ் இணைக்கப்பட/கையகப்படுத்தப்பட/உட்கொள்ளப்பட இருக்கின்றன. இது குறித்து பொதுமக்களுக்கு அறியத் தருவது என்னவென்றால் இந்த ஒருங்கிணைப்பு செயற்பாடானது மேற்கூறப்பட்ட வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளுடனான உங்களது தற்போதைய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வைப்புக்களை எந்தவகையிலும் பாதிக்காது என்பதாகும்.

### நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

- மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மேலுள்ள ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

**இலங்கை மத்திய வங்கி**

வங்கிகள் - தொ.பேசி: 2477100, 2477105, 2477120, 2477129 தொலைநகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk
நிதிக் கம்பனிகள் - தொ.பேசி: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk

## மது விலக்கல் பரப்புரை கருத்தமர்வும் கற்றல் சாதனங்கள் வழங்கலும்

யாழ்ப்பாணம், ஓக.28
வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனமும் யாழ். றோட்டறிக் கழகமும் இணைந்து நடத்தும் கிராம மட்டத்திலான மது விலக்கல் பரப்புரை கருத்தமர்வும் கல்வி உபகரணங்கள் வழங்கலும் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு சங்கானை ஓடக்கரை அறிவகம் சனசமூக நிலையத்தில் நிலையத் தலைவர் கு.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளன.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட றோட்டறிக் கழகத் தலைவர் சி.அனுராஜ், சிறப்பு விருந்தினர்களாக வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் க.புஸ்ராசா, ஹெல்திலங்கா பிராந்திய இணைப்பாளர் ஆர்.சிவநாயகம் ஆகியோர் கலந்து கொள்வர். (வ)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அறிவித்தல்

க.பொ.த. உ/த மாணவர்களுக்கான வகுப்புக்கள் மட்டும் 15.09.2014 (திங்கள்) அன்று ஆரம்பமாகும். (f/16181) (4.6.3)
ஏனைய வகுப்புக்கள் 01.09.2014 அன்று ஆரம்பமாகும்.
28.08.2014 அதிபர்.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம்மா செல்லத்துரை



புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் திசைமழையை வசிப்பிடமாகவும் தற்போது புத்தூர் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா செல்லத்துரை நேற்று (27.08.2014) புதன்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், இராசமணி, செல்வமணி, காலஞ்சென்ற இரத்தினசிங்கம் (ஓய்வுபெற்ற படவரைஞர் நில்அளவை பகுதி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, புஸ்பராணி ஆகியோரின் மைத்துனியும், Dr. சண்முகதாசன் (வைத்திய கலாநிதி, லண்டன்), விமலதாசன், நிர்மலா (கொழும்பு), உமாசங்கர் (பொறியியலாளர் -லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், Dr.தனலட்சுமி (வைத்திய கலாநிதி - லண்டன்), வசந்தாதேவி, மயில்வாகனம் (ஓய்வுநிலை பட வரைஞர், மகாவலி அபிவிருத்திச் சபை), சுமதி (பொறியியலாளர் - லண்டன்), ரஞ்சித்குமார், சதீஸ்குமார், சோ[illegible] தர்சனா ஆகியோரின் மாமியும், சினேஷ், லிலோஜன், கார்த்திகா, ஷஜீபன், மயூரன், அர்ச்சுன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2014) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக அந்திரானை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
புத்தூர் கிழக்கு,
புத்தூர். (51282) (45.6.3)
தொ.பே. 021 320 2223

## முதியோர் பராமரிப்பு

நோயுள்ளவர், நோயற்றவர்கள் பராமரிக்கப்படுவார்கள். (47258) (12.3.6)
தொடர்பு: 077 239 3751

## மலிவு விற்பனை

றோஸ் 120/=, பேபி றோஸ், மார்கழிச் செவ்வந்தி 70/=, செவ்வரத்தை, மொசந்தாஸ், சைப்ரஸ், இன்னும் பல இனக் கன்றுகள் 60/= (30.08.2014 வரை மட்டுமே.)
தொடர்பு: யாழ்.அக்கறியார் (51178) (4.6.3)
தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். 077 707 0711

## தவறிவிட்டது

வெள்ளை நிற 5S, iphone கடந்த வாரம் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு மாலை C.T.B பஸ்ஸில் பயணிக்கும்போது தவறிவிட்டது. கண்டெடுத்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். இதனை எவரும் பாவிக்க முடியாது. (51280) (12.3.6)
தொடர்பு: 077 805 4884/077 654 4425
39, இராசாவின்தோட்ட வீதி, யாழ்ப்பாணம்.

## 2 மணித்தியாலத்தில் கணினி திருத்தம்

உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்
0779086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.

## 31ஆம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

மலர்வு 31.03.1961
உதிர்வு 30.07.2014



கடந்த 30.07.2014 புதன்கிழமை சிவபதமடைந்த
எமது சிரேஷ்ட புத்திரி

**செல்வி கந்தசாமி பவானி**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள்
இன்று (28.08.2014) வியாழக்கிழமை காலை 7 மணியளவில்
கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக்
கிரியைகள் நாளை (29.08.2014) வெள்ளிக்கிழமை
முற்பகல் 11 மணியளவில் அன்னாரின்
இல்லத்திலும் நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்,
அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிபோசன நிகழ்விலும்
கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
280ஆவது கி.மீ.கட்டை,
A9 வீதி, வண்ணாங்கேணி, பளை.

(51281)(7.6.3)

## கல்வித்துறை பிரச்சினைகள் குறித்து கோரிக்கைகளை அனுப்பலாம்

யாழ்ப்பாணம், ஓக.28
யாழ். மாவட்டத்தில் காணப்படுகின்ற கல்வித்துறை தொடர்பான தேவைகள், பிரச்சினைகள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களது கோரிக்கைகளை எதிர் வரும் முதலாம் திகதிக்கு முன்பாக இணைப்பாளர், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் அலுவலகம், யாழ். மாவட்டச் செயலகம் (அறை இல. 42) என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்குமாறு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் அறிவித்துள்ளார். (வ)

## சதுர்த்தியை முன்னிட்டு விநாயகர் ஊர்வலம்

யாழ்ப்பாணம்,ஓக.28
விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு ஈழத்து சபரிமலை ஐயப்பன் ஆலயத்தில் இந்தியாவில் கொண்டாடப்படுவது போன்று [illegible]திய ஸ்தபதிகளைக்கொண்டு பிரமாண்டமான விநாயகர் சிலை உருவாக்கப்பட்டு இன்று தொடக்கம் மூன்று தினங்கள் உரிய முறைப்படி பூசைகளும் தினமும் ஊர்வலமும் நடைபெறவுள்ளன. யாழ்ப்பாணத்திலுள்ள பல பகுதிகளூடாக விநாயகர் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு 3 ஆம் நாள் கடலில் விநாய கரைக் கரைக்கும் நிகழ்வு இடம்பெறும். (வ)

# இளைஞர்களுக்கான சுயதொழில் உற்பத்திக்கு வட்டியில்லாக் கடன்

யாழ்ப்பாணம், ஓக.28
யாழ். மாவட்டத்தின் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நிஸ்கோ பிரிவினால் 18-29 வயதுக்கு உட்பட்ட சுய தொழிலை மேற்கொள்ளத் தயாராகவுள்ள இளைஞர், யுவதிகளுக்கு வங்கிகளினூடாக குறைந்த வட்டியில் கடன் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது. வங்கிக்கடன் பெறவிரும்பும் இளைஞர், யுவதிகள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தொழிற் பயிற்சி அதிகாரசபை, தேசிய பயிலுனர் அதிகாரசபை ஆகியவற்றில் தொழிற்பயிற்சி பெற்றவர்களாய் இருத்தல் வேண்டும்.
கடனைப் பெற விரும்புவோர் தாமாகத் தயாரித்த சுயவிவரக் கோவை, தொழிற்பயிற்சி சான்றிதழ் பிரதி, பிறப்புச் சான்றிதழ்பிரதி, தேசிய அடையாள அட்டை பிரதி என்பவற்றை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பொது முகாமையாளர், நிஸ்கோ, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இல.28 கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். (வ)

## வறிய மாணவர்களுக்கு கற்றல் சாதனங்கள்

தென்மராட்சி,ஓக.28
மீசாலை வடக்கைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும்குடும்பங்களைச்சேர்ந்த மாணவர்களுக்குக் கற்றல் உப கரணங்கள் வழங்கும் திட்டத் தின் முதற்கட்டமாக 20 மாணவர்களுக்கு கற்றல் உப கரணங்கள் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மீசாலை வடக்கு சுடர்ஒளி சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.
சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் அ.பாலமயூரன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் கு. தனுஷன் ஆகியோரின் ஏற்பாட்டில் மீசாலை வடக்குப் பகுதி இளைஞர்களின் நிதிப்பங்களிப்புடன் கொள்வனவு செய்யப்பட்ட கற்றல் உபகரணங்கள் வறிய மாணவர்களுக்கு வழங்கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## சந்தேகத்துக்கிடமாக நடமாடியவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது

கரணவாய், ஓக.28
அதிகாலை வேளை துன்னாலைப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய ஒருவரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
திங்கட்கிழமை அதிகாலை நெல்லியடி பொலிஸார் வீதி ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த வேளை சந்தேகத்துக்கிடமான முறையில் துன்னாலைப் பகுதியில் நடமாடிய குறித்த நபரைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து சுத்தியல், குறடு என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றினர்.
கைது செய்யப்பட்ட நபரை பருத்தித்துறை மாவட்ட நீதி மன்றில் நீதிபதி கே.கஜநிதி பாலன் முன்னிலையில் முற்படுத்தியபோது அவரை எதிர் வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
இதேவேளை குறித்த நபர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வல்வெட்டித்துறைப் பகுதியில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவமொன்று தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டு விடுவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-108)

## இந்திய வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவு நிறைவுக்கு வந்தது

### கரவெட்டி பிரதேச செயலர் தெரிவிப்பு

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் இந்திய வீட்டுத்திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவு நிறைவடைந்துள்ளதாக பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ தெரிவித்துள்ளார்.
கடந்த காலப் போர் இடர்களால் இடம்பெயர்ந்து மீள் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு சுமார் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் வீடுகள் அமைக்கும் பணிக்கான பயனாளிகள் தெரிவு கரவெட்டிப் பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்பட்டு அதன் பணிகள் நிறைவடைந்துள்ளன.
இதன் அடிப்படையில் உடுப்பிட்டி வடக்கில் சுமார் 51 குடும்பங்கள் இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகள் பெறத் தெரிவு செய்யப் பட்டுள்ளன. இதற்குரிய நிதி கிடைத்ததும் வீடமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (வ-108)

## ஆன்மிகச் சொற்பொழிவு

வடமராட்சி, ஓக.28
தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயில் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் விசேட ஆன்மிக நிகழ்வுகள் வரிசையில் நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'நலம் தரும் நம்பிக்கை' என்ற தலைப்பில் ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் சி.நவரத்தினமும், 30 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வேலோடும் விளையாடும் வேலவன் என்னும் தலைப்பில் பண்டிதர் சி.வேலாயுதமும் சொற்பொழிவு ஆற்றுவார்கள். (வ-173)

★ ★ ★

தென்மராட்சி, ஓக.28
சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் (புலுட்டையன் பிள்ளையார்) ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு ஆசிரியர் பா.விக்னேஸ்வரன் 'ஆறுமுக நாவலரின் தமிழ்ப்பணி' என்னும் தலைப்பில் ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.
ஆலயத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் ஆன்மிகச் சொற்பொழிவுகள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)

## சமய சந்திகளில்

பளை, ஓக.28
இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலய அலங்காரத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் இடம்பெறும். எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் 8ஆம் திகதி ஆழியவளை கடலில் சமுத்திரத் தீர்த்தமும், 9ஆம் திகதி கேணித் தீர்த்தமும் இடம்பெறும். (ஓ-9)

★ ★ ★

அளவெட்டி, ஓக. 28
அளவெட்டி கும்பழாவளை ஸ்ரீ காளியம்பாள் ஆலயத்தில் கும்பாபிஷேக தின அலங்கார உற்சவ நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி மு.ப. 10 மணிக்கு விசேட பூசைகள் ஆராதனைகளுடன் ஆரம்பமாகி 108 சங்காபிஷேகமும் இடம்பெறும். (ஓ-36)

## முன்பள்ளிக் கட்டடத்துக்கு மீசாலையில் அடிக்கல்

தென்மராட்சி, ஓக.28.
மீசாலை வடக்கு வீனஸ் சனசமூக நிலைய வளாகத்தில் முன்பள்ளி கட்டடம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நிலையத் தலைவர் தலைமையில் இடம்பெற்றது. சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, உறுப்பினர் அ.பாலமயூரன் ஆகியோர் முன்பள்ளிக் கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டு வைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக.28
வலி. தென்மேற்கு கலாசாரப் பேரவைக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு வலி. தென்மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இந்தக் கூட்டத்தில் கலைஞர்கள் மற்றும் ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ)

◆◆◆

தென்மராட்சி, ஓக.28
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (வ-9)


## மரண அறிவித்தல்



### திருமதி அன்னலட்சுமி சங்கரப்பிள்ளை

V.C.லேன் பெரியாவுடை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், தற்போது கொட்டைக்காடு லேன், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி சங்கரப்பிள்ளை 25.08.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - முத்துமாணிக்கம் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற முருகேசு சங்கரப்பிள்ளை (முன்னாள் வர்த்தகர், மாவத்தகம, குருநாகல், ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ், சுன்னாகம்) அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற முருகேசு - செல்லம்மா தம்பதியரின் மருமகளும், செல்வமலர், ஸ்ரீஸ்கந்தராஜா (UK), தவமலர் (UK), சிவராஜா (சுவிஸ்), சுகிர்தமலர், பத்மராஜா (ஆசிரியர், வீமன்காமம் ம.வி, தெல்லிப்பழை), கிருஸ்ணராஜா (பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) ஆகியோரின் அருமைத் தாயும், ஆனந்தகுமாரசாமி (ஜெயா), சிவாஜினி (ஆசிரியர், மயிலிட்டி வடக்கு, கலைமகள் ம.வி), கிருபாகரன் (UK), யோகவல்லி (ஆசிரியர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை), கந்ததர்ஷினி (ஆசிரியர், மெய்கண்டான் ம.வி, இளவாலை) ஆகியோரின் அருமை மாமியும், காலஞ்சென்ற செல்வலக்சுமி மற்றும் செல்வராசா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற முருகேசு, பவானி மற்றும் இராமச்சந்திரன் (ஆஸ்திரேலியா), இராமேஸ் (ஜேர்மனி), இராதா (கனடா) ஆகியோரின் மைத்துனியும், இராகவன் (மாணவன், இந்து ஆரம்பப்பாடசாலை), யதுஷிகா, கிசோராம் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2014) வியாழக்கிழமை ந.ப.12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கீரிமலை செம்பொன்வெளி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"மலரகம்",
[illegible]க்காடு லேன்,
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்.
077 958 7334
077 262 7861
021 205 3924

(51269)
(12.3.6)

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



தம்பியப்பா
தெட்சணாமூர்த்தி
(மண்டைதீவு)
(முன்னாள் உதவித்திட்டமிடல் பணிப்பாளர்)

தோற்றம் 1943 . 03 . 10
மறைவு 2009 . 08 . 28

ஆண்டுகள் உருண்டாலும்
அழியாது உம் நினைவுகள்.
நினைவில் வாழும்
குடும்பத்தினர்.
(சரவணை)
63. இராணி வீதி, நல்லூர்.

[3126714.3.6]

## 10 ஆம் ஆண்டு நினைவுகளுடன்



மண் மகிழ
17.07.1940

மனம் நெகிழ
18.08.2004

திதி : திருதியை
28.08.2014 வியாழன்

### அமரர் பொன் நடேசன் (ஓய்வுபெற்ற அதிபர்)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்ததினால் வானுறையும் தெய்வமாகினீர்"

கனவானாக எம்மை எல்லாம் வழி நடத்திச் சென்றீரே!
இவ்வுலகில் மகளாக, உடன்பிறப்பாக, நண்பனாக
நல் ஆசிரியனாக, கனவானாக, தந்தையாக பெறுவதற்கு
என்ன தவம் செய்து விட்டோம் என நினைக்கின்றோம் ஐயா!
நீங்கள் எம்மை எல்லாம் விட்டு ஓடி மறைந்தது நீதியில்லை
நித்தம் நித்தம் நொந்து வாடும் விதியை கடவுள் எங்களுக்கு ஏன் அளித்தாரோ?
மகள்: எனக்குத் தேவையானவற்றை எல்லாம் பார்த்துப் பார்த்துச் செய்தீர்களே அப்பா!
ஆனால் முக்கியமான ஒன்றை உங்களால் தேர்ந்தெடுக்க முடியாமல் போய்விட்டதை
நினைக்கும் போதெல்லாம் என் மனம் படும் வேதனையை அறிவீர்களோ?

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அண்ணா வீதி, அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

(சி/16192)(5.6.3)

# வீட்டுத் திட்டத்துக்கு தேவையான மரங்களை பெறுவதில் இடர்கள்

## தென்னியங்குளம் மக்கள் விசனம்

முல்லைத்தீவு, ஓக.28
துணுக்காய் தென்னியங்குளம் கிராமத்தில் வீட்டுத் திட்டத்துக்கான மரங்களை பெறுவதில் தாம் இடர்களை எதிர்கொண்டுள்ளதாக நிரந்தர வீடமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.
துணுக்காய் பிரதேச செயலரின் அனுமதி பெற்றுள்ள போதும் மரங்களைப் பெறுவதில் இடர்களை எதிர்கொண்டுள்ளதாகவும், குறிப்பாக தென்னியங்குளம் கிராமத்தில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்டு பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படாதுள்ள 200 ஏக்கர் வரையான நிலப் பரப்பிலுள்ள மரங்களை வெட்டியெடுப்பதற்கு இராணுவம் அனுமதிக்கவில்லையெனவும் மக்கள் கூறுகின்றனர்.




இது தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலரிடம் கேட்ட போது, தற்போது மக்கள் குடியிருக்கும் காணிகளிலுள்ள மரங்களை வெட்டி வீடுகளுக்குப் பயன்படுத்தமுடியும்.
ஆனால் மக்கள் குடியிருப்பில்லாத காணிகளிலுள்ள மரங்களை வெட்டுவதற்கு அனுமதியில்லை.
மரங்கள் தேவையானவர்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்களிடம் அனுமதி பெற்றே மரங்களை வெட்ட முடியும் எனவும் தெரிவித்தார். (த-18)

## அக்கராயன்குளம் பகுதியில் கசிப்பு விற்பனை அதிகரிப்பு

கிளிநொச்சி, ஓக .28
கிளிநொச்சி அக்கராயன் குளம் பகுதியில் கசிப்பு விற்பனை அதிகரித்து காணப்ப டுவதாகவும் அதனைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கிளிநொச்சி அக்கராயன் குளம் பிரதேசத்துக்குட்பட்ட சுபாஸ் குடியிருப்பு, கெங்காதரன் குடியிருப்பு, மணியங்குளம், அணைக்கட்டு வீதி ஆகிய பகுதிகளில் என்றுமில்லாதவாறு கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை அதிகரித்துக் காணப்படுகின்றது.
அத்துடன் இவ்வாறான சட்ட விரோத மதுபான விற்பனை மற்றும் உற்பத்தியினால் இந்தக் கிராமங்களில் வேறு இடங்களைச் சேர்ந்த முகம் அறியாதவர்களின் நடமாட்டம் காணப்படுகின்றது என்றும், வேறு இடங்களில் இருந்து வருபவர்களால் பல்வேறு குற்றச்செயல்கள் இடம்பெறும் அபாயநிலை காணப்படுகின்றது என்றும், இந்தப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.
உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனமெடுத்து குறித்த கிராமங்களில் இடம்பெற்று வரும் சட்டவிரோத மதுபான உற்பத்தி மற்றும் விற்பனையைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-55)

## அக்கராயன் கமநல சேவை கட்டடத்துக்கு அடிக்கல்


கிளிநொச்சி,ஓக.28
கிளிநொச்சி அக்கராயன் கமநலசேவை நிலையத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக் கல் நாட்டும் நிகழ்வு கடந்த 25ஆம் திகதி மு.ப. 10 மணியளவில் நடைபெற்றது.
கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.தயாரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வடக்கு மாகாண கமநல அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் ம.பற்றிக் நிரஞ்சன் ஆகியோர் கலந்துகொண்டு புதிய கட்டடத்துக்கான அடிக்கல்லை நாட்டினர். 8 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-18)



கிளிநொச்சி அக்கராயன் கமநல சேவை நிலையம் போரினால் சேதமடைந்த நிலையில் இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறது. (த-420)

## பப்பாசிச் செய்கையாளரை பதிவு செய்யக் கோரிக்கை

வவுனியா, ஓக.28
வவுனியா மாவட்டத்தில் பப்பாசிப் பயிர்ச் செய்கையாளர்களை விவசாய திணைக்களத்தில் பதிவை மேற்கொள்ளுமாறு பிரதி விவசாயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.
வவுனியாவில் பப்பாசிப் பயிர்ச் செய்கையாளர்களை ஊக்குவிக்கும் முயற்சியில் வவுனியா விவசாயத் திணைக்களத்தினர் ஈடுபட்டுள்ளனர்.
கடந்த ஆண்டில் இருந்து பப்பாசிப் பயிர்ச் செய்கையாளர்களுக்குப் பயிற்சி வழங்குவதில் விவசாயத் திணைக்களத்தினர் பெரும் பங்கு வகித்தனர். இதன்பிரகாரம் வவுனியாவில் பெருமளவான விவசாயிகள் பப்பாசிச் செய்கையில் ஈடுபட்டனர்.
இதன்மூலம் பெரும் இலாபம் ஈட்டினர். கடந்த மாதம் முதல் பெருமளவான பப்பாசிப் பழங்கள் கடைகளில் விற்பனை செய்யப்படாமல் தேங்கிக் கிடந்தன.
இதனால் பெருமளவான விவசாயிகள் நட்டத்தை எதிர்கொண்டனர்.
இவர்களது நலன் கருதிப் பப்பாசிப் பழங்களைச் சந்தைப்படுத்த வவுனியா விவசாயத் திணைக்கள பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி அ.சகிலா பானு நடவடிக்கை எடு[illegible] முன்வந்துள்ளார்.
திங்கள் முதல் வெள்ளிவரை அலுவலக நேரத்தில் பப்பாசிச்



செய்கை யில் ஈடுபடும் பயி[illegible] செய்கையாளர்கள் வவுனி[illegible] விவசாயத் திணைக்களத்தில் பதிவை மேற்கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (த-402)

## நெடுங்கேணி, கற்குளம் பகுதிகளில் காட்டு யானைகளினால் தொல்லை

வவுனியா, ஓக.28
வவுனியா, நெடுங்கேணி, கற் குளம் பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதனால் தாங்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.



கடந்த காலங்களை விடத் தற்போது வவுனியா மாவட்டத்தின் நெடுங் கேணி, கற்குளம், மாறா யிலுப்பை, மருதோடை ஆகிய பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லை கடந்த காலங்களை விட அதிகரித்திருப்பதாகவும், இதனால் தாங்கள் அச்சத்துடன் வாழ வேண்டியிருப்பதாகவும் இந்தப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.
இதேவேளை-பெருமளவான பயன்தரும் மரங்களும் காட்டு யானைகளால் அழிக்கப்படுவதாகவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (த-55)


### கண்ணீர் அஞ்சலி

யாழ் போதனா வைத்தியசாலை
கண்ணியல் பிரிவில் கடமையாற்றும் ந.ஜெயரட்ணராஜா அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி நடராஜா நாகம்மா
அவர்களின் மறைவினால் துயர் அடைந்துள்ள அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
கண்ணியல் பிரிவு
போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம். (51284)(7.6.3)



### மரண அறிவித்தல்

#### முருகேசு மகாலிங்கம்



இராஜகாரியர் வீதி, மானிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு மகாலிங்கம் 27.08.2014 புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-பார்வதி அம்மா தம்பதியரின் அன்பு மகனும், வசந்தராணியின் அன்புக் கணவரும், நிதர்ஷனின் பாசமிகு தந்தையும், பரமேஸ்வரி பாலசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர், இ.போ.ச. மன்னார்), புவனேஸ்வரி (சுவிஸ்), இராஜேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பொன்னுத் துரை மற்றும் சண்முகராசா (சுவிஸ்), வசந்தநாதன் (பிரான்ஸ்), சரஸ்வதி ஆகியோரின் மைத்துன ரும், ரவீந்திரன் (ஜேர்மனி), ஜதுர்ஷன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனும், விதுர்ஷனின் (ஜேர்மனி) அன்புப் பேரனும், அரிகரன் (பிரான்ஸ்), அலைமதி (பிரான்ஸ்), அருள்கரன் (உள்ளக கணக் காய்வாளர், முல்லைத்தீவு மாவட்ட செயலகம்), அருள்மதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2014) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இங்ஙன அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராஜகாரியர் வீதி, மானிப்பாய். (51286)(7.6.3)
தகவல்: பா.அருள்கரன் (பெறாமகன்)


## மோ.சைக்கிள்- ஓட்டோ மோதி பெண் உட்பட இருவர் காயம்

வவுனியா, ஓக.28
வவுனியா ஏ-9 வீதி சாந்தசோலைச் சந்தியில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் பெண் உட்பட இருவர் காயங்களுக்குள்ளாகி வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
மேட்டார் சைக்கிளும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதியே இந்த விபத்து ஏற்பட்டது.
விபத்தில் எஸ்.சாரங்கன், என்.ஜெயசூரியா ஆகியோரே காயமடைந்ததாகத் தெரியவருகின்றது.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-421)


### தேவை

டாட்டா (TATA), பட்டா (Badda) அலுமினிய Full Body உடன் தேவை. ஏனைய வடி ரக Full Body உடன் வாகனங்கள் விற்க விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.
விற்பனை உதவியாளரும் தேவை. (51285)(12.3.6)
தொடர்பு:077 978 9223/021 205 2200



### BECON

உயர்தர தொழில்நுட்பத்துறை மாணவர்களுக்கான மாபெரும் அளவையியல்(SURVEYING) கருத்தரங்கு.
முற்றுமுழுதான பாடக்குறிப்புக்கள் செயன்முறைகள்.
காலம்: 29.08.2014 வெள்ளிக்கிழமை
நேரம்: 8.00 - 5.00
ஆசிரியர்: Mr.T.Ram
இடம்: BEACON
தொடர்பு: 077 842 9817 (49751)(12.3.6)
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.



### அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 31.07.2014 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது தந்தையார்
அமரர் கதிரிப்பிள்ளை கதிரவேலு
(MASTER)
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகளும் 30.08.2014 சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நவஜீபவன்
அல்[illegible] கிழக்கு, அல்வாய்.
குடும்பத்தினர்.
(C/16194)(10.6.3)



போர் நிறுத்த அறிவித்தலை அடுத்து காஸா நகரத்தில் பலஸ்தீனியர்கள் மகிழ்ச்சியைக் கொண்டாடியபோது... (வ)

## எரிபொருள் தீர்ந்தது வெடித்துச் சிதறும் நிலையில் செயற்கைக் கோள்!

வொஷிங்டன், ஒக.28
எரிபொருள் தீர்ந்து போனதால் நாஸாவின் செயற்கைக் கோள் ஒன்று வானில் வெடித்துச் சிதறும் நிலை ஏற்பட்டுள்ளது. எனினும், இதனால் பூமிக்குப் பாதிப்பு எதுவும் இருக்காது என்று நாஸா தெரிவித்துள்ளது.
1997ஆம் ஆண்டு அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாஸாவிலிருந்து மழைப் பொழிவின் அளவு பற்றி அறிவதற்காக செயற்கைக் கோள் தி டிராபிக்கல் ரெயின் பால் மெஷரிங் மிஷன் (டி.ஆர்.எம்.எம்.) என்ற செயற்கைக் கோள் அனுப்பப்பட்டது. இது விண்வெளி ஆராய்ச்சி வரலாற்றில் பல சாதனைகளைப் படைத்துள்ளது. குறிப்பாக, இதுவரை மழைகால சூறாவளிகள், வெள்ளம், நிலச்சரிவு மற்றும் வறட்சி போன்றவற்றை மிகத் துல்லியமாக பல முறை கணித்துத் தந்திருக்கிறது. 3 ஆண்டுகளுக்கு மட்டுமே செயற்படும் விதத்தில் அனுப்பப்பட்ட இந்தச் செயற்கைக் கோள் தற்போது 17 ஆண்டுகளை விண்வெளியில் கழித்து விட்டது. (வ)

# நீண்ட கால போர் நிறுத்தம் இஸ்ரேல்- ஹமாஸ் ஒப்புதல்

ஜெருசலேம், ஒக.28
எகிப்து தலைநகர் கெய்ரோவில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பேச்சில் நீண்ட கால போர் நிறுத்தத்துக்கு இஸ்ரேல் அரசும், ஹமாஸ் அமைப்பும் ஒப்புக்கொண்டுள்ளன.
இஸ்ரேல் இராணுவம்-ஹமாஸ் தீவிரவாதிகள் இடையே தொடர்ந்து 50 நாள்களாக நடைபெற்ற போரில் 2,137 பலஸ்தீனர்களும், இஸ்ரேலைச் சேர்ந்த 68 பேரும் உயிரிழந்தனர்.
இரு தரப்புகளுக்கும் இடையே சமரசம் ஏற்படுத்தும் முயற்சியில் எகிப்து களத்தில் இறங்கியது. அந்த நாட்டின் இடைவிடாத முயற்சியின் காரணமாக அடுத்தடுத்து 48 மணி நேரம், 72 மணி நேர போர் நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
இந்தநிலையில் கெய்ரோவில் நடைபெற்ற பேச்சில் நீண்ட கால போர் நிறுத்தத்துக்கு இஸ்ரேல்-ஹமாஸ் ஆகியவை ஒப்புக்கொண்டன.
இந்த அறிவிப்பு வெளியானதும் காஸா நகர வீதிகளில் பொதுமக்கள் தங்கள் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர்.
இதுகுறித்து ஹமாஸ் இயக்க செய்தித் தொடர்பாளர் சமி அபு ஜுகரி கூறும்போது; இரு தரப்புக்களுக்கும் நீண்டகால போர் நிறுத்தத்துக்கு ஒப்புக் கொண்டுள்ளன என்று தெரிவித்தார்.
இஸ்ரேல் அரசின் மூத்த அதிகாரி கூறுகையில்; மீண்டும் ஒரு முறை எகிப்தின் போர் நிறுத்த ஒப்பந்தத்தை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம் -என்றார்.
பலஸ்தீன அதிபர் மாமூத் அப்பாஸ் கூறுகையில்; "நீண்ட கால போர் நிறுத்தத்துக்கு உதவிய எகிப்து உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டு மக்கள் அனைவரும் இணைந்து நாட்டைச் சீரமைக்க வேண்டும்" - என்றார். (வ)

## ரஷ்யா- உக்ரைன் ஜனாதிபதிகள் முதன் முறையாகச் சந்திப்பு

### கிரீமியா பிரிவினைக்குப் பின்னர்



மின்ஸ்க், ஒக.28
உக்ரைனில் இருந்து கிரீமியா பிரிந்து சென்று ரஷ்யாவுடன் இணைந்த பின்னர் முதல் முறையாக ரஷ்யா மற்றும் உக்ரைன் ஜனாதிபதிகள் பெலாரஸ் நாட்டின் மின்ஸ்க்கில் சந்தித்துப் பேசினர்.
உக்ரைனின் தன்னாட்சி பகுதியாக இருந்து வந்த கிரிமியா பொது வாக்கெடுப்பு நடத்தி ரஷ்யாவுடன் இணைந்து கொண்டது.
கிரிமியா போன்று கிழக்கு உக்ரைனும் ரஷ்யாவுடன் சேர விரும்பு கிறது. ஆனால் இதற்கு உக் ரைன் நிர்வாகம் எதிர்ப்புத் தெரிவிக்கிறது.
இதனால் கிழக்கு பகுதி யில் உள்ள ரஷ்யா ஆதரவு பெற்ற கிளர்ச்சியாளர்கள் உக்ரைன் அரச படைகளுடன் போரில் ஈடுபட்டு வரு கின்றனர். இந்த மோதலில் டுனெக்ஸ்ட் மற்றும் லுகான்ஸ்க் மாகாணங்களில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.
இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கிழக்கு உக்ரைனில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரஷ்யா நிவாரணப் பொருள்களை அனுப்பி வைத்தது. இதற்கு மேற்கத்திய நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தன. இதை தொடர்ந்து நிவாரணப் பொருள்கள் வாகனம் ரஷ்யா திரும்பியது.
மேலும், 10 ரஷ்யா வீரர்களை கிழக்கு உக்ரைன் பகுதியில் இருந்து உக்ரைன் நிர்வாகம் சிறைப் பிடித்தும் வைத்துள்ளது. இந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவதற்காக பெலாரஸ் நாட்டுக்கு ரஷ்ய அதிபர் புடின் சென்றிருந்தார்.
அங்கு வந்த உக்ரைன் ஜனாதிபதி பெட்ரோ போரோ சென்கோவுடன் புடின் கை குலுக்கி பேச்சு நடத்தினார். இந்தப் பேச்சு 2 மணி நேரம் நீடித்தது. பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய உக்ரைன் ஜனாதிபதி,
"இந்தப் பாதை ஒரு நல்ல நோக்கத்தை சென்றடையும் என்ற நம்பிக்கை உள்ளது. இரு தரப்பும் முற்றிலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக போர் நிறுத்தம் இருக்க வேண்டும்"- என்றார். (வ)

# கார் வெடிகுண்டுத் தாக்குதல் ஈராக்கில் 15 பேர் உயிரிழப்பு



ஈராக் தலைநகர் பாக்தாதில் வெடிகுண்டு தாக்குதலில் சேதமடைந்த கார்கள்.

பக்தாத், ஒக.28
ஈராக் தலைநகர் பக்தாதில், மக்கள் நெருக்கம் மிகுந்த் ஜாடியா பகுதியில் வைக்கப்பட்டிருந்த கார் வெடிகுண்டு நேற்று முன்தினம் வெடித்ததில் 15 பேர் உயிரிழந்தனர். 37 பேர் காயமடைந்தனர்.
அதிகபட்ச உயிர்ச் சேதத்தை ஏற்படுத்துவதற்காக அங்கு மக்கள் நெருக்கம் மிகுந்த சந்தைப் பகுதிகள், மசூதிகள் போன்ற இடங்களைக் குறி வைத்து பயங்கரவாதிகள் அடிக்கடி தாக்குதல் நிகழ்த்தி வருகின்றனர்.
ஜாடியா பகுதியில் ஷியா பிரிவினரின் வழிபாட்டுத் தலம் ஒன்றில் திங்கட்கிழமை நிகழ்த்தப்பட்ட மனித வெடி குண்டுத் தாக்குதலில் 11 பேர் உயிரிழந்திருந்தனர்.

**அமெரிக்கா கண்டனம்**

இதற்கிடையே, ஈராக்கில் நிகழ்த்தப்படும் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.
இதுகுறித்து வெளியுறவுத் துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜென் சாகி கூறுகையில்; ஈராக்கில் தாக்குதல் நிகழ்த்துவதன் மூலம் அந்த நாட்டு மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்த பயங்கரவாதிகள் முயன்று வருகின்றனர் எனத் தெரிவித்தார். (வ)

## உலகின் மிக உயரமான ஆண் காலமானார்

லண்டன், ஒக.28
உலகின் மிக உயரமான ஆண் என்ற 'கின்னஸ்' சாதனைக்குச் சொந்தக்காரராக விளங்கிய உக்ரைன் நாட்டின் லியோனிட் ஸ்டாட்னிக் தனது 44 ஆவது வயதில் உடல் நலக்குறைபாட்டால் உயிரிழந்தார்.
ஹோமோன் பிரச்சினையால், அவதிப்பட்டு வந்த லியோனிட், 8 அடி, 4 அங்குல உயரம் வளர்ந்திருந்தார்.
கின்னஸ் சாதனை புத்தகத்தில் அவரது பெயர் இடம்பெற்றதும் அதற்காக மிகவும் வருந்திய லியோனிட், 'இந்தப் பெருமையால் நான் மகிழ்ச்சி அடையவில்லை; மாறாக வருத்தம் அடைகிறேன். உடலில் உள்ள கோளாறு, எனக்கு இந்தப் பெருமையைப் பெற்றுத் தந்ததில் நான் மகிழ்ச்சி அடையவில்லை' - என்று தெரிவித்திருந்தார். (வ)

# அணு ஆயுதத் தடை ஒப்பந்தம் : 8 நாடுகளுக்கு ஐ.நா. வேண்டுகோள்

நியூயோர்க், ஒக.28
முழுமையான அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தத்துக்கு ஏற்புறுதி வழங்குமாறு இந்தியா, அமெரிக்கா, சீனா உள்ளிட்ட 8 நாடுகளை ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ-மூன் கேட்டுக் கொண்டுள்ளார்.
நாளைமறுதினம் சனிக்கிழமை அணு ஆயுத சோதனைகளுக்கு எதிரான சர்வதேச தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. அதனையொட்டி பான் கீ-மூன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-
"முழுமையான அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தத்துக்கு இதுவரை ஏற்புறுதி வழங்காத சீனா, வடகொரியா, எகிப்து, இந்தியா, ஈரான், இஸ்ரேல், பாகிஸ்தான், அமெரிக்கா ஆகிய நாடுகளின் மக்களுக்கு எனது வேண்டுகோள்.
இனிமேல் அணு ஆயுதங்களைப் பரிசோதிக்கவே கூடாது என்று நாம் அனைவரும் ஒன்றுகூடி அரசுகளை வலியுறுத்த வேண்டும். அதன் மூலம், இந்த உலகை, அணு ஆயுதங்களற்ற உலகமாக மாற்றுவதற்காக உருவாக்கப்பட்ட அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தத்தை முழுமையடையச் செய்ய வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.
உலக நாடுகள் அணு ஆயுதப் பரிசோதனைகளில் ஈடுபடுவதை சட்டப்படி தடை செய்யும் இந்த ஒப்பந்தத்தில் 183 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.
எனினும், இந்தியா, வடகொரியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இதில் கையெழுத்திடவில்லை. சீனா, எகிப்து, ஈரான், இஸ்ரேல், அமெரிக்கா ஆகிய நாடுகள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தாலும், அதற்கு ஏற்புறுதி வழங்கவில்லை. (வ)

## 15,000 குடும்பங்கள் காஷ்மீர் எல்லையிலிருந்து வெளியேறின

### பாக். இராணுவத்தின் தொடர் தாக்குதலால்

ஜம்மு, ஓக.28

கடந்த 33 ஆண்டுகாலத்தில் இல்லாத வகையில் காஷ்மீர் எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் நடத்தி வரும் தாக்குதலால் 15,000 குடும்பங்கள் சொந்தக் கிராமங்களில் இருந்து வெளியேறி உள்ளன.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறி காஷ்மீர் எல்லையில் கடந்த ஒன்றரை மாதங்களாக பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி தாக்குதல்களை நடத்தி வருகிறது. சர்வதேச எல்லையையொட்டி உள்ள ஆர்.எஸ்.புரா, அர்னியா பகுதிகளில் இந்திய நிலைகள்மீது மட்டுமன்றி, எல்லையோர இந்திய கிராமங்கள் மீதும் பாகிஸ்தான் இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் நடத்துவதால் அங்கு வசிக்கும் மக்கள் பதுங்கு குழிகளில் தஞ்சமடைந்துள்ளனர். தாக்குதல் நீடிப்பதால் 15,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்களது சொந்தக் கிராமங்களில் இருந்து வெளியேறி தற்காலிக முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். இதனால் குழந்தைகள் பாடசாலைகளுக்கு செல்ல முடியாமலும், கிராம மக்கள் பல்வேறு இன்னல்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

மக்கள் வெளியேறுவதை தடுப்பதற்காக எல்லையோர கிராமங்கள் அனைத்திலும் ஜம்மு காஷ்மீர் அரசின் சார்பில் பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தப் பணி ஒரு வாரத்துக்குள் முடிக்கப்படும் என்று அந்தமாநில உள்துறை அமைச்சர் சஜத் அகமது கிச்லு தெரிவித்துள்ளார். (வ)



விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு தமிழகத்தில் தயாராகும் விநாயகர் சிலைகள்....

## பெற்றோர் முன்பாக மகள் சுட்டுக் கொலை

காஜல்கோன், ஓக.28

அசாமில் பொலிஸாருக்குத் தகவல் கொடுப்பவர் என்ற சந்தேகத்தில் 16 வயது பெண்ணை வீட்டில் இருந்து இழுத்து வந்து பெற்றோரின் கண் முன்னே 9 முறை துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்துள்ளனர் தீவிரவாதிகள்.

அசாம் மாநிலம் சிராங் மாவட்டத்தில் 2 தினங்களுக்கு முன்பு பாதுகாப்புப் படையினர் நடத்திய தேடுதல் வேட்டையில் போடோ பயங்கரவாதிகள் 5 பேர் கொல்லப்பட்டனர்.

பயங்கரவாதிகள் பதுங்கியிருந்தமை குறித்து பொலிஸாருக்கு ட்விமுக்ரி கிராமத்தைச் சேர்ந்த ப்ரியா பாசுமட்டாரி என்ற பெண்தான் தகவல் தெரிவித்திருப்பார் என்று கருதிய பயங்கரவாதிகள் அவரது வீட்டுக்குள் அதிரடியாக நுழைந்து, அவரை வெளியே இழுத்து வந்து கொடூரமாகத் தாக்கி, அவரது பெற்றொர் கண் முன்னே துப்பாக்கியால் 9 முறை சுட்டுக் கொன்றனர்.

அதுமட்டுமல்லாமல் அந்தப் பெண்ணின் உடலை இழுத்துச் சென்று வயல் வெளியில் வீசிச் சென்றுள்ளனர். (வ)

# குற்றப்பின்னணி அமைச்சர்கள் அமைச்சரவையில் வேண்டாம்

### பிரதமர், முதல்வர்களுக்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அறிவுரை

டில்லி, ஓக.28

குற்றப் பின்னணி கொண்ட அமைச்சர்களை அமைச்சரவையில்வைத்திருப்பது குறித்த முடிவை பிரதமர் மற்றும் முதல்வர்களின் விருப்பத்துக்கு விட்டு விடுகிறோம் என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நேற்று தீர்ப்பு வழங்கியுள்ளனர். இருப்பினும், ஊழல், ஒழுக்கக்கேடு, சட்ட விரோதம் போன்ற குற்றங்கள் குறித்த வழக்கில் சிக்கியுள்ளவர்களை அமைச்சரவையில் சேர்க்க வேண்டாம் என்று நீதிபதிகள் அறிவுரை வழங்கி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



குற்றப் பின்னணி கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களாவதை எதிர்த்து 2004 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடரப்பட்டது. இதில் அப்போது குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டிருந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் அமைச்சரவையில் அமைச்சர்களாக இருந்த லாலு பிரசாத் யாதவ், முகம்மது தஸ்லிமுதீன், எம்.ஏ.ஏ. பாத்மி மற்றும் ஜெயபிரகாஷ் யாதவ் ஆகியோரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

**காங்., அரசு வாதம்**

அதையடுத்துகுற்றப்பின்னணி கொண்ட அமைச்சர்கள் குறித்த மனுவுக்குப் பதில் அளிக்கும் படிமத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. அதற்குப் பதில் அளித்த மத்திய அரசு, அரசியலமைப்பு சட்டத்தின்கீழ், அமைச்சர்கள் அனைவரும் நாடாளுமன்றத்துக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டால், அவர் பிரதமர் விருப்பத்தின் பேரில் அமைச்சரவையில் இடம்பெற உரிமை உண்டு என்றுவாதிட்டது. இதையடுத்து அந்த வழக்கு நிராகரிக்கப்பட்டது.

**மேலும் ஒரு மனு**

இந்தநிலையில், பிரதமர் நரேந்திரமோடி தலைமையிலான அமைச்சரவையில் உள்ள குற்றப் பின்னணியுடன் உள்ள 13 அமைச்சர்களைநீக்க வேண்டும் என, உச்ச நீதிமன்றத்தில் மனோஜ்நருலா என்பவர் ஒரு பொது நல மனுவைத் தாக்கல் செய்திருந்தார். ஐந்து மூத்த நீதிபதிகள் கொண்ட குழு இந்த மனுவை விசாரித்தது. நேற்று இந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டது.

**உச்ச நீதிமன்றம் அறிவுரை**

உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் ஊழல், ஒழுக்கக் கேடு, சட்ட விரோதம்போன்ற குற்றவழக்குகளில் சிக்கியுள்ளவர்களை, அமைச்சரவையில் சேர்க்க வேண்டாம் என்று அறிவுரை வழங்கி உள்ளது. இருப்பினும் இதுகுறித்து முடிவெடுக்கும் பொறுப்பைபிரதமர்மற்றும்முதல்வர்கள்வசமேவிட்டுவிடுகிறோம் என்று நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளனர். அதையடுத்து, குற்றப் பின்னணி கொண்ட அமைச்சர்களை நீக்கக் கோரிய பொதுநல மனுவை அவர்கள் தள்ளுபடி செய்தனர். (வ)

## ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தில் இந்திய இளைஞர்கள்?

டில்லி, ஓக.28

ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தில் இந்திய இளைஞர்கள் பலர் இணைந்திருப்பதாக அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிரியா மற்றும் ஈராக்கில் உள்நாட்டுப் போரை நடத்தி வரும் ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கம், சிரியா, ஈராக்கில் பல முக்கிய நகரங்களைக் கைப்பற்றி இஸ்லாமியநாடாக அறிவித்துள்ளது. இந்தநிலையில், இந்த ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தில் தமிழகம், கேரளா, மகாராஷ்டிரா மற்றும்ஜம்மு காஷ்மீர் மாநிலங்களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் இணைந்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியன் முஜாஹிதீன் எனப்படும் இயக்கத்தின் தலைமறைவு நிர்வாகிகள்தான் இந்திய இளைஞர்களை ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்திடம் அனுப்பியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், தற்போது இது தொடர்பாக மத்திய அரசு தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (வ)

# வாஜ்பாய், அத்வானி,ஜோஷி ஆட்சிமன்ற குழுவில் 'அவுட்'

டில்லி, ஓக.28

பா.ஜ.கவின் மும்மூர்த்திகளாக கடந்த '40 ஆண்டுகளாகத் திகழ்ந்த அடல் பிகாரி வாஜ்பாய், எல்.கே. அத்வானி, முரளி மனோகர் ஜோஷி ஆகியோர் அந்தக் கட்சியின் உயரதிகாரம் படைத்த ஆட்சிமன்றக்குழுவில் இருந்து அதிரடியாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நீக்கப்பட்டனர்.

அவர்களுக்குப் பதிலாக, அந்தக் குழுவில் மத்தியப் பிரதேச முதல்வர் சிவராஜ் சிங் சௌஹான், பா.ஜ.க. பொதுச் செயலாளர் ஜே.பி. நட்டா ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பா.ஜ.க. தலைவர் அமித் ஷா, இந்த அதிரடி முடிவை எடுத்துள்ளார். ஆட்சிமன்றக் குழுவில் இருந்து நீக்கப்பட்டுள்ள வாஜ்பாய், எல்.கே. அத்வானி, முரளி மனோகர் ஜோஷி ஆகியோர் பா.ஜ.கவில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள வழிகாட்டுதல் குழுவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



பா.ஜ.கவில் நிர்வாகிகள் மாற்றம் உட்பட பல்வேறு முக்கிய முடிவுகளை எடுக்கும் அமைப்பாக ஆட்சிமன்றக் குழு திகழ்கிறது. 12 பேர் கொண்ட இந்தக் குழுவில், அந்தக் கட்சியின் தலைவர் அமித் ஷா செவ்வாய்க்கிழமை மாற்றம் செய்தார்.

அதன்படி ஆட்சிமன்றக் குழுவில் இருந்து மூத்த தலைவர்களான முன்னாள் பிரதமர் வாஜ்பாய், முன்னாள் துணைப் பிரதமர் எல்.கே. அத்வானி, மத்திய முன்னாள் அமைச்சர் முரளி மனோகர் ஜோஷி ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குப் பதிலாக, ஆட்சிமன்றக் குழுவில் மத்திய பிரதேச முதல்வர் சிவராஜ் சிங் சௌஹான், பா.ஜ.க. பொதுச் செயலாளர் ஜே.பி. நட்டா ஆகியோர் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, கட்சித் தலைவர் அமித் ஷா தலைமையிலான ஆட்சிமன்றக் குழுவில், பிரதமர் நரேந்திர மோடி, ராஜ்நாத் சிங், அருண் ஜேட்லி, சுஷ்மா ஸ்வராஜ், வெங்கய்ய நாயுடு, நிதின் கட்கரி, அனந்த்குமார், தாவர்சந்த் கெலாட், சிவராஜ் சிங் சௌஹான், ஜே.பி. நட்டா, ராம்லால் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

பா.ஜ.கவில் 5 பேரைக்கொண்ட வழிகாட்டுதல் குழு என்ற புதிய அமைப்பை கட்சித் தலைவர் அமித் ஷா ஏற்படுத்தியுள்ளார். ஆட்சி மன்றக் குழுவில் இருந்து நீக்கப்பட்டுள்ள வாஜ்பாய், அத்வானி, முரளி மனோகர் ஜோஷி ஆகியோர் இந்தக் குழுவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் நரேந்திர மோடி, ராஜ்நாத் சிங் ஆகியோரும் அந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர். (வ)

## வலிமையடைகிறது இந்தியக் கடற்படை



இந்தியாவின் பாதுகாப்பை பலப்படுத்தும் முயற்சியில் இறங்கி உள்ள மோடி அரசு முதற்கட்டமாகக் கடற்படையை வலிமை உள்ளதாக மாற்ற நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

தற்போது, இரண்டு விமானம் தாங்கிக் கப்பல்கள், ஒரு ஆயுதங்கள் கொண்டு செல்லும் கப்பல், 9 லேண்டிங் ஷிப் டேங்க்ஸ், 9 நாசகாரி கப்பல்கள், 15 போர்க் கப்பல்கள், ஒரு அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல், 14 போர் நீர்மூழ்கிக் கப்பல்கள், 25 வழித்துணைக் கப்பல்கள், 7 கடல் கண்ணி வெடி கண்டறியும் கப்பல்கள், 10 கடலோரக் காவல் கப்பல்கள் இந்தியக் கடற்படையிடம் உள்ளன. மேலும், சரக்கு, எரிபொருள் கொண்டு செல்லும் கப்பல்கள், மற்றும் சிறிய ரகக் கப்பல்கள் என ஏராளமாக உள்ளன.

இருப்பினும் பரந்த, நீண்ட கடல் பரப்பு கொண்ட இந்தியாவுக்கு இவை போதுமானதாக இல்லை. மேலும், கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவுக்கு கடல் மார்க்கமாக ஆபத்துக்கள் வருவதால், இந்திய கடற்படையைமேலும்பலமுள்ள தாக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதைக் கருத்தில்கொண்டு மேலும் 40 போர்க் கப்பல்களை கட்ட கடற்படை அனுமதி கொடுத்துள்ளது. (வ)

## அரசுடைய கைக்கூலிகளே வதந்தியை பரப்புகின்றனர்

ரவி கருணாநாயக்க குற்றச்சாட்டு




“ஐக்கிய தேசியக் கட்சி தீர்மான கரமான இடத்துக்கு வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இப்படியான கதைகளை அவர்கள் கட்டவிழ்த்து விடுகின்றனர்.”

கொழும்பு, ஓக.28

ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கும் அரசின் தேவைகளை நிறைவேற்றும் ஒப்பந்தகாரர்களே நான் அரசில் இணையப் போகின்றேன் என்று வதந்திகளைப் பரப்பி வருகின்றனர் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

“நான் அரசில் இணையப் போகின்றேன் என்று இவர்கள் இதற்கு முன்னரும் பல முறை இப்படியான வதந்திகளைப் பரப்பி வந்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சிக்கு தீர்மானகரமான இடத்துக்கு வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இப்படியான கதைகளை கட்டவிழ்ந்து விட்டு அவர்கள் திருப்தியடைகின்றனர்.

இவ்வாறான நபர்களுக்கு பதிலளிக்க நான் தயாராக இருக்கின்றேன். எதிர்காலத்தில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்”- என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)



இலங்கையில் நடைபெற்ற பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொள்ள இலங்கை வந்த இந்திய இராணுவ படையணி சிரேஷ்ட கட்டளைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் ஐ.ஜி. விபின் அண்மையில் இலங்கை இராணுவத்தளபதி லெப்டினட் ஜெனரல் தயா ரத்நாயக்கவை சந்தித்தார்.

இராணுவ தலைமையகத்தில் இந்தக் கலந்துரையாடல்நடந்துள்ளது இருதரப்பினருக்கும் மிக அவசியமான விடயங்கள் தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## இந்திய பிரஜைகள் இருவர் கைது

கொழும்பு, ஓக.28

இலங்கையிலுள்ள முக்கிய இடங்களைப் புகைப்படம் எடுத்த இந்தியப் பிரஜைகள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கொழும்பு முகத்துவாரம் பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

குறித்த இருவரும் சென்னையிலிருந்து நாட்டுக்கு வந்துள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ற)

## படல்கும்புர மோதல்; வாக்குமூலம் பதிவு

கொழும்பு, ஓக.28

மொனராகலை படல்கும்புர பகுதியில் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆதரவாளர்களிடையே இடம்பெற்ற மோதல் தொடர்பில் இரண்டு தரப்பினரிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி நேற்றுமுன்தினம் பொலிஸ் மாஅதிபருக்கு கடிதமொன்றையும் அனுப்பிவைத்திருந்தது. சட்டவிரோத ஆயுதங்களுடன் நடமாடும் குண்டர் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றி அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அந்த கடிதத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மொனராகலை மாவட்டத்தில் அச்சமும் சந்தேகமும் இன்றி தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மக்கள் விடுதலை முன்னணி பொலிஸ் மாஅதிபரிடம் கோரிக்கை விடுத்திருந்தது. அதையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# மஹிந்தவின் வெற்றிக்கு பிரபாகரன்தான் காரணம்

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கூறுகிறார்

கொழும்பு, ஓக.28

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் காரணமாகவே மஹிந்த ராஜபக்ஷ 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றார் என்று தெரிவித்துள்ளார் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க.

பிரபாகரன் ஆணையிட்டு வடக்கு, கிழக்கில் வாக்களிப்பதை நிறுத்தினார். அதனாலேயே அன்று மஹிந்தவால் வெற்றிபெற முடிந்தது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கரந்தெனிய பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

“வட பகுதி வாக்காளர்களின் ஐந்து லட்சம் வாக்குகளை அளிக்க விடாது பிரபாகரன் தடுத்தார்.

அவர்கள் வாக்களித் திருந்தால், ஒரு வாக்குக் கூட மஹிந்த ராஜபக்ஷவுக்கு கிடைத்திருக்காது. பிரபாகரனின் புண்ணியத்தில் மஹிந்தவுக்கு ஆட்சி அதிகாரம் கிடைத்தது.”- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

“வட பகுதி வாக்காளர்கள் மட்டும் அன்று வாக்களித்திருந்தால் ஒரு வாக்குக் கூட மஹிந்தவுக்குக் கிடைத்திருக் காது.”



## தேர்தல் முறைமையை மாற்றுமாறு கோரிக்கை

கொழும்பு, ஓக.28

தற்போதைய தேர்தல் முறைமை, மாற்றப்பட வேண்டிய முறைமை உள்ளிட்ட 21 விடயங்கள் அடங்கிய பிரேரணை ஒன்று அரசிடம் கையளிக்கப்படவுள்ளது என்று மக்கள் ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

அந்த முன்னணியின் 21 ஆவது தேசிய சம்மேளனத்தின் போது குறித்த பிரேரணை நிறைவேற்றப்பட்டது என்று அதன் தலைவர் அமைச்சர் தினேஷ் குண வர்த்தன தெரிவித்துள்ளார். (ற)

## நில அளவையாளர் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஓக.28

கோரிக்கைகள் பலவற்றை முன்வைத்து, நேற்று முதல் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது அரச நில அளவை சங்கம்.

அந்த சங்கத்தின் தலைவர் அமல் ஜயவர்த்தன இதனைத் தெரிவித்தார். 6/2006 அரச நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய சேவை யாப்பு சீர் திருத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ற)

## சிகரெட், விஸ்கி மீட்பு

கொழும்பு, ஓக.28

மூன்றரைக் கோடி ரூபா பெறுமதியான விஸ்கி போத்தல்களும் வெளிநாட்டு சிகரெட்டுகளும், பொரளை பிரதேச வீடொன்றிலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வீடு, மாதமொன்றுக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் வாடகைக்கு பெறப்பட்டே, அவை வைக்கப்பட்டிருந்தன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற)

## போதைப்பொருள் வர்த்தகத்தை கட்டுப்படுத்த பாகிஸ்தானின் உதவி

பொலிஸ் பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஓக.28

போதைப்பொருள் வர்த்தகத்துக்காக இலங்கையை சிலர் பயன்படுத்தி வருகின்றனர் என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்த தாம் பாகிஸ்தானின் உதவியை நாடியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.




இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில்பெருமளவுஹெரோயின் கடத்தப்படுகின்றது என்று தெரிவித்துள்ள அவர் கொழும்பு துறைமுகத்துக்கு வரும் கொள் கலன்களில் மறைத்தும் போதைப்பொருள்கள் இலங்கைக்குள் கொண்டுவரப்படுகின்றன என்றும் தெரிவித்துள்ளார். ஹெரோயின் கடத்தப்படுவதைத் தடுப்பது தொடர்பான பேச்சு கடந்த வாரம் புதுடில்லியில் இடம்பெற்றது என்றும், போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதற்கு இந்தியா உதவிகளை வழங்க முன்வந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் உதவி தற்பேரது நாடப்பட்டுள்ள நிலையில், இரு நாடுகளுக்குமிடையே பரிமாறப்படும் புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் நடமாடும் கடத்தல்காரர்கள் கைதுசெய்யப்படுவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

## 100 வயதாகும் பாட்டிக்கு 120 பேரப்பிள்ளைகளாம்



பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், கொள்ளுப் பேரப்பிள்ளைகள் என்று 120 பேரைக் கண்ட மூதாட்டி ஒருவர் பொலநறுவை பிரதேசத்தில் வாழ்ந்து வருகின் றார் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. இந்த பெண்மணி ஹிங்குரக்கொட ஹத்தமுன கொட்டுவேல பிரதேசத்தில் வசித்து வருகிறார். 100 வயதாகும் இந்த பெண்மணிக்கு 11 பிள்ளைகள் உள்ளனர். டி.ஏ. கருணாவதி என்ற இந்த பெண் மணியின் கணவர் 41 வருடங்களுக்கு முன்னர் காலமானார். இவரது மூத்த மகனுக்கு 81 வயது. 100 வயதாகும் கருணாவதி சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் உள்ளார் என்று கூறப்படுகின்றது. (ற)



# ஈ உடன் மூன்று நாள்கள்

நபரொருவரின் காதுக்குள் நுழைந்த ஈ ஒன்றை மூன்று நாள்களுக்குப் பின்னர், சுமார் 90 நிமிட நேரச் சிகிச்சை மூலம் வெளியே எடுத்த சம்பவமொன்று இங்கிலாந்தில் இடம்பெற்றுள்ளது. இங்கிலாந்தின் ஐலெஸ்பெரி என்ற நகரத்தைச் சேர்ந்த ரொப் பீல்டிங் என்ற 43 வயதான நபருக்கே இவ்வாறான தொரு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப் பட்டுள்ளது. 3 குழந்தைகளின் தந்தையான இவர், தனது படுக்கையில் சாய்ந்துகொண்டு புத்தகமொன்றை வாசித்துக் கொண்டிருந்த போது, அவரது மூக்குக்கண்ணாடிக்கு மேல் ஒரு ஈ வந்து அமர்ந்தது. அவர், அந்த ஈயை தனது கையால் தட்டிவிட்டபோது, அது அவரது காதுப் பகுதிக்கு நகர்ந்து சென்று காதினுள் நுளைந்துவிட்டது. இந்த நிலையில், சிறிது நேரத்தில் ஈ வெளியே வந்துவிடும் என்று எண்ணி சிகிச்சை ஏதும் செய்யாது அவர் இருந்துள்ளார். காதினுள் சென்ற ஈ மூன்று நாள்களாகியும் வெளியில் வராததை யடுத்தே அவர் வைத்தியரை நாடியுள்ளார். முதலில், காதுக்குள் ஈ புகுந்துள்ளதாக அவர் கூறும்போது வைத்தியசாலை பணியாளர்கள் முதலில் வியப்படைந்துள்ளனர். எனினும், ஒளி பாய்ச்சியின் ஊடாக ஒளியைக் காதினுள் செலுத்தி பார்த்த போது, ஈயின் கால்கள் தெரிந்துள்ளன. இதனையடுத்து உடனடியாக சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதுடன் சுமார் 90 நிமிடங்களின் பின்னர் குறித்த ஈ யை உயிரி ழந்த நிலையில் வெளியில் எடுத்துள்ளனர். எனது காதுக்குள் ஈ அங்குமிங்கும் அசையும்போது எனக்கு உடல் முழுவதும் கூசும். தானாகவே கால்கள் நடனமாடும் என்று மூன்று நாள்களாக அந்த ஈயை வைத்திருந்த நபர் தெரிவித்துள்ளார்.




## சாயி சிந்தனை



**புத்தி: விஞ்ஞானம், இவ்விரண்டினதும் வேறுபாட்டை விளக்கவும்**

புத்தி- அக உலகின் நுட்பமான பகுதியுடன் தொடர்புடையது. விஞ்ஞானம்- உலகியல் அறிவுடன் சம்பந்தப்பட்டது. இது சாதாரண, புற உலகிலுள்ள பொருள்களைப் பற்றி ஆராய்ந்து அறிவதற்கு மனிதனுக்கு உதவுகிறது.






## நச்சின்னு கடி



சூப்பர் ஸ்ரார் ரஜினி படங்களில் பஞ்ச் வசனங்கள் இடம்பெறுவது வழக்கமான ஒன்று. இந்த வசனங்களுக்கு ரசிகர்கள் மத்தியில் பலத்த வரவேற்பு இருக்கும்.

16 வயதினிலே படத்தில் இடம்பெற்ற 'இது எப்படி இருக்கு', பாட்ஷா படத்தில் இடம்பெற்ற 'நான் ஒரு தடவை சொன்னா நூறு தடவை சொன்ன மாதிரி', அருணாசலம் படத்தில் வரும் 'ஆண்டவன் சொல்றான் அருணாசலம் செய்றான்'. படையப்பா படத்தில் இடம் பெற்ற 'என் வழி தனி வழி' என பல படங்களில் ரஜினி பேசிய பஞ்ச் வசனங்கள் ரசிகர்கள் மத்தியில் கைதட்டலைப் பெற்றன.

ஆனால் அண்மைய படங்களில் பஞ்ச் வசனங்கள் இடம்பெறவில்லை. இது ரசிகர்களுக்கு ஏமாற்றத்தை அளித்தது. இந்த நிலையில் லிங்கா படத்தில் ரஜினிக்கு பஞ்ச் வசனங்கள் கொடுக்கப்பட்டு உள்ளன.

ரஜினி 'லிங்கா'வில் இரு வேடங்களில் வருகிறார். அதில் ஒரு கதாபாத்திரம், ஆற்றங்கரையிலுள்ள அரச மரமொன்றின் அருகில் வந்த ஒருவன் மக்களுக்காக அணை ஒன்றைக் கட்ட பாடுபடுவதுபோல் சித்திரிக்கப்படுகிறது. அந்த கதா பாத்திரத்துக்குத்தான் பஞ்ச் வசனங்கள் கொடுக்கப்பட்டு உள்ளன. 'எனக்கு எந்த சாதிக்காரரும் வேண்டாம். இந்தியனா இருக்கிறவன் மட்டும் என்கூட வாங்க' என்பது உட்பட பல அரசியல் பஞ்ச் வசனங்கள் படத்தில் இடம்பெற்று உள்ளதாம்.



## ரஜினியின் புதிய 'பஞ்ச்' தயார்




## இன்றைய பேஸ்புக் தத்துவம்

நன்றியும் மன்னிப்பும் நட்புக்குத் தேவையில்லை... சரக்கு மட்டுமே போதும் !

## உங்க கடிகாரம் ... ?

இறந்த பின்னர் ஒரு மனிதன் சொர்க்கத்துக்குச் சென்றான். சொர்க்கத்தின் வாசலில் ஒரு பெரிய சுவரில் பல கடிகாரங்கள் தொங்கிக் கொண்டிருந்தன.

இது எதற்கு என்று அங்கிருந்த காவலாளி ஒருவனிடம் கேட்டான்.


அதற்கு அந்தக் காவலாளி இது ஒரு பொய்க் கடிகாரம். அதாவது பூமியில் நீங்கள் ஒரு பொய் சொன்னால் உங்களுக்குரிய கடிகாரத்திலுள்ள முள் ஒரு தடவை நகரும். இங்கே பாருங்கள் என்று ஒரு கடிகாரத்தைக் காட்டினான்.

இது அன்னை தெரேசாவுக்குரியது. இதுவரை இந்தக் கடிகாரத்தின் முள் நகரவேயில்லை. அதாவது அன்னை தெரேசா இதுவரை பொய் எதுவும் சொன்னதில்லை என்று அர்த்தம், என்று விளக்கமளித்தான்.

இது அந்த மனிதனுக்கு ஆச்சரியமாக இருந்தது. காவலாளியோ மேலும் இன்னுமொரு கடிகாரத்தைக் காட்டி, இது ஆபிரகாம் லிங்கனுடையது. இந்தக் கடிகாரத்தின் முள் இதுவரை இரு முறை நகர்ந்துள்ளது. அதாவது ஆபிரகாம் லிங்கன் தமது வாழ்க் கையில் இரு முறை பொய் சொல்லியுள்ளார் என்றும் விளக்கமளித்தான்.

இதைக் கேட்ட அந்த மனிதனுக்கு ஆச்சரியமாக இருந்தது. உடனே அந்த மனிதன், எங்கள் ஊரிலுள்ள அரசியல்வாதிகளின் கடிகாரங்கள் எங்கே உள்ளன, அதை நான் பார்க்க வேண்டும் என்று கேட்டான்.

அதற்கு அந்தக் காவலாளி, மன்னிக்க வேண்டும். அந்தக் கடிகாரங்கள் அனைத்தையும் இங்கே நாங்கள் மின் விசிறியாக உபயோகித்து வருகிறோம், என்றான்.



## ரிலாக்ஸா வாசியுங்க...

## அமிர்தலிங்கத்தின் 88 ஆவது பிறந்த தினம்



வலி.தென்மேற்கு,ஓக.28
தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமாகவும் எதிர்க் கட்சித் தலைவராகவும் இருந்த அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 88 ஆவது பிறந்த தினம் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3மணிக்கு பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தில் கொண்டாடப்படவுள்ளது.
அண்ணா கலை மன்றத் தலைவர் என்.தம்பையா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஓய்வு பெற்ற நீதிவான் இ.த.விக்னராஜா உட்பட பலர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

## கணக்காய்வாளர் பிராந்திய அலுவலக திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஓக.28
215 ஆண்டுகால வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தின் வடபிராந்தியத்துக்கான அலுவலகம் சொந்தக் கட்டடத்தில் நாளை வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது. உதவிக் கணக்காய்வாளர் தலைமையதிபதி ஞா.தேவஞானன் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் கணக்காய்வாளர் தலைமையதிபதி எச்.ஏ.எஸ். சமரவீர பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளார். யாழ். செயலகத்துக்கு முன்பாக இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. (த)

# விடுதலையாகி 8 மணித்தியாலத்துக்குள் மீண்டும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்

## இருவரை வாளால் வெட்டியதாகக் குற்றஞ்சாட்டி

யாழ்ப்பாணம், ஓக.28
மதுபோதையில் இடையூறு ஏற்படுத்தியதற்காக 7 ஆயிரம் ரூபாவும், கூரிய ஆயுதத்தைத் தம்வசம் வைத்திருந்தமைக்காக 50 ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட நபர் ஒருவர் விடுதலையாகி 8 மணி நேரத்துக்குள் மீண்டும் கைதானார்.
இருவரை வாளால் வெட்டிக் காயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரிலேயே குறிப்பிட்ட நபரை பருத்தித்துறைப் பொலிஸார் கைது செய்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-
கடந்த சனிக்கிழமை பிற்பகல் கோஷ்டி மோதல் ஒன்றுக்குத் தயாராக இருந்ததாகக் கூறி குழுவொன்றைப் பருத்தித்துறைப் பொலிஸார் சுற்றிவளைக்கமுற்பட்டனர். கோஷ்டி மோதல் ஒன்று இடம்பெறப் போவதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்திருந்தனர். ஆனாலும் பொலிஸாரைக் கண்டவுடன் பலர் தப்பியோடிய நிலையில் ஒருவரை மட்டும் பொலிஸார் அல்வாய் மகாத்மா வீதியில் வைத்து துரத்திப் பிடித்துக் கைது செய்தனர்.
அப்போது அவர் கைவசம் வைத்திருந்ததாகக் கூறப்படும் வாளொன்றைப் பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.
இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் இவர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது அவர் பொது இடத்தில் மது போதையில் நின்றதற்காக 7 ஆயிரம் ரூபாவும் கூரிய ஆயுதத்தைக் கைவசம் வைத்திருந்ததற் காக 50 ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டு அவர் விடுவிக்கப்பட்டிருந்தார்.
இந்த நிலையில் சந்தேக நபர் விடுவிக்கப்பட்டு 8 மணி நேரத்துக்குள் மோதல் சம்பவம் ஒன்றில் இருவரை வாளால் வெட்டியதாக குற்றஞ்சாட்டித் திங்கட்கிழமை இரவு மீண்டும் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
குறித்த சந்தேக நபர் கடந்த செவ்வாய்க்கிழமை மீண்டும் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது சந்தேக நபரை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.
இதேவேளை குறித்த சந்தேக நபர் மோட்டார் சைக்கிள் திருட்டு உட்பட பல வழக்குகளில் தொடர்புபட்டவர் எனவும், அவர் மீது சுமார் 5 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-109)



காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையிலான கடற்போக்குவரத்துக்குப் பயன்பாட்டிலுள்ள-கேபிள் கம்பியில் நகர்த்தப்படும் இரும்பினாலான பாதை உக்கி ஓட்டை உடைசல்களுடன் காணப்படுகிறது. அதனூடாகப் பயணம் செய்பவர்கள் பல மாதங்களாக சிரமத்துக்கு மத்தியில் அச்சத்துடன் பயணிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (த-4)

## நெடுந்தீவுச் சங்கம் தவிர்ந்த அனைத்துக்கும் இயக்குநர் சபை

யாழ்ப்பாணம், ஓக.28
யாழ்.குடாநாட்டில் நெடுந்தீவுப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைத் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் ஜனநாயக முறைப்படி தெரிவாகிய இயக்குநர் சபை மூலம் செயற்படுத்தப்பட்டு வருவதாகக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
கடந்த காலங்களில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாகக் கூட்டுறவுத் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட நியமன இயக்குநர் சபை மூலமே சில சங்கங்கள் செயற்பட்டு வந்தன.
இந்தச் சங்கங்களுக்கும் கிளைக்குழு உறுப்பினர்கள் படிப்படியாகத் தெரிவு செய்யப்பட்டும் வாக்காளர் இடாப்புக்கள் சீர்செய்யப்பட்டும், கிளைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டும் உள்ளன.
இந்தத் தேர்தல் மூலம் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு இயக்குநர் சபைகளும் தெரிவாகியுள்ளன.
நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு விரைவில் ஜனநாயக முறைப்படி இயக்குநர் சபை தெரிவு செய்யப்படும்.
சங்கங்கள் நுகர்ச்சி வியாபாரத்தைக் கிளைகளில் அதிகரிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.
கிளை நிலையங்கள் நுகர்வோரைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டு சுகாதாரம் பேணப்படுவதுடன் பொருள்கள் அழகுறக் காட்சிப்படுத்தப்படவேண்டும்எனவும்அறிவிக்கப்பட்டுள்ளது-என்றார். (த-17)

# குடிதண்ணீர், வீதி விளக்கு திட்டங்களுக்கு முன்னுரிமை

## சாவகச்சேரி நகர சபை தீர்மானம்

தென்மராட்சி, ஓக.28
சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அடுத்த வருடம் (2015) குடிதண்ணீர் விநியோகம் மற்றும் வீதி விளக்கு பொருத்துதல் ஆகிய வேலைத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இதற்கான நிதி அடுத்த வருடத்துக்கான உத்தேச வரவு- செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் என நகர சபை தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.
சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆசிய மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் இறுதி அறிக்கை சமர்ப்பிப்பு நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அண்மையில் நகர சபை பொன்விழா மண்டபத்தில் இறுதி அறிக்கை வெளியீடு இடம்பெற்றது.
இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
எமது நிர்வாக காலத்தில் சபை எல்லைக்குட்பட்ட பெரும்பாலான வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன. மேலும் சில வீதிகள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளன.
இந்த நிலையில் கடந்த மே மாதம் ஆசிய மன்றமும் உள்ளூராட்சி திணைக்களமும் இணைந்து நடத்திய இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை தயாரிப்பின் போது பெரும்பாலான மக்களால் பிரதேசத்தில் காணப்படும் குடிதண்ண்ணீர் பற்றாக்குறை மற்றும்வீதி விளக்குகள் பொருத்தப்படாமை பற்றி குறைபாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.
இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு அடுத்த வருடம் வீதி புனரமைப்பு வேலைத் திட்டங்களை இடைநிறுத்தி குடிதண்ணீர் பற்றாக்குறை காணப்படும் இடங்களில் பொதுக் கிணறுகள் அமைக்கவும், குழாய்கள் மூலம் குடிதண்ணீர் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.
மேலும் தற்போது சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 458 வீதி விளக்குகளும், 175 பொதுமக்கள் பங்களிப்புடனான வீதி விளக்குகளும் பொருத்தப்பட்டுள்ளன.
இந்தத் திட்டங்களை விஸ்தரிக்க சபை நிதியிலிருந்து 15 லட்சம் ரூபாவுக்கு உத்தேச வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் நிதி ஒதுக்கப்படும் - என்றார். (த-9)

## பயனாளிகள் ஊடாக பனம் நாற்று நடுகை

யாழ்ப்பாணம்,ஓக.28
பனை அபிவிருத்திச் சபையில் கைப்பணிப் பயிற்சி பெற்ற பயனாளிகள் ஊடாகவே இம்முறை பனம் நாற்றுக்கள் நடுகை செய்யப்படும் என்று பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-
இம்முறை போகத்தின் போது குறைந்தது 50 ஆயிரம் பனம் நாற்றுக்களை நாடு முழுவதும் நடுகை செய்வதற்குச் சபை திட்டமிட்டுள்ளது.



கடந்த காலங்களில் பொது அமைப்புக்கள், நிறுவனங்கள் மற்றும் மக்கள் ஊடாக இந்தப் பனம் நாற்றுக்கள் நடுகை செய்யப்பட்டன.
நடுகை செய்யப்பட்ட பனம் நாற்றுக்களை உரிய முறையில் பேணிப் பாதுகாக்காமையால் அவை அனேகமான இடங்களில் அழிவடைந்துள்ளன. இதனால் பனை வளத்தை மேலும் அபிவிருத்தி செய்யும் வகையில் பனம் நாற்றுக்களை நடுகை செய்யும் திட்டங்களை சபை மாற்றியமைக்கவுள்ளது.
எதிர்காலத்தில் பனம் நாற்றுக்கள் கைப்பணிப் பயிற்சி பெற்ற பயனாளிகள் ஊடாகவே நடுகை செய்யப்படும்.
இந்தப் பனம் நாற்றுக்களை நடுகை செய்து சிறப்பாகப் பராமரிக்கும் பயனாளிகளுக்கு ஊக்குவிப்புப் பரிசை வழங்கச் சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்றார். (த-17)

## பளையில் மீளக்குடியமராத குடும்பங்களின் விவரம் திரட்டல்

பளைப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இது வரை மீளக்குடியமர அனுமதிக்கப்படாத குடும்பங்களின் விவரம் நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்படுகின்றன.
அந்தப் பகுதியில் வெடி பொருள்கள் அகற்றும் 'ஹலோ டிரஸ்ற்' நிறுவனத்தினர் இந்தப் பதிவுகளை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.
இந்தப் பகுதியில் மக்களின் குடியிருப்புப் பகுதிகளை இனங்கண்டுவெடிபொருள்களைவிரைவாக அகற்றி மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு வசதியாக இந்த விவரங்கள் திரட்டப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.
மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பகுதிகளில் பெரும்பாலான பகுதிகள் தென்னந்தோட்டங்களாக காணப்படுவதால் அவற்றைத் தவிர்த்து குடியிருப்புப் பகுதிகளில் வெடி பொருள்களை அகற்றுவதற்கு வசதியாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (த-9)

## தற்காலிக பணியாளருக்கு 10,500 ரூபா

தற்காலிக பணியாளர்களுக்கு தொழில் சட்டத்துக்கு அமைவாகக் குறைந்தது 10 ஆயிரத்து 500 ரூபா மாதக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்று வடமாகாணப் பிரதித் தொழில்ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தற்காலிக பணியாளர் ஒருவருக்கு 10 ஆயிரத்து 500 ரூபாவுக்குக் குறையாத கொடுப்பனவு மாதாந்தம் வழங்கப்பட வேண்டும்.
அந்தப் பணியாளர் எட்டு மணித்தியாலங்களுக்கு மேல் கடமையாற்றினால் அவர்களது மேலதிக பணி நேரத்துக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு கணிக்கப்பட்டு வழங்கப்பட வேண்டும்.
அத்துடன் அந்தப் பணியாளர் ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்களில் பணியாற்றினால் அதற்கான கொடுப்பனவு இரட்டிப்பாக வழங்கப்பட வேண்டும்.
இவ்வாறு தொழில் நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கான கொடுப்பனவுகளை நிறுவனங்கள் உரிய முறையில் கணிப்பீடு செய்து வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார். (த-17)

# திட்டக் காணிகள் தொடர்பில் கூட்டமைப்பு இரட்டைவேடம்

## உழவனூர் மக்கள் கடும் விசனம்

கிளிநொச்சி, ஓக.28
திட்டக் காணிகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரட்டை வேடம் போடுகிறது என கண்டாவளை உழவனூர் கிராம மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

உழவனூர் கிராம மக்களாகிய நாங்கள் கிட்டத்தட்ட 30 வருடங்களாக இந்த கிராமத்தில் வாழ்ந்து வருகின்றோம். நாங்கள் ஆரம்பத்தில் இந்தக் காணிகளில் குடியிருக்க வந்தபோது வெறும் காடுகளாகவே இவை காணப்பட்டன.

அதனை துப்புரவு செய்து கிணறு வெட்டிப் பயன்தரும் மரங்களை நட்டு பெறுமதியான காணிகளாக மாற்றி வாழ்ந்து வருகின்றோம்.

இந்த நிலையில் அண்மையில் அரசினால் கொண்டு வரப்பட்டுள்ள காணி தொடர்பான சட்டம் 30 வருடங்களுக்கு முன் காணிகள் எவருக்கு வழங்கப்பட்டதோ அவர்கள் காணிகளைப் பெற்றுக் கொள்வதற்கு வழிவகை செய்கிறது.

தங்களுக்கு வழங்கப்பட்ட காணிகளே தெரியாத அந்த மக்கள் வெளிநாடுகளிலிருந்தோ அல்லது நாட்டின் ஏனைய பாகங்களில் இருந்தோ வருகை தந்து இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி காணிகளைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புக் கிட்டுமானால் கிட்டத்தட்ட 30 வருடங்களாக இந்தக் காணிகளில் வாழ்ந்து வருகின்ற எங்களின் நிலை என்னவாகும்?

காணிகளை இழந்த மக்கள் மீண்டும் காணிகளைப் பெற முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியும், நாடாளுமன்றத்தில் சட்டத்துக்கு ஆதரவாகப் பேசியதும் எமக்குப் பெரும் ஏமாற்றத்தையும் கவலையையும் அளிக்கிறது.

காணிகளை இழந்த மக்கள் என்பது, அரசினால் அன்று வழங்கப்பட்ட காடுகளாக இருந்த காணிகளை விட்டுச் சென்று வெளிநாடுகளிலும் மற்றும் ஏனைய இடங்களிலும் வசதி வாய்ப்புகளோடு வாழ்கின்றவர்கள் எனவும் அவர்களுக்கு ஆதரவாக பேசுகின்றவர்கள் இந்த காணிகளில் 30 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வருகின்ற இந்த மண்ணில் எல்லா துன்ப துயரங்களை அனுபவித்த எங்கள் தொடர்பில் ஏன் அக்கறை கொள்ளவில்லை?

கூட்டமைப்பின் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இந்தச் சட்டத்துக்கு ஆதரவாக பேசுகின்ற அதேவேளை மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் எங்கள் மத்தியில் வந்து, குடியிருக்கும் மக்களுக்கே இந்தக் காணிகள் சொந்தம்.

அதனை எவரும் மீண்டும் பெற்றுக்கொள்ள அனுமதிக்க முடியாது எனக் கூறுகின்றார். இது எமக்கு வேடிக்கையாக இருப்பதோடு இவர்களின் இரட்டை வேடத்தை எம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

எங்களை வைத்து அரசியல் நடத்துவதை விட்டு எங்கள் கிராமத்தில் வாழ்கின்றவர்கள் போன்று கண்டாவளை பிரதேசத்தில் மத்திய வகுப்புத் திட்டம், படித்த வாலிபர் திட்டம், மகளிர் அபிவிருத்தி திட்டம் போன்ற திட்டக் காணிகளில் வாழ்ந்து வரும் ஏழை மக்களின் நலன்களில் அக்கறையோடு செயற்பட வேண்டும் -என்றனர். (த)

# பரந்தன் பொதுச் சந்தையில் அடிப்படை வசதிகள் சீரில்லை

## தாம் பாதிக்கப்படுவதாக வர்த்தகர்கள் முறைப்பாடு

கிளிநொச்சி, ஓக.28
பரந்தன் பொதுச் சந்தையின் அடிப்படை வசதிகள் சீர் செய்யப்படவில்லை எனவும் இதனால் தாங்கள் பாதிக்கப்படுவதாகவும் இந்தப் பகுதி வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள பரந்தன் பொதுச் சந்தை போதிய வசதிக் குறைபாடுகளுடன் இயங்கி வருவதுடன் இதனோடு இணைந்த பஸ் நிலையமும் வசதிக் குறைப்பாடுகளுடன் உள்ளது.

பொதுச் சந்தையின் கழிவுகள் உரிய முறையில் அகற்றப்படுவதில்லை எனவும், குடிதண்ணீர் வசதி மற்றும் துப்புரவு செய்வதற்குரிய நீர் வசதி எவையும் இது வரை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை எனவும், இதனால் மலசல கூட வசதிகள் இருந்தும் அதனை உரிய முறையில் பயன்படுத்த முடியாதிருப்பதாகவும் இந்தப் பகுதி வர்த்தகர்கள் கூறுகின்றனர்.

இதனைவிட இதனுடன் இணைந்த பரந்தன் பஸ் நிலையம் தனியார் ஒருவரால் அமைக்கப்பட்டுப் பாவனைக்கென வழங்கப்பட்டுள்ளபோதும் இதன் சுற்றுப்புறம் கிரவல் மண் போடப்பட்டுத் தாரிடப்படாமல் உள்ளது. இதனால் ஏற்படும் புழுதிப்படலத்தால் வர்த்தக நிலையங்கள் பாதிக்கப்படுவதாகக் கூறும் வர்த்தகர்கள், பஸ் நிலையத்தின் சுற்றுப் பகுதியைத் தாரிட்டுப் புனரமைத்துத் தருமாறும் கோரியுள்ளனர். (த-55)



பச்சிலைப்பள்ளி பிரதேச கலைஞர் விவரத் திரட்டு நூல் வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் நூலின் முதல் பிரதியை கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் வெளியிட்டு வைக்க பளை வர்த்தகர் சங்கத் தலைவர் க.குலேந்திரராசா பெற்றுக் கொண்டார். (த-18)

# பின்தங்கிய பாடசாலைகளில் பௌதிக வளப் பற்றாக்குறை

முல்லைத்தீவு, ஓக.28
முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வயத்தின் கீழ் உள்ள பின்தங்கிய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் ஆளணி மற்றும் பௌதிக வளப் பற்றாக்குறைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியநிலை காணப்படுகின்றது.

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள 61 பாடசாலைகளில் சுமார் 8ஆயிரத்து 485 வரையான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

> துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள 61 பாடசாலைகளில் சுமார் 8ஆயிரத்து 485 வரையான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்த நிலையில் துணுக்காய் கல்விக் கோட்டத்தின் கீழ் உள்ள 18 பாடசாலைகளில் கோட்டைகட்டிய குளம் அ.த.க, தேறாங்கண்டல் அ.த.க, புத்துவெட்டுவான் அ.த.க, ஐயன்கன்குளம் அ.த.க, தென்னியங்குளம் அ.த.க போன்ற பல பாடசாலைகளும், மாந்தை கிழக்குக் கல்விக்கோட்டத்தில் கீழ் உள்ள 16 பாடசாலைகளில் மூன்று முறிப்பு அ.த.க., பனங்காமம் அ.த.க., சிறாட்டிக்குளம் அ.த.க. உள்ளிட்ட பாடசாலைகளும், ஒட்டுசுட்டான் கல்விக் கோட்டத்தின் கீழ் உள்ள ஒலுமடு வித்தியாலயம், கருப்பட்டமுறிப்பு வித்தியாலயம், ஒட்டுசுட்டான் பகுதியை அண்மித்த பகுதிகளில் உள்ள பாடசாலைகளும் பல்வேறு வளப் பற்றாக்குறைகளுடன் இயங்கி வருவதனால் இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தமது கல்வியைத் தொடரும் நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-55)

# காலபோகத்துக்குரிய நெல்லை மானிய அடிப்படையில் தருக

## வவுனிக்குள விவசாயிகள் கோரிக்கை



முல்லைத்தீவு, ஓக 28
முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளத்தின் கீழ் உள்ள விவசாயிகள் காலபோகச் செய்கைக்குரிய விதை நெல்லை மானிய அடிப்படையில் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர்ந்து நிலவிய வறட்சி காரணமாக வவுனிக்குளத்தின் கீழ் காலபோக மற்றும் சிறுபோகச் செய்கைகள் மேற்கொள்ள முடியாத நிலை காணப்பட்டது.

இதனால் விதை நெல்லுக்கு தற்போது பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்த ஆண்டு வவுனிக்குளத்தின் கீழும் ஏனைய சிறு குளங்களின் கீழும் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் தமக்கான காலபோகச் செய்கைக்கான விதை நெல்லை மானிய அடிப்படையில் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை- ஏனைய சிறு தானியச் செய்கைகளுக்குரிய விதைகளையும் பெற்றுத் தருமாறு அவர்கள் கோரியுள்ளனர். (த-55)

# யானைகளால் பயிர்கள் நாசம்



கோப்புப்படம்

கிளிநொச்சி, ஓக 28
துணுக்காயின் பழைய முறிகண்டி, ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான் ஆகிய பகுதிகளில் யானைகளின் தொல்லைகளால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பழைய முறுகண்டிக் குளத்தின் கீழ் 38 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கையை இலக்கு வைத்து பெரும்பாலும் மாலை 4 மணியளவிலேயே யானைகள் வயல்களுக்குள் இறங்கி விடுவதாகவும், யானைகளை விரட்டுவதற்கு விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை- பழைய முறிகண்டிக் கிராமத்துக்கும் அம்பலப்பெருமாள், கோட்டைகட்டியகுளம் ஆகிய கிராமங்களுக்கிடையிலான 3 கிலோ மீற்றர் பாதையில் யானைகளின் தொல்லை அதிகரித்திருப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

புத்துவெட்டுவான் மருதங்குளத்தின் கீழ் 77 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டுள்ள நெற்செய்கையை இலக்கு வைத்து யானைகள் அடிக்கடி குடி மனைக்குள் வருவதாகவும் மக்கள் கூறினர். (த-18)

# அதிக விலையில் பொருள்கள்; 12 வர்த்தகர்களிடம் தண்டம் அறவீடு




கிளிநொச்சி,ஓக.28
கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்கக் கூடுதலான விலைக்குப் பொருள்களை விற்ற வர்த்தகர்களிடமிருந்து கிளிநொச்சி நீதிமன்றத்தால் தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரில் வர்த்தக நிலையங்களை நடத்தி வரும் 17 வர்த்தகர்கள் பொருள்களை கட்டுப் பாட்டு விலையிலும் பார்க்க கூடுதலான விலைக்கே விற்றனர் என்ற குற்றச் சாட்டில் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

வழக்குகளை விசாரித்த நீதிவான் எம்.ஐ. வகாப்தீன் 17 வர்த்தகர்களையும் தலா ஆயிரம் ரூபா வீதம் தண்டப் பணம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (த-18)



Anchor
உங்களுக்கு நல்வாழ்வையும், போஷாக்கினையும்
வழங்குவதே எனது தலையாய கடமை.....
அன்னையின் அன்பு தூய்மையானது, தனது பிள்ளையின் நல்வாழ்விற்கு அவர் எப்போதுமே முதலிடம் கொடுக்கின்றார். தனது பிள்ளைக்கு எப்போதும் மிகச் சிறந்தவற்றையே தெரிவுசெய்கின்றார்.
இந்த அதிவிசேடமான அன்பைப் போற்றும் வகையில் உங்களுடைய கண்மணிகளுக்கு அதியுயர் தரத்திலான பாலை வழங்கும் உத்தரவாதத்தில் அங்கர் மட்டற்ற அளவில் கவனம் செலுத்திவருகின்றது.
...அதனாலேயே அதிசிறந்த தரத்திலான, போஷாக்கு
நிரம்பிய அங்கர் பாலை நான் தெரிவுசெய்கின்றேன்.
எங்களுடைய உறுதிமொழியின் 6 படிகள்
நியூசிலாந்து பாலின் நலச்செழுமை
1
சுத்தமான காற்றுக்கும், தூய்மையான தண்ணீருக்கும் பெயர்போன நியூசிலாந்து நாட்டின் பசுமையான மேய்ச்சல் தரைகளில் சுதந்திரமாக மேயவிடப்படுகின்ற பசுக்களில் இருந்து அங்கர் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது.
பால் கறக்கும் போது மிகச் சிறந்த தரக்கட்டுப்பாட்டு நடைமுறைகள்
2
உலகத்தரம் வாய்ந்த தரக்கட்டுப்பாட்டு நடைமுறைகளின் கீழ் பால் கறக்கப்படுகின்றது. இயந்திரத்தொகுதிகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பில் ஆண்டுதோறும் 2,000 இற்கும் மேற்பட்ட கணக்காய்வுகள் எம்மாலும், ஒழுக்காற்று அதிகார சபைகளாலும், வாடிக்கையாளர்களாலும் மேற்கொள்ளப்படுகின்றன.
அதிநவீன பால் சேகரிப்பு நடைமுறை
3
500 வரையான அதிநவீன தாங்கிகள் பாற்பண்ணைகளிலிருந்து தினசரி பாலை நேரடியாகச் சேகரிக்கின்றன. பால் ஏற்றப்படுவதற்கு முன்னர் ஒவ்வொரு கொள்கலன் தாங்கியும் சோதனை நடைமுறைகளுக்கு உள்ளாக்கப்படுவதுடன், தொழிற்சாலைக்கு பால் எடுத்துச் செல்லப்படும் வரை அதனை குளிரூட்டிப் பேணுகின்றது.
பாலின் ஒவ்வொரு துளியும் தூய்மையானது. உயர் தரம் கொண்டது
4
பால் சேகரிக்கப்படும் இடத்திலிருந்து அது எமது விற்பனை நிலையங்களை எட்டும் வரை 300 இற்கும் மேற்பட்ட வேறுபட்ட சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டு உயர் தரமும், போஷாக்கும் உறுதிசெய்யப்படுகின்றது.
உலகெங்கிலும் கிடைக்கும் அதியுயர் தரம் கொண்ட பால்
5
Anchor
நியூசிலாந்தில் ஆண்டுதோறும் 15 பில்லியன் லீட்டர்களுக்கும் அதிகமான பால் பெறப்பட்டு உலகெங்கிலும் 100 இற்கும் அதிகமான நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுகின்றன.
நலச்செழுமையின் வழித்தடத்தை கண்டறியும் வசதி
6
Anchor
அங்கர் பாலின் ஒவ்வொரு பொதிக்கும் தனித்துவமான இலக்கக் குறியீடு ஒன்று பொறிக்கப்படுகின்றது. இதன் மூலமாக அதன் தரத்தை பேணுவதற்கு அது எங்கே, எப்போது உற்பத்தி செய்யப்பட்டது என்பதைக் கண்டறியமுடியும்.
கேளுங்கள்
அங்கர்™ இம்
(011) 2 468 468
ஒவ்வொரு துளிக்கும் உத்தரவாதம்
நிரூபிக்கப்பட்ட போஷாக்கு



# கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு ஸ்ரீ மக

# நூதன பஞ்சதள ராஜகோபுர மஹா கும்

### குருவின் ஆசிச்செய்தி



"உள்ளம் பெருங்கோயில்
ஊனுடம்பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுர
வாசல்"

எனும் திருமூலரின் திருமந்திரத்திற்கு அமைய இராஜ கோபுரம் என்பதன் தத்துவச் சிறப்பை விளங்கிக் கொள்வதோடு, யாழ் குடாநாட்டின் கோண்டாவில் மேற்குப் பகுதியில் வீற்றிருந்து அடியார்களிற்கு வேண்டிய வரங்களை அளித்து திருவருள் புரியும் காளிகோயில் என விளங்கும் மஹா கணபதிப்பிள்ளையாரிற்கு இன்றைய நன்நாளில் கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ்வாலயத்தில் பஞ்சதள இராஜ கோபுரமானது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வசிக்கும் விநாயக அடியார்களின் பங்களிப்பினால் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவருக்கும் காளி அம்பாளினதும், விநாயகப் பெருமானினதும் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

மேலும் "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" எனும் வாக்கிற்கிணங்க கோயிலுக்குள் சென்று முறைப்படி வழிபட இயலாதவர்களும்கூட கோபுரத்தைக் கண்டதும் தம்மை அறியாமலேயே கைகூப்பித் தொழுவதைக் கொண்டு இதன் சிறப்பை அறிய முடிகிறது.

எனவே எமது ஆலயத்தில் பஞ்சதள இராஜகோபுரம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறும் இவ்வேளையில் அனைவருக்கும் சுபீட்சமான வாழ்வும், நிம்மதியும் கிடைக்க இறைவனின் ஆசிவேண்டி அமைகின்றேன்.

பிரம்மஸ்ரீ சோ.பாலகிருஷ்ண குருக்கள்
(ஆலய நித்தியகுரு)

### வாழ்த்துச் செய்தி



கோண்டாவில் மேற்கு மஹா கணபதிப் பிள்ளையார் (காளி கோயில்) இராஜகோபுரமும், மஹோற்சவத்தினையும் முன்னிட்டு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதற்கு சந்தர்ப்பம் கிட்டியமையையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

தான்தோன்றியான காளிஅம்பாள் வீற்றிருக்கும் திருக்கல்லின் அருகில் அமையப் பெற்றுள்ளதால், மூலஸ்தானத்தில் மஹா கணபதி மூலமூர்த்தியாக வீற்றிருப்பினும், சிறியோர் தொடக்கம் முதியோர் வரையில் இக்கோவிலை "காளி கோயில்" என்றே அழைக்கின்றனர். சொல்வழிக் கதைகளை நோக்கும் போது இவ்வாலயம் பழைமைமிக்கதாகத் தெரிய வருகிறது.

1956ஆம் வருட இறுதியில் மஹா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு 1957ஆம் வருடம் பத்து தினங்களாக திருவிழாக்கள் நடத்தப்பட்டுள்ள இத்திருத்தலத்தில், மீண்டும் பாலஸ்தாபனம் செய்யப்பட்ட நிலையில் 1970ஆம் வருடமும், பின்னர் 2008ஆம் வருடமும் மஹா கும்பாபிஷேகங்கள் நடத்தப்பட்டுள்ளன.

பின்வந்த காலங்களில் கட்டுத் தேர்த் திருவிழா நடைபெற்று வந்த நிலையில், 1985 ஆம் வருடம் சித்திரத்தேர் வீதியுலா விடப்பட்டுள்ளது.

பல்வேறு அற்புதங்கள் கொண்டதாக அமையப் பெற்றுள்ளதாக பக்தர்களால் போற்றப்படுகின்ற மஹா கணபதிப் பிள்ளையார் (காளி கோயில்) இராஜகோபுரக் கும்பாபிஷேகமும், மஹோற்சவமும் இம்முறையும் சிறப்புறவும், அம்மன் அருள் அனைத்து அடியார்களுக்கும் கிட்டவும் வேண்டுகின்றேன்.

இவ்வாலயம் மற்றும் ஆலய இராஜ கோபுரமும், மஹோற்சவமும் சிறப்புற அனைத்து வழிகளிலும் உழைத்து வந்துள்ள சகலருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டக்ளஸ் தேவானந்தா (பா/உ) செயலாளர் நாயகம் - ஈ.பி.டி.பி
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும்
சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் (FRK/T.S)

### கோபுர தரிசனம் கோடி புண்ணியம்



யாழ்ப்பாண நன்நகரின் வடபால் சைவமும், தமிழும் சிறந்து விளங்கும் கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு என்னும் திவ்விய திருப்பதியில் வேண்டுவார் வேண்டுவனவற்றை ஈந்து அருளும் புராதன பழைமையும் அமைந்த காளியம்மனுடன் கூடி அருள் பொழியும் முதற்கடவுளாகிய மஹா கணபதிப் பிள்ளையார் பெருமானுடைய பஞ்சதள கோபுர கும்பாபிஷேகம் நடைபெறும் இந் நன்நாளில் மக்களுக்கு எனது நல்லாசிகளும் ஆசிகளும் உரித்தாகுக.

இப்புனிதமான ஆலயத்திற்கும், எனக்கும் கடந்த ஐம்பது ஆண்டுகளாக தொடர்பு இருந்தது. இவ்வாலயம் இவ்வூர் மக்களாலும் பரிபாலகராலும் பல இலட்சம் ரூபா செலவில் ஆகம முறைப்படி புதிதாக பெரிதாகக் கட்டப்பட்டு அடியேனால் கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து இக்கோயிலின் பிரதம குருவாக இருந்து செய்து வந்தேன். இதற்கிடையில் பல திருப்பணிகள் நிறைவுபெற்று புதிய சித்திரத்தேரும் வீதிவலம் வந்த காட்சியும் கண்டு களித்தோம். இவற்றுக்கும் மேலாக ஊர் அடியார்கள் அம்பிகையின் மேலும், விநாயகப் பெருமான் மேலும் மிகுந்த பக்தியும், நம்பிக்கையும் ஆன்மீக வளர்ச்சியும் மேலோங்கிய காரணத்தாலும் நாதஸ்வர தவில் மேதைகளும், வேதம் ஓதும் அந்தணர்களும் வழிவழியாகத் தோன்றி இசைகள், ஒலிகள் நிறைந்த தெய்வீகப் பொலிவுடன் சிறந்து விளங்குகின்ற நிலையில் இக்கோயிலுக்குப் புதிதாக ஐந்துதள கோபுரம் அமைவதென்றால் தெய்வசக்தி என்றே கூறலாம்.

வானளாவிய ஐந்துதள கோபுரம்
ஸ்தூலலிங்க தரிசனமாகும்.

எனவே இன்றைய தினம் எமது ஆன்மீக ஒளி எல்லோருக்கும் சென்றடைய வேண்டுமென நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

"சர்வே ஜனக சுகினோபவந்து"

சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள்

### இறைவனின் திருவடிகளே கோபுரம்



"மஹா சதாசிவாக்யஸ்ய பாத ஸ்தானம், துகோபுரம்" என்பது ஆகம வாக்யம் சதாசிவனுடைய பாதஸ்தானமாக, கணிக்கப்படுவது இராஜகோபுரம். கோபுரத் திருப்பணி நிறைவெய்தியவுடன் தான் ஓர் ஆலயம் பூரணத்துவம் பெறுகிறது. நான்கு பக்கங்களிலும் கோபுரம் அமைந்திருந்தாலும் கீழை வாயில் கோபுரம்தான். இராஜகோபுரமாக கணிக்கப்பட்டு இறைவனின் பாதஸ்தானமாக விளங்குகிறது. இராஜகோபுரங்களின் வாசலானது 9 வாசல், 5 வாசல், 3 வாசல் கொண்டவைகளாக அமைக்கப்படுகின்றன. கிட்டத்தட்ட எல்லா தெய்வங்களுடைய உருவங்களும் கோபுரத்தில் நிர்மாணிக்கப்படுகின்றன. சிற்பாசாரியர் தன்னுடைய விருப்பத்திற்கு ஏற்ற சிற்பங்களையும் இராஜகோபுரத்தில் அமைக்க சிற்பசாஸ்திரம் அனுமதியளிக்கிறது. இது தவிர ஆலயம் சார்ந்த சரித்திர சிற்பங்களையும் இராஜகோபுரத்தில் அமைக்கலாம். மூலாலயத்தில் பிம்பத்தில் இருக்கும் இறை சான்னித்யம் பலகாலம் பூஜை நடைபெறாவிடில் மூலாலய ஸ்தூபியில் சான்னித்யமாகிறது. பின்னும் பல காலம் பூஜை நடைபெறாமலிருக்கும் பொழுது அத்திருவருட் சக்தி இராஜகோபுர கலசங்களில் சான்னித்யப்படுகிறது.

மேலும் இறைவனை வெகுதூரத்திலிருந்தே தரிசிக்கக் கூடியதாக இராஜகோபுரம் அமைகிறது. மண்மாரி பொழிந்து, பிரளய நீரினால் கிராமங்கள் மறைக்கப்படும்போது, இராஜ கோபுர கலசம் வெளியில் தெரியக்கூடியதாக இருக்கும். அங்கே ஆலயம் இருந்ததற்கான அறிகுறிகளை அது நிரூபிக்கின்றது. இத்துணைப் பெருமை வாய்ந்த இராஜகோபுரம் கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு ஸ்ரீமஹா கணபதிப்பிள்ளையார் ஆலயத்தில் நிர்மாணிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெற இருக்கிறது. இந்த மஹா கைங்கரியத்திற்கு உதவிசெய்த அனைவரும் மஹா கணபதிப்பிள்ளையார் திருவருள் பெற்று சிறப்புற வாழ்வார்களாக. "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"

சிவஸ்ரீ நா.மகாதேவக்குருக்கள்
தர்ம சாஸ்தாகுருகுலம் இணுவில்.

### கோபுர தரிசனம் அடியவர்களின் வாழ்
### சுபீட்சமும் கிடைக்க அருள் கிடை



"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பது வழக்கு. மாடக்குச் சித்திரமும் மாநகர்க்கு கோபுரமும் அழகு என்கிறார் நன்னூலார். கோபுரங்கள் என்பவை ஸ்தூல மூர்த்திகள் என்கின்றன வேத ஆகமங்கள். திருமூலரும்

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு
ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர
வாசல்... என்றார்.

கோபுரத்தின் கீழே எங்காவது நின்று
உள்ள கதைகளை சுமார் [illegible] நிமிடங்கள்
கொண்டேயிருந்தால் கழுத்துப் பாகம்
அங்குள்ள தைராய்டு, பாரா தைராய்டு சுரப்
இரத்தோட்டம் நன்கு நடைபெறுகின்றது
சக்தியை உட்கொள்ளும் வாய்ப்பு இதனால்
கிறது என்றும் யோகாசனத்தில் மச்சாசன
தனுராசனம், உசர்பாசனம், ராஜகபோட்டா
சமம் என்றும் ஆஸ்துமா, ஒற்றைத் தலைவ
இருமல், நெஞ்சு வலி, சைனஸ் போன்ற நோ
வியத்தகு அறிவியல் உண்மையும் இதனால்

ஆசார அனுஸ்டான பற்றும் சைவத்
வலுக்குன்றாது வாழும் கோண்டாவில் மேற்
வாழும் மக்களுக்கு கோபுர தரிசனம் கிடை
அம்பாளின் திருவருள் கீர்த்தியாகும். கோபுர
அடியவர்களின் வாழ்வு உயர்வுகள் பெற்று
சுபீட்சமும் கிடைக்க சர்வதேச இந்து மதகு
வாழ்த்துகின்றேன் ஆசிகள் கூறுகின்றேன்.

சிவஸ்ரீ
(தலைவர், சர்வதேச இந்துமத

### அழகை வழங்கும் இராஜகோபுரம்



இலங்கையின் வடபால் புகழ்பூத்த பல கோயில்களுள் ஒன்றான கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோயிலில் அழகிய இராஜகோபுரம் ஒன்று அமைக்கப்பெற்று கும்பாபிஷேக நிகழ்வுகள் நடைபெறுகின்ற இவ்வேளையில் இக்கும்பாபிஷேக மலருக்கான ஆசிச்செய்தி ஒன்றினை வழங்குவதில் பெரும் மகிழ்வெய்து கின்றேன்.

ஒரு கோயிலுக்கு அழகையும் மாட்சியையும் அள்ளி வழங்குவது அதன் இராஜகோபுரமாகும்.

அந்த வகையில் கோண்டாவில் வாழ் மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து இந்த இராஜ கோபுரத்தை அமைத்திருப்பது மிகவும் பெருமைக்குரியது.

ஸ்ரீ மஹா கணபதிப் பிள்ளையார் அருளாட்சியின் கீழ் அனைத்து அடியவர்களும் நோய் நொடியின்றிச் சிறப் புடன் வாழ இறைவனை வாழ்த்தி வணங்குகின்றேன்.

முன்னாள் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்,
வடமாகாண சபை,
யாழ்ப்பாணம்.

### கஜமுகனின் அருள் கிடைக்கட்டும்



எங்கும் நீக்கமற நிறைந்து விளங்கும் இறை சக்தியானது ஆன்மாக்கள் மீது அருள் புரிவதற்காக பல்வேறு இறைமூர்த்தி கொண்டு வீற்றிருக்கும் இடம் ஆலயமாகும். இப்படியான ஆலயங்கள் அமைக்கப் படும் இடங்கள் புண்ணிய பூமியாக இருக்கும். ஈழவளநாட்டின் வடதிசையில் கோண்டாவில் என்னும் ஊரில் ஸ்ரீமகா கணபதிப்பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. இங்கு வீற்றிருக்கும் பிள்ளையர் இக்கிராமத்தைக் காத்து அடியவர் தம்வாழ்வில் அனைத்துச் செல்வங்களும் பொலிந்து விளங்கும் வண்ணம் திருவருள் சுரக்கின்றார்.

இவ்வாலயத்தில் காலத்திற்குக் காலம் பல்வேறு திருப்பணி வேலைகள் நடைபெற்று வளர்ச்சி கண்டு வருவது கண்கூடு. அந்த வகையில் இவ்வாலயத்திற்கு இராஜகோபுரம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்படுவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இந்த இராஜகோபுரம் கட்டுவதற்கு நிதியுதவி புரிந்த அனைத்து இறை அடியார்களிற்கும் கஜமுகனின் திருவருள் கிடைக்கட்டும் என வாழ்த்துவதோடு, மேலும் இவ் இராஜகோபுர அபிஷேகம் இனிதே நடைபெற விநாயகரை வணங்கி வாழ்த்துகின்றேன்.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

இ.இளங்கோவன்
ஆளுநரின் செயலாளர் வடமாகாணம்.

### ஆன்ம ஈடேற்றம் அருளும் விநாயகன்




நல்லூர் பிரதேச செயலகப் பிரிவி
கோண்டாவில் மேற்கு கிராமத்தில் அ
கந்தர்வளவு ஸ்ரீ மஹா கணபதிப்
கோயிலின் இராஜகோபுர கும்பாபிஷே
விழா இடம்பெறுவதை அறிந்து பெ
யடைகின்றேன்.

"கோபுர தரிசனம் கோடி புண்
கின்ற பெரியோர் வாக்கிற்கிணங்க
கோபுரங்களுடன் காட்சியளிப்பது சிறப்பானதாகும். அந்
கந்தர்வளவு ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையார் கோயிலுக்
கோபுரம் அமைக்கப்பெற்றிருப்பது இவ்வாலயத்தினைச் சூழ
சைவப் பெருமக்களின் சமயப் பற்றினை எடுத்துக் காட்டு கின்
கும்பாபிஷேகம் என்பது ஆலயக் கிரியைகளில் தலையாய
அமைவதாகும். குடமுழுக்கு எனச் சிறப்பித்துக் கூறப்படுகி
பிஷேகத்தினைக் காண்பது சைவசமயிகளின் ஆன்ம ஈடே
பெரும்பங்கு வகிப்பதாகும்.

இவ்வாறான சிறப்பு வாய்ந்த கும்பாபிஷேகக் கிரியை ந
இறைவனின் கடாட்சத்துள் மேற்படி ஆலயத்தின் பரிபாலன
கிராம மக்களின் தன்னலமற்ற பணியும் மிகவும் அவசியமாகு
கோண்டாவில் மேற்கு கிராமத்து சைவ மக்களினது பங்
இவ்வாலயத்தின் பரிபாலன சபையினரின் பெரும்பங்கு
அமைந்து தான் இந்த இராஜகோபுரம் அமைக்கப்பட்டுள்
குறிப்பிடத்தக்கதாகும்.

ஆகவே விநாயகப் பெருமானின் அருட்கடாட்
இராஜகோபுர கும்பாபிஷேகப் பெருவிழா இனிதே
எம்பெருமானை மனதில் வேண்டி எனது ஆசிகளைத் தெ
அகமகிழ்ச்சியடைகின்றேன்.

பா.செ
பிரதேச செய



# மகா கணபதிப்பிள்ளையார் (காளி கோயில்)
# கும்பாபிஷேக சிறப்பு மலர் - 29.08.2014

...யவர்களின் வாழ்விற்கு உயர்வும், ...டைக்க அருள் கிடைக்கட்டும்



...டி புண்ணியம்" ...குச் சித்திரமும் ...அழகு என்கிறார் ...கள் என்பவை ...ன்றன வேத ஆக ...யில் ஊனுடம்பு ...கு வாய் கோபுர

...ங்காவது நின்றுகொண்டு கோபுரத்தில் ... நிமிடங்கள் ...ணாந்து பார்த்துக் ...ழுத்துப் பாகம் நீண்டு விரிவடைந்து ...ரா தைராய்டு சுரப்பிகள் விரிவுபெற்று ... நடைபெறுகின்றது. அதிக பிராணா ... வாய்ப்பு இதனால் உடலுக்கு உண்டா ...சனத்தில் மச்சாசனம், புஜங்காசனம், ...னம், ராஜகபோட்டாசனம் செய்வதற்கு ... ஒற்றைத் தலைவலி, கண் நோய்கள், ...சைனஸ் போன்ற நோய்கள் நீங்கும் எனும் ...ண்மையும் இதனால் பெறப்படுகின்றது. ...ன பற்றும் சைவத்தமிழ் பண்பாடும் ... கோண்டாவில் மேற்கு கந்தர்வளவுபதி ...புர தரிசனம் கிடைக்கப் பெற்றிருப்பது ...ர்த்தியாகும். கோபுர தரிசனத்தின் மூலம் ...உயர்வுகள் பெற்று மகிழ்வும் அமைதியும் ...வதேச இந்து மதகுருமார்களது சார்பில் ...கள் கூறுகின்றேன்.

"வித்யாசாகரம்"
சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்
... சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம், யாழ்ப்பாணம்.)

## ஆசிச் செய்தி



தமிழ் மண்ணை அலங்கரிக்கின்ற திருக்கோயில்களில் இந்த ஆலயமும் ஒன்றாகும். மூர்த்தி, தலம்,தீர்த்தம் ஆகியன அமையப்பெற்று அலங்காரமாக விளங்குகின்ற திருத்தலம்.

கோபுரம் பிரபஞ்சத்தின் இயக்கத்தை விளக்குகின்றது அடுக்கடுக்காக அமைந்த தளங்கள் உலக வாழ்க்கையின் பலவேறுபட்ட தத்துவங்களையும், அனுபவங்களையும் குறிக்கிறது. இறைவனின் பலவிதமான திருவிளையாடல்கள் மற்றும் சாதாரண உலகியல் நடைமுறைகள் என்பன கோபுரத்தில் அமையும் சிற்பங்களால் குறிக்கப்படுகிறது. கீழே அகன்று மேலே ஒடுங்கிச் சென்று கலசத்திலே நிறைவுறும் வடிவமானது மன ஒருமைப்பாடும் பரம்பொருள் ஒன்றையே பற்றி நிற்கும் மனத்திண்மையும், மேலான எண்ணங்கள் ஆழ்ந்து நிற்றலும் ஆன்ம ஈடேற்றத்திற்கு அவசியம் என்பதை கோபுரம் விளக்குகிறது. "ஸ்தூலலிங்கம்" எனப்படும் கோபுரம் தூரத்திலே நின்று பார்ப்பவர்க்கு இறை உணர்வை ஏற்படுத்துகிறது. "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பது இதனாலேயே ஏற்பட்டது. கோடி என்பதற்கு புதுமை, புதியது என்றும் பொருள் உண்டு. "முடிவுறு சிகரந்தானு" என்று சேக்கிழார் புராணம் சிறப்பிக்கிறது.

"நீண்டு நெடுஞ்சாண் நிலையிலே, அதாவது மல்லாந்து படுத்திருக்கும் ஒரு மனிதனின் தோற்றமே ஆலயமாகும். இதிலே பாதமே ராஜகோபுரமாக அமைவது தத்துவம். பணிந்து பாத பூஜை செய்கின்ற பலாபலனை ராஜகோபுரம் எமக்குத் தருகிறது. "சகோபுர உற்சவம்" எனக் கூறப்படும் சப்பறத் திருவிழா ராஜ கோபுரத்தை நினைவுறுத்துகிறது. மூன்று தளங்கொண்ட ராஜ கோபுரம் முக்குணத்தையும் ஐந்து தளம் ஐம்பொறிகளையும், ஏழு தளம் ஐம்பொறிகளுடன் மனம், புத்தியையும், ஒன்பது தளம் நவ துவாரங்களையும் விளக்குகிறது. இந்த இராஜகோபுரத்தினால் எல்லா மக்களும் வழிபட்டு நன்மையடைய எல்லாம்வல்ல விநாயகப்பெருமானின், காளி மாதாவின் பாதாரவிந்தங்களை நமஸ்கரிக்கின்றேன்.

நாராயண சமர்ப்பணம் வஸ்து

பிரம்மஸ்ரீ சோ.சந்திரகாந்தக்குருக்கள்
ஸ்ரீ வெங்கடேஸ்வர மகா விஷ்ணு கோயில், தெஹிவளை.

## அருளாசிச் செய்தி



கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு பதியில் எழுந்தருளி யிருந்து அருளாட்சி புரியும் விநாயகப்பெருமானுக்கு இன்று இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். பன்னிரு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் அபிஷேகம் கும்பாபிஷேகம். இதனைப் பார்ப்பதும் செய்விப்பதும் புண்ணியப் பேறாகும். ஆலயங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகள் யாவும் ஆன்ம ஈடேற்றத்தையும் மனிதநேயத்தையும் பெற்றுத்தருவதாகும். இதனாலேயே நம் சமயத்தில் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும் "நித்தமும் எம்பிரான் கோயில் புகுக" என்றும், "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று நம் முன்னோர்கள் எடுத்தியம்பியுள்ளனர். இதனை உணர்ந்த கோண்டாவில் வாழ்மக்கள் விக்கினங்களை நீக்கும் விநாயகப் பெருமானுக்கு புதிதாக இராஜகோபுரம் அமைத்து வழிபாடு செய்வது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது. விநாயகர் வழிபாடு நம்சமயத்தில் மட்டுமன்றி ஏனைய மத மக்களின் வழிபாட்டிலும் நடைபெறுகிறது. இன்று நடைபெறும் இராஜகோபுர கும்பாபிஷேகத்தை அனைவரும் தரிசனம் செய்து மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக. நடைபெறும் கும்பாபிஷேகத்தைச் சிறப்பித்து மலரினை வெளியிடும் மலராசிரியரையும் ஊர் மக்களையும் ஆலய பரிபாலன சபையினரையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

## அருள் வாழ்த்துரை



"நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க"

"இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே"

- அப்பர் தேவாரம் -

கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு மஹா கணபதிப் பிள்ளையார் திருக்கோயிலுக்கு இராஜகோபுர கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ உள்ளமை அறிந்து மகிழ்ச்சியடைகின்றோம்.

கும்பாபிஷேகம் இனிதே நிகழ்ந்திடவும், நித்திய நைமித்திய பூசைகள் நன்முறையில் நடந்து அன்பர்கள் யாவரும் இருமை வளங்களும் சிவ பக்தியும் பெருகித் தழைத்திடவும் வேண்டி நமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீஞானமா நடராஜப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் திருவாவடுதுறை ஆதீனம்.

## அருட்கடாட்சம் அனைவருக்கும் கிட்டட்டும்



ஆலயமும் ஆலய வழிபாடும் நமது மக்களுக்கு இன்றியமையாதனவாக உள்ளன. இந்த வகையில் பசுமைமிகு தோட்டங்கள் அமையப் பெற்றுள்ள கோண்டாவில் மேற்கில் மக்க ளுக்கு அருள்பாலித்துவரும் கந்தர்வளவு ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையார் (காளி) இராஜ கோபுர கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற இருப்பது மிக்க மகிழ்ச்சிக்குரியதாகும்.

ஆரம்பத்தில் ஒரு கல் காணப்பட்டதாகவும் அதில் காளி அம்பாள் வீற்றிருந்தார் என்றும் அம்பாளை அவ்வூர் மக்கள் தமது குடும்பத்தையும், கிராமத்தையும் காத்தருள வேண்டுமென வழிபட்டு வந்தார்கள் எனவும் வரலாறுகள் கூறுகின்றன. மேலும் பல ஆண்டு களுக்கு முன்னர் ஓர் அன்பர் மூலம் வழங்கப்பட்ட வலம்புரிச் சங்கு ஆலயத்தின் மூலஸ்தானத்தில் வைத்து வணங்கப்பட்டது தொடக்கம் ஆலயம் வளர்ச்சி அடைந்துள்ளதாக அடியவர்களின் கூற்றாக அமைகிறது. அதனால் வலம்புரிச் சங்கையும் வழிபட்டு வருகின்றார்கள்.

இவ்வாறு அடியவர்களுக்கு அருள்பாலித்து பல அற்புதங்களைச் செய்துவரும் கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையார் கோயில் இன்று புதுப்பொலிவுடன் எழுந்து நிற்கும் வேளையில் அருள்நிறைந்து. ஆலயத்திற்கு நடத்தப்படும் இராஜகோபுர கும்பாபிஷேக நிகழ்வுகள் அனைத்தும் சிறப்புற நிகழவும் ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையாரின் அருட்கடாட்சம் அனைவருக்கும் கிடைக்கவும் எல்லாம்வல்ல விநாயகப் பெருமானை வேண்டி இந்நாளில் எம்பெருமானின் அருட்சிறப்புக்கள் தாங்கி வெளிவரவுள்ள இராஜகோபுர கும்பாபிஷேக மலருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுந்தரம் அருமைநாயகம்
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்,யாழ்ப்பாண மாவட்டம்.

## ...ளும் விநாயகன்

...தச செயலகப் பிரிவிற்குட்பட்ட ...ற்கு கிராமத்தில் அமைந்துள்ள ... மஹா கணபதிப்பிள்ளையார் ...கோபுர கும்பாபிஷேகப் பெரு...வதை அறிந்து பெருமகிழ்ச்சி

...னம் கோடி புண்ணியம்" என் ... வாக்கிற்கிணங்க கோயில்கள் ...ப்பானதாகும். அந்த வகையில் ...ளையார் கோயிலுக்கும் இராஜ ...லயத்தினைச் சூழ வசிக்கின்ற ...டுத்துக் காட்டு கின்றது. மேலும் ...களில் தலையாய கிரியையாக ...பித்துக் கூறப்படுகின்ற கும்பா...களின் ஆன்ம ஈடேற்றத்திற்குப்

...பிஷேகக் கிரியை நடத்துவதற்கு ...த்தின் பரிபாலன சபை மற்றும் ...கவும் அவசியமாகும். அதாவது ...வ மக்களினது பங்களிப்புடன் ...ரின் பெரும்பங்கும் ஒருங்கே ... அமைக்கப்பட்டுள்ளது என்பது

...ின் அருட்கடாட்சத்தினால் ...ருவிழா இனிதே இடம்பெற ...து ஆசிகளைத் தெரிவிப்பதில்

[illegible]
பிரதேச செயலர், நல்லூர்.

## அற்புதம் நிறைந்த ஆலயம்



ஜய வருஷம் ஆடித்திங்களில் ஈழ மணித்திருநாட்டில் வடபால் யாழ்ப்பாணத்தின் மையமாம் கோண்டாவில் மேற்கில் அமர்ந்திருந்து அடியார்க்கு அருள் பாலிக்கும் கந்தர்வளவு மஹா கணபதிப்பிள்ளையார் ஆலய இராஜ கோபுர மஹா கும்பாபிஷேக சிறப்பு மலருக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நல்லூர் பிரதேசசபையின் சார்பாக பெரு மகிழ்ச்சியடைகின்றேன். ஆரம்பத்தில் ஒரு அம்பிகை அடியவரான பெண்மணியின் விருப்புக்கமைவாக காளி கோயில் அமைக்க விரும்பி காளிகாம்பாள் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் பெயருடன் தோற்றம் பெற்று வளர்ச்சிகண்டதாகவும் இன்று இவ்வாலயம் பிள்ளையார் ஆலயம் என்று அழைக்கப்பட்டாலும் காளி கோயில் என்றே அனைவராலும் அழைக்கப்பட்டு வருகின்றது.

ஓர் ஆலயத்திற்கு அழகும் சிறப்பும் தருவது தூலலிங்கம் எனப்படும் கோபுரமாகும். அவ்வாறான அழகு தரிசனத்தைக் காணக்கண்கோடி வேண்டும். இவ் ஊர்மக்களின் பயம் போக்கி காத்தருளும் மஹாகணபதிப் பிள்ளையார் ஆலயத்தின் கோபுர திருப்பணி நிறைவடைந்து இன்றைய நன்னாளில் நைமித்திய பூஜை காண ஆரோகணித்து குடமுழுக்குக் காணவரும் அடியவர்களுக்கும் இன்னல்கள் நீங்கி இன்பங்கள் பெருகி சகல சௌபாக்கியங்களும் பெற்று நிறைவோடு அனைவரும் வாழ மஹா கணபதிப்பிள்ளையார் என்றும் அருள்புரிய வேண்டி வாழ்த்துகின்றேன்.

[illegible] தவிசாளர் நல்லூர் பிரதேசசபை

## பரிபாலனசபைத் தலைவரின் வாழ்த்துச்செய்தி



அண்டசராசரங்களையும் ஆக்கியும் இயக்கியும் வரு பவளாகிய அன்னை காளியம்மா கோண்டாவில் மேற்கில் புகையிரத நிலைய வீதியில் (இருபாலை வீதி) ஒரு கல்லில் தன்னை வெளிப்படுத்தி அடியவர்களின் நோய் மனக்கவலை தீர்த்து மனதிற்கு ஆறுதல் வழங்கி மூலமூர்த்தியாகிய ஸ்ரீ கணபதிப்பிள்ளையாருடன் சேர்ந்து அருளாட்சி செய்கின்றாள்.

இவ்வாலயத்தில் பல வருடங்களாக அடியவர்களின் கனவாக இருந்த இராஜ கோபுரம் நனவாகி பஞ்சதள இராஜகோபுரமும் இருமணிக்கோபுரமும் கண்கவரும் மணிமண்டபம் அமையப்பெற்று 28.08.2014 வியாழக்கிழமை கிரியைகளும் (29.08.2014) வெள்ளிக்கிழமை கும்பாபிஷேகமும் இடம்பெறுவதையிட்டு அடியவர்களின் ஆனந்த வெள்ளத்துடன் என்னுடைய ஆனந்தமும் கலந்திட அருள் தந்த கணபதிப்பிள்ளையாரையும் காளியம்பாளையும் இதயமலரால் அர்ச்சிக்கின்றேன். வாழ்த்துகின்றேன்.

இ.நடராசா
பரிபாலன சபைத் தலைவர்.

## சீரும் திருவும் பொலியும் கோபுரம்



ஓங்கார ரூப நின் பாதத்தாமரை பணிந்து

சீரும் திருவும் பொலிநல் கோண்டாவில் பதிதனில் வானுற அமைந்த ஸ்ரீமஹா கணபதிப்பிள்ளையார் (காளி) கோபுர கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் கோண்டாவில் இந்துக் கல்லூரித் தாய் சார்பில் அகமகிழ்வு கொள்கின்றேன்.

அங்கிங்கென்னாதபடி எங்கும் வியாபகமாக எழுந்தருளி அருள்பாலிக்கும் நம் மஹா கணபதி அனுக்கிரகம் இருந்தால் எக்காரியமும் தங்குதடையின்றிப் பூரணம் பெறும். தான்தோன்றி காளியம்பாளுடன் தொன்மை வளர்ச்சியுடைய இவ்வாலயம் இன்று இராஜ கோபுரத்துடன் மேலும் நிமிர்ந்துநின்று அருளாட்சி நடத்துகிறார்.

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் எனும் முதுமொழியில் கோயில் என்பது பிள்ளையார் கோயிலையே குறிக்கின்றது. எனவே தான் பிள்ளையார் நம் வீடுகளிலும் ஆற்றங்கரை அரச மரத்தடி, குளக்கரை, தெரு எங்கும் வைத்து வணங்குகின்றனர். தற்கால தகவல் தொழில் நுட்பம், கணினி வலையமைப்பு, இணையத்தளங்கள், செய்மதி, தொலைக்காட்சி, ஐபாட் போன்றவை நம் வீடுகளிலெல்லாம் வந்து வாழ்க்கை முறையையே மாற்றிக் கொண்டிருக்கும் வேளையில் தீயவற்றை வேறுபடுத்தி நல்லவற்றையும் பகுத்துணர்ந்து மாண்புடைய மனிதராக மாசுமறுவற்ற மேன்மை பெற்று நீதிவழி நிற்க எல்லாம் வல்ல கணபதி தாள் பணிவோமாக.

அதிபர் K.K.[illegible]
யா/கோண்டாவில் இந்துக்கல்லூரி

## வாழ்த்துச் செய்தி



அருள்மிகு எல்லாம்வல்ல கந்தர்வளவு ஸ்ரீ மஹா கணபதிப் பிள்ளையார் காளிகோயில் அடியார்களே "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பர். ஓர் ஆலயத்தில் அழகான அம்சம் அதன் இராஜகோபுரமாகும். மிகவும் உயரமான அழகான பகுதியும், வெகுதொலைவில் உள்ளவர்களுக்கு ஆலயம் இருப்பதை அடையாளம் காட்டி தொலைவிலேயே ஆண்டவனை நினைக்க வைப்பதும் இந்த இராஜகோபுரமாகும். இறைவனுடைய பல்வேறு திருவிளையாடல்களைப் பிரதிபலிக்கும் சிற்பங்கள் இந்த இராஜகோபுரத்தை அலங்கரிக்கின்றன.


மேலும் இக்கோபுரம் அமையக் காரணமாக இருந்த நம் ஊரவர்கள் எல்லோரும் இராஜகோபுர மஹா கும்பாபிஷேக பெருவிழா நடைபெறும் இந்நன் நாளில் நாம் ஒரு கணம் எமது பழைய வரலாறுகளையும் சிந்தையில் இருத்தி வாழ்த்தி மகிழ்ந்து சீரிய வழியில் மேன்மேலும் திருத்தொண்டுகள் பலசெய்து இன்புற்று வாழவேண்டும் என்பதே எமது பணிவன்பான விண்ணப்பமும் பிரார்த்தனையுமாகும்.

"தெய்வத் தொண்டே தமது கடன் என நினைத்துச் செயற்பட்டால் ஆலயங்கள் சிறப்பாக அமையும் என்பது தெய்வ நியதி"

செல்வி ஞானலோஜினி சிவஞானம்
கலட்டி லேன், கோண்டாவில்.

(39647)(7.6.3)

# மிகவும் உண்மை போல் இருக்கும் தகவல்கள் வழமையாக நம்பத் தகுந்தனவாக இருப்பதில்லை!



## ரூ.30,000 மட்டுமே கொண்டு உலகளவில் பிரசித்தி பெற்ற நிறுவனத்துடன் இணைந்து மேலும் பணம் சம்பாதிக்கக் கூடிய அரிய வாய்ப்பு!

வீட்டிலிருந்து கொண்டே உங்கள் வசதிப்படி வேலை செய்து மாதமொன்றிற்கு ரூ.25,000 க்கு மேலான பணத்தைச் சம்பாதிக்கலாம்.

வேலை விபரம்: உலகளவில் பிரசித்த பெற்ற நிறுவனம் ஒன்றில் ஒரு தொகையான பிரத்தியேகப் பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட பிரதிநிதி.

தகைமைகள்: க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் 3 பாடங்களில் சாதாரண சித்தி. வேலை முன் அனுபவம் தேவையில்லை.

பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வது மற்றும் இந்த பிரத்தியேக நிறுவனத்துடன் இணைய உங்கள் நண்பர்களை அறிமுகப்படுத்துதல் மூலமாக நீங்கள் மேலும் சம்பாதிக்க முடியும்.

மேற்கூறப்பட்ட தகவல் ஒரு **உதாரணமாகும்!**

பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்கள் பல வடிவங்களில் உங்கள் வழியில் வரலாம்.

**அவை உங்களை ஏமாற்றுபவை மட்டுமல்ல அவை உங்கள் குடும்பங்களின் மகிழ்ச்சி மற்றும் நிம்மதியையும் அழிக்கின்றன!**

**நன்மையான மற்றும் பாதுகாப்பான வாய்ப்புக்களைத் தெரிந்தெடுத்து கஷ்டப்பட்டுச் சம்பாதித்த உங்கள் பணத்தைப் பாதுகாருங்கள்!**

### பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களின் அடிப்படை அம்சங்கள் உள்ளடக்குபவை

- பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது அல்லது பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரிக்கும் பொழுது உயர்ந்தவொரு வருமானம் கிடைக்கும் என உறுதிமொழி வழங்குதல்.
- நம்பமுடியாத உயர் வருமானங்கள் மற்றும் ஏனைய நன்மைகள் பற்றிய தவறான உறுதிமொழிகளை அடிக்கடி மேற்கொள்ளுதல்.
- திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் பொருட்களுக்குத் திடமான சந்தைக் கேள்வியோ மற்றும் இரண்டாந்தரச் சந்தையோ இல்லாதிருத்தல்.
- பொருட்களுக்கு உத்தரவாதங்களோ அல்லது விற்பனைக்குப் பிந்திய பணிகளோ வழங்கப்படுவதில்லை.
- திட்டத்திலிருந்தான வருமானம் பங்குபற்றுபவரின் விற்பனை அளவைப் பொறுத்தில்லாமல் அவன்/ அவள் கொண்டுவரும் புதிய பங்குபற்றுநர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வேறுபடுதல்.
- பொதுவாக உயர்ந்த நுழைவுக் கட்டணத்தைக் கொண்டிருத்தல்.
- பங்குபற்றுநர் ஒருவர் திட்டத்திலிருந்து விலகிச் செல்லும் போது விற்பனை செய்யப்படாத மிகுதிப் பொருட்களை மீண்டும் வாங்கும் கொள்கை இல்லாதிருத்தல்.
- பொருட்களை விற்பனை செய்வதில் சிறிதளவு கவனத்தைக் கொண்டிருப்பதுடன் மேலும் புதிய பங்குபற்றுநர்களைச் சேர்ப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருத்தல்.
- மிகுந்த வருமானம் கொண்ட பேரம்பேசுதல் மூலம் புதிய பங்குபற்றுநர்களை அவசரமாகத் திட்டத்தில் சேர்ப்பதுடன் பங்குபற்றுநர்களை இரண்டாந்தரம் சிந்திப்பதற்குக் கால அவகாசம் வழங்காமல் இருத்தல்.
- திட்டத்தில் சேருவதற்கான வழமையான அழைப்பு, சிறிதளவு அல்லது முன்அனுபவம் அற்ற அல்லது தகைமைகள் தேவைப்படாத இலகுவானதொரு வேலையாக இருத்தல்.
- பொதுவாகத் திட்டத்தில் சேருவதற்கான கோரிக்கையைப் பெருமளவு உதாசீனம் செய்யமுடியாத நம்பிக்கையுள்ள ஒரு நண்பன் அல்லது குடும்ப அங்கத்தவர் ஒருவர் தான் உங்களைத் திட்டத்தில் இணைப்பதற்கு முயற்சி செய்பவராக இருத்தல்.
- திட்டம் தொடர்பான தகவல்கள், அதன் இருப்பிடம், தொடர்பு கொள்ளும் விபரங்கள் என்பவற்றைப் பொதுவாக அணுகமுடியாதிருத்தல்.

குறிப்பு: பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களைத் தொடங்குதல் மற்றும் பங்குபற்றுதல் என்பன சட்ட விரோதமானதாகும். ஒருவர் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் கடூழியச் சிறைத்தண்டனை மற்றும்/ அல்லது அபராதம் என்பவற்றிற்கு உட்படுத்தப்படுவார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு:
தொலைபேசி: 2477100, 2477120, 2477129, 2398539 தொலைநகல்: 2477711
மின்னஞ்சல்: banksup@cbsl.lk

# அதிக சிக்கனத்தைக் கடைப்பிடிப்பவர்கள் பெண்களே!



பா. யசோதா, இணுவில்.

விமர்சனம்

சேமிப்பது என்பது புதியவைகளைத் தேடிக் கொள்வதால் மட்டுமல்ல இருக்கிறதை சிக்கனமாகப் பயன்படுத்துவதிலும் தங்கியுள்ளது.

சேமிப்புக்கான படிக்கல்லே சிக்கனமாகும். "சேமிப்பு இல்லாத குடும்பம் கூரையில்லாத வீடு" என்று பாடசாலையில் படிக்கிற காலத்தில் தலையில் குட்டி சொல்லித் தந்துவிட்டு, படிப்பு முடிந்த பிறகு "கடன் வாங்காத குடும்பம் கரையிலே நிற்கிற கப்பல்" என்று வாழ்க்கைக்கு தலைகீழ் பாடம் நடத்துவது இன்று பெரும்பாலும் பலருக்குப் பொருந்திவிட்டது.

வரவுக்குள் செலவு செய்கிற பொழுது வாழ்க்கை கடினமாக இருக்குமே தவிர கஷ்டமாக மாறாது. வரவை மீறி கடன் வாங்கியாவது செலவு செய்வது வழக்கத்தில் நமக்கு கஷ்டத்தை மட்டுமல்ல பெரும்பாலும் நட்டத்தையே தரக்கூடியது.

கணவன் கொடுக்கும் பணத்தில் குடும்பச் செலவையும் பார்த்து பிள்ளைகளையும் படிக்க வைத்து சிறுகச் சிறுக பணம் சேர்த்து வைக்கின்றனர். இதேவேளை நம் இளைஞர்களை வெளிநாட்டு மோகம் சூழ்ந்து அவர்களை ஆட்டிப் படைக்கின்றது. அதனால் அவர்கள் பல வழிகளிலும் பணத்தைப் பெற்று வெளிநாடு போவதாகக் கூறி களவாக இடைத்தரகர்கள் மூலமாக செல்ல முயன்று பின்னர், பிடிபட்டு பயணம் தடைப்படுவது மட்டுமல்லாமல் பணத்தையும் இழக்கின்றார்கள்.

அதேவேளை வேறும் சில ஆண்கள் தாம் "பிஸ்னஸ் செய்கிறோம் பிஸ்னஸ் செய்கிறோம்" எனக் கூறி தமது தொழில்களை ஒழுங்காகச் செய்யாமல் பணத்தை தாறுமாறாக கரைக்கின்றார்கள்.

ஆனால் சிக்கனமின்றிய செலவு வாழ்க்கையை, வாழும் முறையை தரங்கெட்டதாக மாற்றி இருக்கிறதே என்பதே உண்மை. விரலுக்கு ஏற்ற வீக்கமாகியிருக்கிற பொழுதே அவரவர்களின் வாழ்க்கை சக்கரம் புரளாமல் நீண்டு ஓடமுடியும். சிக்கனமின்றிய பொருளாதார முன்னேற்றம் என்கிற மாரீசமான் நம்முடைய நிம்மதி என்கிற சீதையை களவாடிப் போவதுதான் நாம் கண்ட உண்மை. ஆகவே அதிக சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது ஆண்களைக் காட்டிலும் பெண்களே.

> கணவன் கொடுக்கும் பணத்தில் குடும்பச் செலவையும் பார்த்து பிள்ளைகளையும் படிக்க வைத்து சிறுகச் சிறுக பணம் சேர்த்து வைக்கின்றனர். இதேவேளை நம் இளைஞர்களை வெளிநாட்டு மோகம் சூழ்ந்து அவர்களை ஆட்டிப் படைக்கின்றது.

நீங்களும் எழுதலாம்....

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்

**அதிக சிக்கனத்தைக் கடைப்பிடிப்பவர்கள்**

**ஆண்களா? பெண்களா?**

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் இளவல்கள் வட்டம் என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-.............................................

முகவரி :-...................................

............................ திகதி

............................ கையொப்பம்

**இளவல்கள் வட்டம்** ,
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## ஆண்களின் அநாகரிகம்

வேட்டி உடுத்து- வேண்டியோருக்கு
வேண்டியது கொடுத்து
வில்லங்கங்களைத் தீர்த்து
வீராப்பாக திரிந்தார்கள்- அன்று
வாழ்ந்த ஆண்கள்...!

இன்றோ....?
கலர்கலராக உடை உடுத்து
கலகலப்பாக நடைபோட்டு
தம் தலையிலே சடை வளர்த்து
எமது பண்பாட்டுக்கு விடை கொடுத்து
வினையாகின்றனர்....!!

கையிலே 'ஐபோன்'
பையிலே 'ஏ.ரி.எம்' காட்
தையிலே பல்சரில் பறந்து
சித்திரையில் அப்பாச்சியில் மிதந்து
தடம் மாறுகின்றனர்....!!

தலையிலே மூன்று கோடு
தாடியிலே இரண்டு கோடு
கழுத்திலே நான்கு வெள்ளி 'செயின்'
காதிலே ஒரு கடுக்கண்....!!
என்னைய்யா ஆண்கள்...?

போகும் போக்கில்- எம் தமிழ்
கலாசாரத்துக்கு பாடை கட்டி
காசுக்கு விற்றுவிடுவார்கள்....!!
ஆண்டவனே உன்னை
வேண்டுகிறேன்- எம்
கலாசாரத்தின் நிலைத்திருப்புக்காக....!

தயாபாரன். மோகனரூபன். விக்ரோரியா கல்லூரி

# "இளைஞனே கொட்டிடு வீரமாய் எமது கனவுகள் நாளைய வெற்றி என்று..."



இ. மத்தியூஸ் டியோனி.

(கடந்தவாரத் தொடர்ச்சி....)

சினிமாக்களும் சின்னத்திரைகளும் சிந்தனை திசை திருப்பி விடும் அதனையும் தாண்டி வெற்றி நோக்கி கனவு காண வேண்டும். திரும்பும் பக்கமெல்லாம் பாலியல் காட்சிகளுக்கு பஞ்சமில்லை இளைய கனவுகள் இவைக்கு இரையாகக் கூடாது! நேற்றைய எமது சிந்தனைகள் சரியாக இருக்கலாம். நாளைய கனவுகள் மாறிப் போனால் லட்சியங்கள் எட்டாமல்போய் விடும்.

பின்னர் முட்டி மோதியும் பயனில்லை என்றாகி விடும். புளித்துப் புரையோடிப் போன வாழ்வியல் நடைமுறைக்கு ஒவ்வாத எதிர்காலஎண்ணக் கருவுக்கு கொஞ்சமும் நெருக்கமற்ற, நெறிகள் என்ற போர் வையில் கனவுகளுக்கு கடிவாளம் போடும் பழைமைகளை விட்டு விலக்க வேண்டும். வெற்றியை நோக்கிய பயணத்தின் முதற்பயணம் "தேடல் ஆர்வத்தின் பயணம்!"

வெற்றி என்பது எதிர்கால இலக்கு! இந்த இலக்கினை அடைய ஆக்க பூர்வமான எதிர்கால சிந்தனைகள் இன்றியமையாத ஒன்றாகும். வெற்றியின் விளைவுகள் வலுவானவையாக இருக்க அதனை அடைகின்ற முறைகளிலே கவனம் மிக முக்கியமாகும்!

இளைஞர்களின் எண்ணக் கருக்களை கடந்த காலங்களில் எமது சமூகம் உள்வாங்காமல் தொடர்ச்சியாகத் தட்டிக் கழித்தலும், கனவுகள் கலைக்கப்படுதலும், எமது மூத்த தலை முறையினரால் தொடர்ச்சியாக விடப்படும் தவறாகும். இளைஞர்களின் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு செயற்பட சமூகம் முன்வரவேண்டும். வெற்றிக்கான சந்தர்ப்பங்களை அமைத்துக்கொள்ள வேண்டும்.

எண்ணங்களுக்கான, கனவுகளுக்கான புதிய மாற்றங்களுக்கான, வாசல்களை திறந்து விடுங்கள், இளைஞர்களே உங்கள் வெற்றியை நோக்கிய பயணத்தில் இலக்கை அடைய கனவு காணுங்கள்.

கனவுகள் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளுதலுக்கு உடன்படுகின்ற போது வெற்றி உங்கள் கையில்! இனியொரு விதி செய்வோம்.

> எதிர்கால எண்ணக் கருவுக்கு கொஞ்சமும் நெருக்க மற்ற, நெறிகள் என்ற போர்வையில் கனவுகளுக்கு கடிவாளம் போடும் பழைமைகளை விட்டு விலக்க வேண்டும். வெற்றியை நோக்கிய பயணத்தின் முதற் பயணம் "தேடல் ஆர்வத்தின் பயணம்!"

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தொழில் உற்பத்திப் பெருக்கம் வடக்கின் மிக அவசர தேவை

இரண்டு வருடங்களாகச் சரிவிலேயே பயணித்துக்கொண்டிருந்த வடக்கின் பொருளாதாரம் கடந்த இரு மாதங்களாக நிமிரத் தொடங்கியிருக்கிறது என்கிற தெம்பூட்டுகிற செய்தி வந்திருக்கிறது. இந்த வளர்ச்சி நீடித்து நிலைக்கக்கூடியது என்று மத்திய வங்கியின் யாழ்ப்பாணக் கிளை அலுவலகம் எதிர்வு கூறியிருப்பதும் ஆறுதலளிக்கிறது.

இருந்தாலும் வடக்கில் - போர் முடிந்து 5 ஆண்டுகள் கடந்த நிலையிலும் - ஒரு உற்பத்தித் தொழிற்சாலைதானும் இதுவரையில் ஆரம்பிக்கப்படவில்லை என்பதும் தெற்கில் உற்பத்தியாகும் பொருள்களுக்கான சந்தையாக மட்டுமே வடக்கு மாறியிருக்கிறது என்பதும் கவலையளிக்கும் விடயங்களே.

தெற்கின் நுகர்வுச் சந்தையாக வடக்கு எவ்வளவு தூரத்துக்கு மாற்றமடைந்துள்ளது என்பதை நடந்து முடிந்த நல்லூர்த் திருவிழாவிலும் வெளிப்படையாகக் காணமுடிந்தது. வருங்காலங்களில் இந்த நிலைமை தொடர்வது வடக்கை பொருளாதார ரீதியிலும் அடிமைத்தனத்துக்கு கொண்டு சென்று விட்டுவிடும். ஒவ்வொன்றுக்கும் நாம் தெற்கையே எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டிய நிலைமை ஒன்று ஏற்படும். இது ஆபத்தானது.

ஓரளவுக்கான விவசாய உற்பத்தி மற்றும் கடலுணவு உற்பத்திகளைத் தவிர்த்து கைத்தொழில் உற்பத்திகள் எவையும் இங்கு இல்லை என்பதே தற்போதைய நிலைமை. மிகக் காலம் தாழ்த்தி, அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை இந்திய அரசின் உதவியுடன் நேற்றுத் திறக்கப்பட்டிருக்கிறது. ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூச் சர்க்கரை என்ற மாதிரி, இப்போதாவது இதுவாவது திறக்கப்பட்டதே என்று திருப்திப்பட்டுத் தானாக வேண்டும். அதேநேரத்தில் இந்தக் கைத்தொழிற்பேட்டையைப் பயன்படுத்தி கைத்தொழில் உற்பத்திகளை விருத்தி செய்வதில் அதிகூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மூன்று நிறுவனங்கள்தான் அங்கு முதற்கட்டமாக உற்பத்தியை ஆரம்பிக்கின்றன. மேலும் சில நிறுவனங்கள் விரைவில் தமது உற்பத்திகளையும் ஆரம்பிக்க உள்ளன என்று கூறப்படுகிறது. தொழிற்பேட்டையின் வெற்றி, முதற்கட்டமாக தமது உற்பத்தியை இங்கு ஆரம்பித்திருக்கும் நிறுவனங்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்கப்படும் வசதி வாய்ப்புகள் மற்றும் சந்தை வாய்ப்புகளிலேயே தங்கியுள்ளது.

வர்த்தகச் சந்தையில் மேலாதிக்கம் செலுத்தும் தெற்கின் நிறுவனங்களுடன் போட்டிபோட்டு சந்தை வாய்ப்பைப் பெறுவதும் வளர்வதும் அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் உற்பத்தியை ஆரம்பிக்கும் நிறுவனங்களுக்கு சவாலானதே. அதை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு எல்லா வழிகளிலும் அந்த நிறுவனங்களுக்குப் பக்கத் துணை வழங்குவது மிக அவசியம். அனைத்துத் துறைகளும், தரப்புகளும் அந்த ஒத்துழைப்பை வழங்கி தொழிற்பேட்டை வெற்றிகரமாக இயக்குவதை உறுதிப்படுத்த வேண்டும்.


அதேபோன்று, இந்தக் கைத்தொழிற்பேட்டையின் மூலம் உருவாகக் கூடிய வேலை வாய்ப்புகள் வடக்கில் உள்ளவர்களுக்குக் கிடைப்பதும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். தொழிற்றிறன்கள் உள்ளவர்கள் வடக்கில் இல்லை என்று கூறிக்கொண்டு தெற்கில் இருந்து தொழிலாளர்களைக் கொண்டு வரும் நிலைமை இருக்கக்கூடாது. அதனையும் உரியவர்கள் கண்காணித்து உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கைத்தொழில் உற்பத்திகளைப் பெருக்கினால் மட்டுமே வடக்கில் பெருமளவிலான தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும் என்பதையும் மனங்கொண்டு, அதற்காக அனைவரும் பாடுபட வேண்டும். அதன் மூலமே பொருளாதார அகதிகளாகத் தமிழர்கள் வெளியேறுவதையும் தடுத்து நிறுத்த முடியும்.

# சுவாமியும், கௌஷாலும் எவருக்கு ஆலோசகர்கள்?

சேரலாதன்





இலங்கையில் உள்ள தமிழர்கள் வடமாகாணத்துக்கு பொலிஸ் அதிகாரங்களைக் கோர முடியாது. மேலும் இந்தியாவும், இலங்கையும் ஒவ்வொரு நாட்டினதும் இறையாண்மையை மதிக்க வேண்டும். 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து இந்தியா இலங்கையைப் பாராட்ட வேண்டும். இலங்கையில் உள்ள தமிழர்கள் தம்மை இலங்கையர்கள் என்று உணரவேண்டும். இந்தியாவில் உள்ள பிரிவினைவாதிகளுடன் பேசுமாறு இலங்கை கோரிக்கை விட்டால் இந்தியா அதை எவ்வாறு உணர்ந்து கொள்ளும். இந்தக் கருத்துக்களை வெளியிட்டவர் இந்தியாவின் சுப்பிரமணியன் சுவாமி அல்ல. காணாமற்போனோர் ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கவென கடந்த வாரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட இந்தியாவின் சமூக சேவையாளர் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் எனத் தெரிவிக்கப்படும் அவ்டாஸ் கௌஷால் என்பவரே இந்தக் கருத்துக்களை உதிர்த்திருக்கின்றார். இவரது இத்தகைய கருத்துக்கள் இவர் ஆணைக்குழுவின் ஆலோசகரா? அல்லது இலங்கைத் தமிழர்களுக்கு ஆலோசகராக நியமிக்கப்பட்டவரா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. அது மட்டுமல்ல காணாமற் போனோர் ஆணைக்குழுவுக்கு எத்தகையவர்கள் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.

கௌஷால் முதலில் தனது சமூக



சேவையாளர், மனித உரிமைச் செயற்பாட்டாளர் என்ற முகமூடிகளைக் கழற்றி வீச வேண்டும். இவரது உண்மையான முகத்தை இந்த முகமூடிகளே மறைத்து நிற்கின்றன. ஒரு மனித உரிமைச் செயற்பாட்டாளர் என அழைக்கப்படும் இவர் இலங்கையில் உள்ள தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்கள் உரிமைகள் யாவற்றையும் இழந்த ஒரு இனமாக வாழ்ந்து கொண்டிருப்பதை அறியாதது பெரும் விந்தையாகத்தான் உள்ளது. மேலும் நொந்து நொடிந்த நிலையில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு இவர் யார்? இவருக்கு என்ன உரிமை இருக்கின்றது? இவர் இலங்கை அரசின் செயல்களை நியாயப்படுத்த விரும்பினால் அதை காணாமற் போனோர் ஆணைக்குழுவின் விசாரணைகளின் போது காட்டிக் கொள்ளட்டும். அதை விடுத்து பொலிஸ் அதிகாரம் கேட்காதே, இலங்கையர்களாக வாழுங்கள் என இலங்கைத் தமிழர்களுக்கு ஆலோசனை வழங்கும் அதிகப் பிரசங்கித்தனத்தை இனியாவது கைவிடுவதே அவருக்கு நல்லது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து செயற்படுகின்றது என்பதைக் கூடப் புரிந்து கொள்ள முடியாத கௌஷால் அவர்களைப் பிரிவினைவாதிகள் என முத்திரை குத்திக் காண்பித்தமை அவரது இலங்கை தொடர்பான அறிவின்மையையே எடுத்துக் காட்டுகின்றது. இலங்கையில் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்த 13 ஆவது திருத்தம் அதன் நோக்கத்தையே எட்டவில்லை. 13 இற்கு அப்பால் என வாய்குளிரக் கதைவிடும் அரசுத் தலைமை இந்தப் 13இல் உள்ளதையே மறுத்து நிற்கின்றது. முக்கியமாக காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கவே முடியாதெனக் கூறப்படும் நிலையில் அந்த அரசியல் சாசனத் திருத்தம் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுவதாக எவ்வாறு கூற முடியும்?

கௌஷால் விடயம் ஒருபுறம் இருக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி சந்தித்து சுமார் ஒன்றரை மணி நேரம் சாவகாசமாக உரையாடியமை இலங்கையின் ஆளும் தரப்பை ஆட்டம் காண வைத்துவிட்டது. தமது நடுக்கத்தை மறைப்பதற்காக வாயில் வந்ததையெல்லாம் அவர்கள் உளறுவதைப் பார்க்கும்போது பரிதாபமாகத்தான் உள்ளது. வடமராட்சியில் முதலாவது கரும்புலித் தாக்குதல் இடம்பெற்றபோது அதிர்ச்சியில் உறைந்த அப்போது ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்திய - உதவியை நாடினார். இதன் பயனாகவே இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதுடன் இந்தியப் படைகளும் தமிழர் பிரதேசங்களினுள் நுழைந்தன. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் 13 ஆவது அரசியல் சாசனத் திருத்தம் உருவானதும், வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டு அங்கு மாகாணசபை உருவாக்கப்பட்டதும் பழைய வரலாறுகள். ஆனால் ஒரு நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் வடக்கும் கிழக்கும் துண்டாடப்பட்டபோது இந்தியா அதைக் கவனத்தில் கொள்ளவே இல்லை. அது மட்டுமல்ல போரைக் காரணம் காட்டி வடக்கு மாகாண சபைக்கான தேர்தலும் இடம்பெறவில்லை. போர் முடிவுக்கு வந்த பின்னர் பல்வேறு சர்வதேச அழுத்தங்கள் காரணமாக வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடைபெற்று வடக்குத் தமிழர்களின் ஏகபிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட போதிலும் அதிகாரங்கள் வழங்கப்படாத நிலையே இன்றும் காணப்படுகின்றது. ஒரே நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டுமென்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரி நிற்கின்றது. ஆனால் அதிகாரப் பகிர்வு என்ற வார்த்தையைக் கேட்டாலே ஈயத்தைக் காய்ச்சி காதில் ஊற்றியது போன்றதொரு வேதனையில் இலங்கை அரசு துடிதுடித்து நிற்பதைக் காண முடிகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆயுதங்களுடனா உலவுகின்றனர்? இனவாதிகள் அவர்களைக் கண்டு அஞ்சுவதற்கான காரணம் ஒன்றுகூட இல்லை. அவர்கள் பலமுறை இலங்கை அரசுடன்

கடந்த காலங்களில் தவறான ஆலோசனைகள் வழங்கப்பட்டதன் காரணமாகவே இந்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை. மேற்கொண்டது. நரேந்திர மோடியும் இந்தத் தவறான ஆலோசகர்களால் தவறாக வழி நடத்தப்படுவாரா என்பதைப் பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்.

பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுக் களைத்து விட்டனர். தாம் தொடர்ந்து ஏமாற்றப்படுவதாக அவர்கள் உணர்கின்றனர். இந்த நிலையில் இந்தியா தமது நிலையை உணர்ந்து உதவமாட்டாதா என இலங்கைத் தமிழர்கள் ஏங்கி நின்ற நிலையில் இந்தியாவின் புதிய பிரதமரான நரேந்திரமோடி தமது பங்குக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் சில உறுதிமொழிகளையும் வழங்கியதாகத் தெரிகின்றது.

கடந்த காலங்களில் தவறான ஆலோசனைகள் வழங்கப்பட்டதன் காரணமாகவே இந்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டது. நரேந்திர மோடியும் இந்தத் தவறான ஆலோசகர்களால் தவறாக வழி நடத்தப்படுவாரா என்பதைப் பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்.

இந்த நிலையில் சுப்பிரமணியன் சுவாமி, அவ்டாஸ் கௌஷால் போன்றவர்கள் குட்டையைக் கிளப்பும் வகையில் இலங்கைத் தமிழர்கள் தொடர்பான கருத்துக்களை வெளியிடுகின்றமை கடுமையான வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. இவர்கள் தமக்குத் தோழமையைக் காட்டும் இலங்கை அரசுக்குத் தமது விசுவாசத்தைக் காட்டிப் பிழைத்துக் கொள்ளட்டும். ஆனால் இவர்கள் இலங்கையின் அண்டை நாடொன்றைச் சேர்ந்தவர்கள் என்ற வகையில் இலங்கை தொடர்பான தமது தனிப்பட்ட கருத்துக்களை வெளியிடும்போது அவதானத்துடன் இருத்தல் வேண்டும்.

மேலும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை ஒரு தீர்க்கமான கட்டத்தை எட்டியுள்ள நிலையில் இத்தகையவர்களின் தவறான கருத்துக்கள் நிலைமையை மேலும் மோசமானதொரு நிலைக்குத் தள்ளிவிடும் என்பதையும் இவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

# தமது சொந்த மண்ணை நிரந்தரமாகவே இவர்கள் இழந்துவிடப் போகிறார்களா?

## வலி.வடக்கு மக்களின் நிலை இதுதான்

இராஜகுமாரன்

யாழ்.குடாநாட்டிலுள்ள வலிகாமம் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதி ஒரு போதுமே அந்த மண்ணுக்குச் சொந்தமான மக்கள் கால் பதிக்க முடியாத இடமாக மாறிவிடப் போகின்றது.

ஏனென்றால் அந்தப் பகுதியில் படையினர் நிரந்தரமாகக் குடிகொண்டிருக்கக் கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

நில வளமும், நீர் வளமும் மிக்க அந்தப் பகுதி போருக்கு முன்னர் பொன் கொழிக்கும் பிரதேசமாகக் காணப்பட்டது. விவசாயமும், மீன்பிடித் தொழிலும் மிகச் சிறப்பாக இடம்பெற்று வந்துள்ளன. அந்த மண்ணில் கிடைக்கும் உணவுப் பொருள்களும், மீன்களும் தனிச்சுவை கொண்டவையெனக் கூறுவார்கள். பலாலி மண்ணில் விளையும் மரவள்ளிக் கிழங்கையும், மயிலிட்டிக் கடலில் பிடிபடும் சுறா மீனையும் நினைத்தால் இன்றும் வாயூறும். ஆனால் இவையெல்லாம் வெறும் கனவாகவே மாறிவிடப் போகின்றன.

இலங்கை போன்றதொரு சிறிய நாட்டில் 6,381 ஏக்கர் நிலம் என்பது சாதாரண விடயமல்ல. ஆனால் வலி.வடக்கிலுள்ள இதே அளவுடைய காணி அங்கு காலம் காலமாக வாழ்ந்த மக்களிடமிருந்து பறித்தெடுக்கப்பட்டுள்ளது. அந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பும் ஏக்கத்துடன் இன்னமும் காத்திருக்கின்றனர்.

இந்த நிலையில் இலங்கையின் சமாதானத்துக்கும், நீதிக்குமான இயக்கத்தினரின் வேண்டுகோளின் பிரகாரம் விஞ்ஞானத்தை மேம்படுத்துவதற்கான அமெரிக்க தோழமைக் கழகத்தின் (ஏ.ஏ.ஏ.எஸ்) நிலம் தொடர்பான தொழில்நுட்பவியல் மற்றும் மனித உரிமைகள் பிரிவினர் இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள வலிகாமம்-வடக்கு அதி உயர் பாதுகாப்பு வலயத்தின் செய்மதி மூலமாக எடுக்கப்பட்ட படங்களை வெளியிட்டுள்ளனர்.






பல தசாப்தங்களாக விடுதலைப்புலிகளுடன் இடம்பெற்ற போரின் போது அதி உயர் பாதுகாப்பு வலயங்களை இலங்கை அரசு உருவாக்கியது. புலிகளுடனான போர் 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது. போரின் இறுதிக் கட்டத்தில் பொது மக்களுக்கென அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வலயத்தினுள் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் ஏ.ஏ.ஏ.எஸ். நிறுவனம் ஏற்கனவே ஆவணப்படுத்தியிருந்தது.

இதேவேளை இலங்கையின் சமாதானத்துக்கும், நீதிக்குமான இயக்கம் வலிகாமம் வடக்கில் அமைந்துள்ள பாதுகாப்பு வலயம் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு ஏ.ஏ.ஏ.எஸ். நிறுவனத்தைக் கேட்டுக்கொண்டது. மேலும் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அந்த இராணுவப் பிரதேசத்தில் என்ன மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பது தொடர்பான உண்மைகளைக் கண்டுபிடிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது. யாழ்.குடாநாட்டின் இந்தப் பகுதியைச் சொந்த இடமாகக் கொண்ட ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்னமும் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர முடியாத நிலையே காணப்படுகின்றது.

இந்த நிலையில் வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தையும், அதனையொத்த ஏனைய இடங்களையும் இராணுவக் குடியிருப்புகளாக மாற்றும் செயற்பாடுகளில் இலங்கை அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதேவேளை உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகள் பொதுமக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளதாக இலங்கை அரசு வாதிடுகின்றது. ஆனால் வலிகாமம் வடக்கில் அமைந்துள்ள 6,381 ஏக்கர் காணி பொதுமக்கள் அண்ட முடியாத நிலையில் காணப்படுகின்றது.

இதேவேளை இராணுவத்தினர் இந்தப் பகுதியில் விவசாயத்தில் ஈடுபடுவதையும், உல்லாச விடுதிகளை நடத்தி வருவதையும் காண முடிகின்றது. அத்துடன் 2011 ஆம் ஆண்டுக்கும், 2014 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் சுமார் 1,500 புதிய கட்டடங்கள் இங்கு அமைக்கப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது. இராணுவக் காவலரண்கள், இராணுவத் தேவைக்குரிய கட்டடங்கள், வீடுகளின் தோற்றத்தைக் கொண்ட கட்டடங்கள் என்பவற்றை அங்கு பெருமளவில் காண முடிகின்றது.

இதைவிட கரையோரப் பகுதிகளிலும், பல மாற்றங்களைக் காண முடிகின்றது. இந்தப் பகுதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் நவீன விடுதிகள் பல அமைக்கப்பட்டதையும் அவதானிக்க முடிகின்றது. மேலும் காங்கேசன் துறையில் அமைந்துள்ள தல்செவன உல்லாசப் பயண விடுதியையும் காண முடிகின்றது.

இறுதியாக இது தொடர்பாக ஆராயும்போது 18 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய நிலம் இந்தப் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இங்கு பல புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புதிய அகன்ற வீதிகளும் அமைக்கப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது என ஏ.ஏ.ஏ.எஸ். வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நீதியானதொரு அரச பதவியில் அமராதவரை இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த மண்ணைக் கண்களால் கூடப் பார்க்க முடியாது. அவர்களது சொந்த மண் தொடர்பான கனவும் கனவாகவே இருந்துவிடப் போகின்றது.




வாசகர் திருமுகம்

## பஸ் சேவை சீராகுமா?

785, 789 ஆம் இலக்க இ.போ.ச. பஸ்கள் வழக்கமாகவே ஒழுங்காக வருவதில்லை. கடந்த சில தினங்களாக 785 ஆம் இலக்க (காரைநகர் - யாழ்ப்பாணம்) பஸ் வரவில்லை. இது தொடர்பாகத் தொலைபேசி மூலமாக உரியவர்களுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, பஸ் வரும் எனக் கூறினார்கள். ஆனால் வரவில்லை. மீண்டும் சிறிது நேரத்தின் பின் தொடர்பு கொண்டு கேட்ட போது - பஸ் வராது என்று கூறுகின்றனர். பஸ் சேவை ஒழுங்காக இடம்பெறாததால் பயணிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் காரைநகர் தொடக்கம் யாழ்ப்பாணம் வரையும் பயணம் செய்யும் பல்வேறு தரப்பினரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியதுதான்.

எஸ்.நிஷாந்தா

## மனச்சாட்சியுடன் நடப்பார்களா?

தற்போது குடாநாட்டின் முக்கிய ஆலயங்களின் வருடாந்த உற்சவங்கள் இடம்பெறுகின்ற போதிலும் கடல் உணவுகளின் விலைகள் அதிகரித்த நிலையிலேயே காணப்படுகின்றன.

ஆனால் கடற்கரைகளில் குறைந்த விலைகளிலேயே வியாபாரிகள் மீன்களைக் கொள்வனவு செய்வதைக் காண முடிகின்றது. தாம் கொள்வனவு செய்த விலையை விட இரண்டு அல்லது மூன்று மடங்கு விலையில் அவர்கள் மீனை விற்பதையும் காண முடிகின்றது. இதனால் பாதிக்கப்படுவது நுகர்வோர்களே.

ஆகவே மீன் வியாபாரிகள் மனச்சாட்சியுடன் நடந்து கொண்டால் நுகர்வோரின் சிரமங்கள் ஓரளவு குறைந்து விடும். நடந்து கொள்வார்களா?

ம.ரமணன், புண்டத்தரிப்பு



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:**எதிலும் கூடுதல் கவனத்துடன் இருப்பது நல்லது. உங்களது செயல்களுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் விலகி விடுவார்கள். மனம் விரும்பியது போல செயற்படுவீர்கள். உங்களது பொருள்களை கவனமாகப் பார்த்துக்கொள்வது நல்லது.



**இடபம்**: தொழில் வியாபாரம் சீராக இருக்கும். புதிய கிளைகள் ஆரம்பிப்பது போன்ற விரிவாக்க பணிகளை தள்ளிப்போடுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலக வேலைகள் பதற்றத்தைக் கொடுப்பதாக இருக்கும். மேலதிகாரிகளின் ஆதரவும் இருக்கும்.



**மிதுனம்**: குடும்பத்தில் அமைதியான சூழ்நிலை காணப்படும். உறவினர் வருகை இருக்கும். குழந்தைகள் முன்னேற்றத்துக்காக பாடுபடுவீர்கள். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலை காணப்படும். உங்களது செயல்களுக்கு இருந்த தடைகள் நீங்கும்.



**கடகம்**: விரும்பியதைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். எல்லா வகையிலும் நல்லதே நடக்கும். எதிர்ப்புகள் விலகும். நீண்ட நாள்களாக தடைப்பட்டு வந்த காரியத்தை மீண்டும் செய்து முடிக்க முயற்சிகள் மேற்கொள்வீர்கள்.



**சிங்கம்**: வெளியூர் தகவல்கள் சாதகமானதாக இருக்கும். குடும்ப உறுப்பினர்களின் நலனில் அக்கறை காட்டுவீர்கள். வழக்கு விவகாரங்களில் காலதாமதமான நிலை காணப்படும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள்.



**கன்னி**: தொழில் வியாபாரம் தொடர்பான பணிகள் வேகமாக நடைபெறும். தடைகள் அகலும். எதிர்பார்த்த அளவு வியாபாரம் பெருகி பணவரத்தும் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக அலைய வேண்டி இருக்கும்.



**துலாம்**: தடைப்பட்டு வந்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். சகோதரர்கள் வகையில் ஏதாவது மனத்தாங்கல் ஏற்பட்டு மறையும். பூமி தொடர்பான பிரச்சினைகள் இழுபறியான நிலை காணப்படும்.



**விருச்சிகம்**: தொழில் வியாபாரத்தில் சற்று மந்தமான நிலை காணப்படும். போட்டிகளைச் சமாளிக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க நேரிடும். நிதானமாக இருப்பது நல்லது.



**தனுசு**: குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கி அமைதி காணப்படும். பிள்ளைகள் உங்கள் சொல்படி நடப்பதைக் கண்டு மனம் மகிழ்வீர்கள். வழக்குகள் இழுபறியாக இருக்கும். மனதில் தைரியமும் மகிழ்ச்சி யும் உண்டாகும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது.



**மகரம்**: புதிய நண்பர்களின் சேர்க்கையால் உதவிகள் கிடைக்கும். வீடு கட்டும் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் தொடர்ந்து அதனைச் செய்து முடிக்க எடுக்கும் முயற்சிகள் சாதகமான பயனைத் தரும். தொழில் வியாபாரம் சுமாராக இருந்தாலும் இலாபம் கிடைக்கும்.



**கும்பம்**: வாடிக்கையாளர்களிடம் நிதானமாகப்பேசி தக்க வைத்துக்கொள்வது நல்லது. உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். குடும்ப வேலைகள் காரணமாக கூடுதல் நேரம் ஒதுக்கி அதனைச் செய்து முடிக்க நேரிடும்.



**மீனம்**: வழக்குகளில் சமாதானமாக போவது நல்லது. எந்த ஒரு காரியத்தையும் முன்னின்று செய்ய ஆசைப்படுவீர்கள். எல்லா வகையிலும் நிம்மதியும் மகிழ்ச்சியும் உண்டாகும். நிதானமாகப் பேசிச் செய்யும் காரியங்கள் வெற்றி பெறும்.

## நாளை

**ஆவணி-13 வெள்ளிக்கிழமை | 29.08.2014**

திதி: சதுர்த்தி பி.இ.01.34 வரை
நட்சத்திரம்: அத்தம் பி.ப.01.07 வரை

சுபநேரம்: 06.05-07.35 வரை
இராகுகாலம்: 10.35-12.05 வரை
**விநாயக சதுர்த்தி விரதம்**

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## மனவலிமை

"எதிர்காலத்தை அறிதல், பிறர் எண்ணமறிதல், போன்றவற்றை ஹடயோகிகள் நன்கு கற்றுள்ளனர். பறப்பதைப் பொறுத்தவரையில் பூமியின் ஈர்ப்பாற்றலை மீறி, மனவலிமையால் விண்ணில் எழுந்த ஒருவனையும் நான் பார்த்ததில்லை. ஆனால் இதில் ஈடுபட்டுள்ள பலரை நான் கண்டுள்ளேன். சிலர், இதைப் பற்றியநூல்களைப்படித்து இதை நிறைவேற்றுவதில் பல காலம் கழிக்கின்றனர். சிலர் இந்த முயற்சிக்காகப் பசியால் வாடி அதனால் உடல் கெட்டு, மெலிந்து போயுள்ளனர். வயிற்றில் விரலை வைத்தால், அது முதுகெலும்பைத் தொடுமளவுக்கு மெலிந்துள்ளனர். சில ஹடயோகிகள் நீண்ட நாள்கள் உயிர் வாழ்கின்றனர்"


பிறகு கும்பகத்தைப் (மூச்சை அடக்குதல்) பற்றிப் பேச்சு எழுந்தது. அடைத்து வைக்கப்பட்ட குகை ஒன்றினுள் எப்படியோ புகுந்து உணவின்றி நீண்ட நாள்கள் வாழ்ந்திருந்த ஒருவரைத் தாம் பார்த்திருப்பதாகக் கூறினார் சுவாமிஜி. இதைக் கேட்ட மக்களிடம் அந்த உண்மையை ஆராய வேண்டுமென்ற பரபரப்பு எழுந்தது. இந்த நிகழ்ச்சி உண்மையே என்பதைத் தாம் ஐயத்துக்கிடமின்றி நம்புவதாகவும் சுவாமிஜி கூறினார்.

கும்பகம் சில காலம் வளர்ச்சியைத் தடைப்படுத்துகிறது. அவ்வளவே. இதைப் பற்றித் தாம் அறிந்த நிகழ்ச்சி ஒன்றை சுவாமிஜி கூறினார். ஒரு மனிதன் புதைக்கப்பட்டான், அவனது கல்லறை மீது புற்கள் கூட முளைத்துவிட்டன. பல நாள்களுக்கு பின், கல்லறையை தோண்டிப் பார்த்தபோது அவன் உயிரோடிருந்தான்.

இது இந்தியாவில் நடந்தது. குளிர் காலங்களில், மூச்சடக்கித் தூங்கும் விலங்குகளிடமிருந்து கும்பக முறையை இவர்கள் கற்றிருக்கக் கூடும் என்று தாம் கருதுவதாக சுவாமிஜி கூறினார்.

# கலங்களைப் பயன்படுத்தி இயங்கும் உறுப்பு உருவாக்கம்

## விஞ்ஞானிகள் சாதனை



வரலாற்றில் முதன் முறையாக முழுமையானதும், இயங்கக் கூடியதுமான உறுப்பு ஒன்றை உருவாக்கி பிரிட்டன் விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர்.

கலங்களின் உதவியுடன் உருவாக்கப்பட்ட இந்த உறுப்பானது எலிகளில் பரீச்சித்துப் பார்க்கப்பட்டுள்ளது.

மேலும் இதனை மனிதர்களில் காணப்படும் பல வீனமான நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொண்ட உறுப்புக்களுக்குப் பதிலாக மாற்றியமைக்க முடியும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இதனை மனிதர்களில் பிரயோகப்படுத்த 10 வருடங்கள் ஆகும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | | 2 | | | 9 | 4 |
| 2 | | 9 | 6 | | | | 1 | 5 |
| | 8 | 1 | 5 | 9 | | | | |
| | 1 | 2 | 9 | | | | | 3 |
| 8 | | | | | | | | 6 |
| 6 | | | | | 3 | 2 | 5 | |
| | | | | 1 | 4 | 3 | 6 | |
| 1 | 6 | | | | 5 | 9 | | 8 |
| 3 | 7 | | | 6 | | 5 | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 9 | 4 | 8 | 2 | 1 | 6 | 5 |
| 2 | 8 | 4 | 1 | 5 | 6 | 9 | 7 | 3 |
| 5 | 6 | 1 | 7 | 9 | 3 | 4 | 8 | 2 |
| 6 | 1 | 5 | 8 | 2 | 7 | 3 | 9 | 4 |
| 8 | 9 | 7 | 3. | 4 | 1 | 2 | 5 | 6 |
| 4 | 2 | 3 | 9 | 6 | 5 | 8 | 1 | 7 |
| 7 | 4 | 8 | 6 | 3 | 9 | 5 | 2 | 1 |
| 9 | 5 | 6 | 2 | 1 | 4 | 7 | 3 | 8 |
| 1 | 3 | 2 | 5 | 7 | 8 | 6 | 4 | 9 |



# வெற்றியுடன் தொடங்கிய முன்னணி வீரர்கள்

அமெரிக்க ஓபன் ரென்னிஸ் தொடரை செர்பியாவின் ஜோகோவிச், ரஷ்யாவின் ஷரபோவா போன்ற முன்னணி வீரர்கள் உள்ளிட்ட ரென்னிஸ் வீரர்கள் வெற்றியுடன் தொடங்கியுள்ளனர்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில், கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான அமெரிக்க ஓபன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், தரவரிசையில் முதலிடத்திலுள்ள செர்பியாவின் ஜோகோவிச், 91ஆவது இடத்திலுள்ள ஆர்ஜென்ரினாவின் ஸ்குவார்ட்மேனை எதிர் கொண்டார். முதலிரண்டு செற்றை 6-1, 6-2 எளிதாக கைப்பற்றிய ஜோகோவிச், கடைசி செற்றையும் 6-4 என்ற கணக்கில் தன்வசப்படுத்தி வெற்றி பெற்றார்.

மற்றொரு போட்டியில் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே 6-3, 7-6, 1-6, 7-5 என்ற செற் கணக்கில் நெதர்லாந்தின் ராபின் ஹாசேவை வீழ்த்தினார். சுவிட்சர்லாந்தின் வாவ்ரின்கா 6-2, 7-6, 7-6 என செக் குடியரசின் ஜிரி வாஸ்லியை தோற்கடித்தார். அத்துடன் கனடாவின் மிலோஸ் ராவோனிச், பிரான்சின் சோங்கா ஆகியோரும் முதல் சுற்றில் வெற்றி பெற்றனர்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் தரவரிசையில் ஐந்தாவது இடத்திலுள்ள வீராங்கனையான ஷரபோவா, சக வீராங்கனை மரியா கிரிலென்கோவாவை சந்தித்தார். முதல் செற்றை 6-4 என கைப்பற்றிய ஷரபோவா, இரண்டாவது செற்றை 6-0 என சுலபமாக கைப்பற்றினர் 6-4, 6-0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றார்.

செர்பியாவின் அனா இவானோவிச், அமெரிக்காவின் அலிசன் ரிஸ்கியை எதிர் கொண்டார். முதல் செற்றை 6-3 என கைப்பற்றிய இவானோவிச் இரண்டாவது செற்றை 6-0 என முழுமையாகதன்வசப்படுத்தினார். முடிவில் இவானோ விச் 6-3, 6-0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றார். அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், 2-6, 6-3, 6-3 என ஜப்பானின் டேட் குரூமை தோற்கடித்தார்.

மற்றைய போட்டிகளில் ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசர், ஜெர்மனியின் மோனா பார்தெல் உள்ளிட்டோர் அடுத்த சுற்றுக்கு முன்னேறினர். (ரீ)

# யாதவுக்கு பந்துவீச்சு சொல்லிக் கொடுத்த அக்ரம்

தனது பந்து வீச்சு செழுமை பெறுவதற்கு வசிம் அக்ரம் உதவினார் என்று இந்திய வேகப்பந்து வீச்சாளர் உமேஷ் யாதவ் கூறியுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் அணியில் இடம்பெற்றுள்ள உமேஷ் யாதவ் பிசிசிஐயின் இணையத்தளத்திற்கு அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது : கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் வசிம் அக்ரமிடம் நிறையக் கற்றுக் கொண்டேன். குறிப்பாக யோக்கர் பந்துகளை வீசும் முறை பற்றிக் கேட்ட போது அது பற்றி மிகவும் தெளிவாக விளக்கம் அளித்தார். நவீன வேகப்பந்து வீச்சாளர்கள் 'யோக்கர்' முறையில் பந்து வீசுவதில் சிக்கல்களை எதிர்கொள்வதனாலேயே அதனைப் பின்பற்றத் தயங்கு கிறார்கள். 'யோக்கர்' பந்துவீச்சை ஒழுங்காக வீசினால் அதைவிட சிறந்த ஆயுதம் எதுவும் பந்துவீச்சில் இல்லை என்றே நான் கருதுகிறேன். 'ஸ்விங்' பந்துவீச்சுப் பற்றியும் வசிம் அக்ரமின் ஆலோசனைகள் மதிப்பு மிக்கது. பந்து வீசும்போது மணிக்கட்டின் நிலை, தலை எப்படியிருக்க வேண்டும் என்று நிறைய நுணுக்கங்கள் இருக்கின்றன. தலையை பந்தை ரிலீஸ் செய்யும் தருணத்தில் தாழ்த்தினால் பந்து நிச்சயம் கட்டுப்பாட்டில் இருக்காது. இது போன்ற சில விஷயங்களை நான் அவரிடமிருந்து கற்றேன் என்று அவர் கூறினார். (ரீ)





# டெஸ்ட் தொடர் தோல்விக்கு ஐ.பி.எல். காரணமில்லை - பீற்றர்சன்

இங்கிலாந்து அணியிடம் இந்திய அணி டெஸ்ட் தொடரில் படுதோல்வி யடைந்ததற்கு ஐ.பி.எல். தொடரைக் காரணம் கூறுவது தவறு என்று இங்கிலாந்து அணி வீரர் கெவின் பீட்டர்சன் கூறியுள்ளார். அத்துடன். இந்திய வீரர்கள் வெளிநாடுகளில் நடைபெறும் உள்ளூர்த் தொடர்களில் விளை யாடுவதன் மூலமே சிறந்த அனுபவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தைச் சேர்ந்த பத்திரிகை ஒன்றுக்கு இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது : இந்திய அணியில் உள்ள இளம் வீரர்கள் ஐபிஎல் தொடரில் விளையாடுவதால்தான் டெஸ்ட் ஆட்டங்களில் சரியாக விளையாடவில்லை என்று கூறுவதை ஏற்கமுடியாது. முதல் டெஸ்ட் போட்டியில் முரளி விஜய் சதமடித்தார். இரண்டாவது டெஸ்டிலும் அதிக ஓட்டங்களைக் குவித்தார். அவரும் ஐபிஎல் தொடரில் விளையாடியவர்தான். இந்திய அணி வீரர்கள் வெளிநாடுகளில் சென்று அதிக உள்ளூர் ஆட்டங்களில் விளையாடினால் சிறப்பான அனுபவம் கிடைத்துவிடும். இதற்கு முன்னோட்டமாக புஜாரா இங்கிலாந்தில் நடைபெறும் கவுன்டி ஆட்டங்களில் விளையாட முடிவெடுத் துள்ளார். இது வரவேற்கத்தக்கது. இந்திய பந்து வீச்சாளர்களும் இங்கி லாந்து. ஆஸ்திரேலியா. தென்னாபிரிக்காவில் பந்துவீசுவதில் அனுபவம் பெற வேண்டும். அனைத்து வீரர்களுக்கும் இப்படியான வாய்ப்புக்கள் கிடைத்தால்தான் அந்நிய மண்ணில் வெற்றிகளைப் பெற முடியும் என்று பீட்டர்சன் கூறியுள்ளார்.

டெஸ்ட் தொடரில் அடைந்த தோல்விக்கு ஐ.பி.எல். ஆட்டங்கள் காரண மில்லை என்று இந்திய அணித்தலைவர் மகேந்திரசிங் டோனி ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரீ)



# டோனிக்கும் அணிக்கும் கங்குலி அறிவுரை

அணித்தலைவர் டோனி மற்றும் ஏனைய வீரர்கள் சர்ச்சைகளை மறந்து ஒருநாள் ஆட்டங்களில் கவனம் செலுத்த வேண்டும் என கங்குலி கூறியுள்ளார். டெஸ்ட் தொடரில் தோல்வியை தழுவிய இந்திய அணி தற்போது ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. டெஸ்ட் தொடரில் தோல்வியினைத் தொடர்ந்து அணியில் ஏற்பட்ட மாற்றங்களால் எழுந்த சர்ச்சை பற்றி கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில் இந்திய கிரிக்கெட் அணியின் நிர்வாகத்தில் அதிரடியாக செய்யப்பட்ட மாற்றம் குறித்து வெளியிடப்பட்ட அறிக்கையும், அதற்கு பதிலடியாக விடுக்கப்பட்டு வரும் அறிக்கைகளையும் தற்போதைய தருணத்தில் நிறுத்தி கொள்ள வேண்டியது அவசியமானது என்பது தான் எனது யோசனையாகும் என்று தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய அணி சிறப்பாகச் செயற்படாததைத் தொடர்ந்து அணிக்கு புதிய நபர்களை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கொண்டு வந்து இருப்பது சரியான நடவடிக்கை என்பதை அனை வரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அணிக்குப் புதிதாக நியமிக்கப் பட்டவர்கள் மற்றும் அணியில் தற்காலிகமாக ஓய்வு அளிக்கப்பட்ட உதவிப் பயிற்சியாளர்கள் ஆகியோருக்கு அணியில் என்ன பணி என்பதை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அதிகாரபூர்வமான அறிக்கை மூலம் தெளிவுபடுத்த வேண்டும். அப்போது தான் இதுபோன்ற சர்ச்சைகள் நீடிக்காமல் ஓய்ந்து போகும். இந்திய அணியின் அணித்தலைவர் மற்றும் வீரர்கள் சர்ச்சையை மறந்து அமைதி காப்பதுடன் ஆட்டத்தில் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும்.

ஒரு வெற்றி பெற்று விட்டால் எல்லா சூழ்நிலையும் மாறி அந்த வெற்றி தான் பிரதானமாக பேசப்படும் என்பதை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும். எனவே உங்களது கவனத்தையும், சக்தியையும் வெற்றியை நோக்கி செலவிடுவதில் மட்டுமே இருக்க வேண்டியது முக்கியமானதாகும். பொதுவாக அணியாக தடுமாறிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் நீங்கள் ஏற்கனவே சாதித்த குறிப்பிட்ட இடத்தில் விளையாடும் போது அது இழந்த நம்பிக்கையை மீண்டும் உங்களுக்கு பெற்றுத் தர உதவும் என்று அவர் கூறியுள்ளார். (ரீ)



# யுவராஜுக்கு பந்து வீசவுள்ள போல்ட்




இந்தியாவுக்கு செல்லவுள்ள உசைன் போல்ட் அங்கு விளையாடவுள்ள கிரிக்கெட் ஆட்டம் ஒன்றில் யுவராஜ் சிங்கிற்கு பந்து வீசவுள்ளதாகத் தெரியவருகிறது.

உலகின் வேகமான மனிதன் என்று அழைக்கப் படும் ஜமெய்க்காவைச் சேர்ந்த ஓட்டப் பந்தய வீரர் உசைன் போல்ட் இந்தியாவிற்கு பயணம்செய்யவுள்ளார். உலகின் அதிவேக ஓட்டப்பந்தயவீரர் உசைன் போல்ட் 100 மீற்றர் ஓட்டப் பந்தயங்களில் சாதனையாளராக இருக்கிறார். இவர் தனியார் விளம்பர நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக எதிர்வரும் இரண்டாம் திகதி பெங்களூருக்கு செல்லவுள்ளார். குறித்த விளம்பர நிகழ்ச்சியில் இவருடன் கிரிக் கெட் வீரர் யுவராஜ் சிங்கும் கலந்துகொள்ளவுள்ளார். இதில் இருவரும் இணைந்து வேடிக்கையான கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபடவுள்ளார்கள். ஆறு பந்துகளிலும் ஆறு சிக்சர் களை அடித்த யுவராஜ் சிங்குக்கு பந்து வீச ஆர்வமுடன் இருப்பதாக உசைன் போல்ட் ஏற்கனவே விருப்பம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரீ)

# நவீன வசதிகள் கொண்டதாக துரையப்பா விளையாட்டரங்கு

## மாற்றியமைப்பதற்கு நேற்று அடிக்கல்

யாழ்ப்பாணம், ஒக. 28

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கு பார்வையாளர்கள் வசதியாக அமர்ந்து விளையாட்டை ரசிக்கக் கூடிய வகையில் நவீன வசதிகள் கொண்டதாக மாற்றியமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் அடிக்கல்லை நட்டு வைத்தனர்.

அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண முதல்வர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் முன்னதாக நினைவுக்கல்லைத் திரைநீக்கம் செய்து வைத்தனர்.

இந்திய அரசின் விளையாட்டுத்துறை அமைச்சினால் 145 மில்லியன் ரூபா செலவில் விளையாட்டரங்கு நிர்மாணிக்கப்படவுள்ளது. முன்னதாக அமைச்சர்கள், ஆளுநர், வடக்கு மாகாண முதலமைச்சர், மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோரை யாழ்.மாநகர முதல்வர் வெற்றிலை வழங்கி வரவேற்றார். (கு-7)




## கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

மாங்குளம், ஒக.28

அல்வாய் பாரதிதாசன் நூலகத்தின் பொன்விழாவை முன்னிட்டு கரப்பந்தாட்ட ஓவர் கேம் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டி மின்னொளியில் நடத்தப்படவுள்ளதுடன் போட்டியில் பங்குபற்றவிருக்கும் கழகங்களை எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் பாரதிதாசன் வாசிகசாலையில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து தருமாறும் போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (ரி-422)



## அலன்ராஜின் அசத்தலான பந்து வீச்சு யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றி

யாழ்ப்பாணம் ஒக.28

அலன்ராஜின் அசத்தலான பந்து வீச்சின் மூலம் கொழும்பு டுமினிக் கல்லூரியை 84 ஓட்டங்களால் வீழ்த்தி யாழ். மத்திய கல்லூரி அணி அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுப் பிரிவு ஆண்கள் பிரிவு 3க்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் காலிறுதியாட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அநுராதபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. இந்தக் காலிறுதியாட்டத்தில் கொழும்பு டுமினிக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணியினர் 46 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். கார்த்தீபன் 51 ஓட்டங்களையும், அலன்ராஜ்27 ஓட்டங்களையும், கோமேதரன்31 ஓட்டங்களையும், ஜெறோசன் 15 ஓட்டங்களையும் திரேசன்-13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.



பந்து வீச்சில் கொழும்பு டுமினிக் கல்லூரி அணி சார்பில் சந்துறுவான் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், சம்பத் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 32 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், சஞ்ஜீவ 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 32 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ரணசிங்க 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 46 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

205 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொழும்பு டுமினிக் கல்லூரி அணியினர் 40 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 120 ஓட்டங்களை மட்டும் பெற்றனர். இதன் மூலம் யாழ்.மத்திய கல்லூரி அணி 84 ஓட்டங்களால் வெற்றியைப் பெற்றுக் கொண்டது. டுமினிக் கல்லூரி சார்பாக சந்தியராஜ் 28 ஓட்டங்களையும், சாஸ்கரன் 17 ஓட்டங்களையும், சஞ்ஜீவ 15 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பாக அலன்ராஜ் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 26 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளையும், திரேசன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ரி-23)

## விளையாட்டுப் போட்டி

வடமராட்சி, ஒக. 28

பொலி கண்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் க.கஜேந்திரன் தலைமையில் ஆலடிச் சந்தி மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டியில் இல்ல விளையாட்டுப் போட்டியுடன் வெளிக் கழகங்களுக்கான போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

வெளிக்கழகங்களுக்கான போட்டிகளில் கயிறு இழுத்தல், கம்பு இழுத்தல், கை மடித்தல், குத்துச் சண்டை, மல்யுத்தம், பளுதூக்கல், கபடி, கிறிஸ் கம்பம் ஏறுதல், தலையணைச்சண்டை, மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம் ஆணழகன் போட்டி, வினோத உடைப் போட்டி, கட்டு மரம் வலித்தல், படகு ஓட்டம் போன்ற போட்டிகளுடன் மாற்றுத் திறனாளிகளான ஆண்கள், பெண்களுக்கிடையே மூன்று சில்லு சைக்கிளோட்டப் போட்டியும் இடம் பெறவுள்ளது. (ரி-173)

## இன்றைய ஆட்டம்.

யாழ்ப்பாணம், ஒக.28

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி-23)



# உதைபந்தாட்ட இறுதிப் போட்டி



பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணி



வெற்றிலைக்கேணி சென்.செபஸ்தியான் விளையாட்டுக்கழக அணி

கரணவாய், ஒக. 28

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்களும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று பிற்பகல் 3 மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

கழகத் தலைவர் ஐ.ஜெயச்சந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் என்.திருலிங்கநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வெற்றிலைக் கேணி சென்.செபஸ்தியான் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. இதற்கு முன்பாக நடைபெறவுள்ள மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி யூத் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது. (ரி-108-23)

## மானிப்பாய் ஏஞ்சல் வெற்றி

யாழ்ப்பாணம் ஓக.28

கல்ரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் 14 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கல்ரன் கூடைப் பந்தாட்ட திடலில் இடம் பெற்று வருகின்றன.


நேற்று முன்தினம் செவ்வாய் கிழமை காலை 7 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் கண்டி கிங்வுட் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி மோதிக் கொண்டது. இதில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி 48:12 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (ரி-23)

## கிரிக்கெற் தொடர்

யாழ்ப்பாணம்,ஓக.28

சுன்னாகம் காந்தி நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் 6 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (ரி-23)

# அரையிறுதி ஆட்ட முடிவுகள்



கரணவாய்.ஓக.28

பரபரப்பாகவும் விறுவிறுப்பாகவும் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டங்களில் வெற்றி பெற்று இறுதியாட்டத் துக்குத் தகுதி பெற்றுள்ள வெற்றிலைக்கேணி சென்.செபஸ்தியான் விளையாட்டுக் கழகம் மற்றும் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் கழக மைதானத்தில் இடம் பெற்றன.

முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் வெற்றிலைக் கேணி சென். செபஸ் தியான் விளையாட்டுக் கழகமும், உடுப்பிட்டியுத் விளையாட்டுக் கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக ஆரம்பமான இந்தப் போட்டியில் இரு அணியும் சம பலத்துடன் மோதின. இரு அணியினரும் கோல் போடு வதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்தனர். இரு பகுதி கோல் பரப்புக் களுக்கும் பந்து சென்ற போதும் முன்கள வீரர்களிடமும் காணப்பட்ட ஒருவகைப் பதற்றம் காரணமாக அவற்றைக் கோலாக்காமல் கம்பத்துக்கு மேலாகவும், பக்கமாக அனுப்பி பார்வையாளர்களை வெறுப்பேற்றினர்.

கடுமையாகப் போராடிய போதும் இரு அணி வீரர்களாலும் ஆட்ட நேரம் முழுவதும் கோல் போடாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இதனை அடுத்து வெற்றியாளர்களைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சம நிலை தவிப்பு உதையில் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிலைக் கேணி சென். செபஸ்தியான் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

அடுத்து இடம்பெற்ற மற்றொரு அரையிறுதி யாட்டத்தில் பலாலி விண்மீன் விளை யாட்டுக்கழகமும், கம்பர் மலை யங்கம்பன்ஸ் விள்ள யாட்டுக் கழகமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக ஆரம்பமான இந்த ஆட்டத்தில் 9 ஆவது நிமிடத்தில் விண்மீன் விளையாட்டுக் கழக வீரர் செல்வக்குமார் முதலாவது கோலைப் போட அணி உற்சாகத்தின் உச்சிக்குச் சென்றது. தொடர்ந்து இரு அணி வீரர்களும் இடைவேளைக்கு முன்பு கோல் போடுவதற்கு பல முயற்சிகள் மேற்கொண்ட போதும் அது நிறைவேறாத நிலையில் 1:0 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப் பட்டது.


இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி 4 ஆவது நிமிடத்தில் அதே அணி வீரர் அமலதாஸன் மேலும் ஒரு கோல் போட பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்தின் வெற்றி ஓரளவு உறுதி செய்ய தொடர்ந்தும் இரு அணியி னரும் முன்னே றித் தாக்கிய போதும் மேலதிக கோல்களைப் போட முடியவில்லை. இறுதியில் 2:0 என்ற கோல்கள் அடிப்படையில் விண்மீன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று இறு தியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ரி-108)

## தாச்சிப் போட்டி இறுதியாட்டம்

கைதடி.ஓக.28

இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் யாழ். மாவட்ட ரீதியில் கைதடி விவசாயிகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி எதிர்வரும் சனிக் கிழமை மாலை 6.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. இறுதிப் போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து விளையாட்டு கழகம் மோதவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு, இளைஞர் விவகார அமைச்சர் எஸ். குருகுலராஜாவும், யாழ். மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்எஸ்.சரவணபவன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணசபைஉறுப்பினர்கள்எஸ்.சஜீபன், கே.ஆர்னோல்ட், கே.சயந்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள் ளனர். (ரி-288)



# முதலிடம் பிடித்த பெடரர்

ரென்னிஸ் விளையாட்டில் அதிக வருமானம் ஈட்டியவர்கள் தொடர்பாக போர்ப்ஸ் பத்திரிக்கை வெளியிட்டுள்ள பட்டியலில் சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் முதலிடத்தைப் பிடித்துள்ளார். போர்ப்ஸ் இதழ் இவ்வருடம் அதிகம் பணம் சம்பாதித்த ரென்னிஸ் வீரர்கள் குறித்த பட்டியல் ஒன்றை நேற்றுமுன்தினம் வெளியிட்டது. இதன்படி முதல் 10 வீரர்கள் வரிசையில் முதலிடத்தை பெடரர் பிடித்துள்ளார். 17 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற பெடரர் இந்தாண்டு நோவக் ஜோகோவிக்கிடம் பட்டத்தைத் தவற விட்டார். ஆனாலும் வருமானத்தில் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஜூலை முதல் இந்த ஆண்டு ஜூன் வரையில் பெடரர் ஈட்டியுள்ள மொத்த வருமானம் 56.2 மில்லியன் டொலர் ஆகும். இது இந்திய மதிப்பில் 340 கோடி ரூபாய். ரோலக்ஸ் மற்றும் நைக் போன்ற விளம்பரதாரர்களின் வழி[illegible] ரோஜர் ஈட்டியுள்ள வருமானம் 40 மில்லியன் அமெரிக்க டொலரை தொட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. போர்ப்ஸ் வெளியிட்டுள்ள இந்த பட்டியலில் 5 பெண்கள் மற்றும் 5 ஆண்கள் இடம் பிடித்துள்ளனர்.ஸ்பெயின் நாட்டின் ரபேல் நடால் 44.5 மில்லியன் அமெரிக்க டொலருடன் 2வது இடத்திலும், செர்பியா நாட்டின் நோவக் ஜோகோவிக் 33.1 மில்லியன் அமெரிக்க டொலருடன் 3வது இடத்திலும் உள்ளனர். அதேபோல், 4வது இடத்தில் 24.4 மில்லியன் அமெரிக்க டொலருடன் மரியா ஷரபோவாவும், சீனாவின் லீ நா 23.6 மில்லியன் அமெரிக்க டொலருடன் 5வது இடத்திலும் உள்ளனர்.

ரென்னிஸ் போட்டியில் உலக தர வரிசையில் பெண்கள் பிரிவில் முதலிடம் வகிக்கும் செரீனா வில்லியம்ஸ் 22 மில்லியன் அமெரிக்க டொலருடன் 6வது இடத்தைப் பிடித்துள்ளார். இவரது வருமானத்தில் பாதி பரிசு வழியாக கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்து நாட்டின் ஆண்டி முர்ரே 19.1 மில்லியன் அமெரிக்க டொலருடன் 7வது இடத்திலும், விக்டோரியா அசரென்கா 11.1 மில்லியன் அமெரிக்க டொலருடன் 8வது இடத்திலும் உள்ளனர். இந்தப் பட்டியலில் ஜப்பானின் கீய் நிஷிகோரி 11 மில்லியன் அமெரிக்க டொலருடன் 9வது இடத்தையும், டென்மார்க் நாட்டின் கரோலின் வோஸ்னியாக்கி 10.8 மில்லியன் அமெரிக்க டொலருடன் 10வது இடத்தையும் பிடித்துள்ளனர். (ரி)



## கவுன்டியில் விளையாட ஆசை

### - வருண் ஆரோன்

இந்திய அணியின் இளம் வேகப் பந்து வீச்சாளர் வருண் ஆரோனுக்கு இங்கிலாந்தின் கவுன்டி கிளப் அணிகளில் விளையாடும் ஆசை ஏற்பட்டுள்ளது. நடந்து முடிந்த டெஸ்ட் தொடரில், சராசரியாக மணிக்கு 140 கிலோமீற்றருக்கும் அதிகமான வேகத்தில் தொடர்ந்து பந்து வீசி அசத்தினார். டெர்பிஷயர் அணியில் புஜாரா இணைந் தது போல, தானும் ஏதாவது ஒரு கவுண்டி அணியில் இணையவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஆரோன் கூறியதாவது: இங்கிலாந்தில் கிரிக்கெட் என்பது மிகவும் சவாலானது. இங்குள்ள ஆடுகளங்கள் துடுப்பாட்ட வீரர்கள் அல்லது பந்து வீச்சாளர்கள் என யாருக்கும் சாதகமாக இல்லாமல் உள்ளது. இதனால் இங்கிலாந்து மண்ணில் கவுன்டி போட்டிகளில் விளையாடுவது எதிர் காலத்தில் எனக்கு நல்ல உதவியாக இருக்கும். தற்போதைய நிலையில் இங்கிலாந்து மண்ணில் போதியளவு விளையாடி விட்டதாகவே நினைக்கிறேன். கடந்த இரு மாதங்கள் இங்கு இருந்தது இங்குள்ள சூழ் நிலைகளை அறிந்து கொள்ள உதவியாக இருந்தது.

அடுத்த ஆண்டு ஐ.பி.எல். தொடர் ஒருவேளை முன்னதாக முடிந்தால், உறுதியாக கவுன்டி போட்டிகளில் பங்கேற்பேன். இது தான் எனது முதல் தேர்வாக இருக்கும். இவ்வாறு வருண் ஆரோன் கூறினார். (ரி)

## லலித் மோடியின் கடவுச்சீட்டு முடக்கம் ரத்து

ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் முன்னாள் தலைவர் லலித் மோடியின் கடவுச்சீட்டு முடக்கம் செய்யப்பட்டு இருந்ததை ரத்து செய்யுமாறு டில்லி நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை சார்பில் இருபது ஓவர்களைக் கொண்ட ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டித்தொடர் கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. இதன் தலைவராக லலித் மோடி பதவி வகித்தார். கடந்த 2010 ஆம் ஆண்டு ஐ.பி.எல். நிதி முறைகேடு தொடர்பாக அதன் தலைவர் பதவியில் இருந்து லலித்மோடி பதவி நீக்கம் செய்யப் பட்டார். அத்தோடு கிரிக்கெட் சபையின் துணைத் தலைவர் பதவியில் இருந்தும் நீக்கப்பட்டார். ஐ.பி.எல். போட்டியில் தொலைக்காட்சி உரிமம் வழங்கியது உள்ளிட்டவற்றில் லலித் மோடி முறைகேடு செய்ததாக புகார் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஐ.பி.எல். போட்டிகளின்போது லலித்மோடி அந்நிய செலாவணி மோசடியிலும் ஈடுபட்டது தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து கடவுச்சீட்டை ரத்து செய்யுமாறு மும்பையில் உள்ள கடவுச்சீட்டு அலுவலகத்துக்கு அமுலாக்கதுறை வேண்டுகோள் விடுத்தது. இதையடுத்து மும்பை பிராந்திய கடவுச்சீட்டு அலுவலகம் லலித் மோடியின் கடவுச்சீட்டை ரத்து செய்தது. இந்த நடவடிக்கையை எதிர்த்து லலித் மோடி டில்லி உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். நீண்ட நாட்களாக இம்மனு மீதான விசாரணை நடைபெற்று வந்தது. நேற்று மீண்டும் அம்மனு மீதான விசாரணை நடைபெற்றது. அப்போது லலித் மோடியின் கடவுச்சீட்டு முடக்கப்பட்டதை ரத்து செய்யுமாறு டில்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடவுச்சீட்டு ரத்து செய்ததன் மூலம் அவர் தற்போது இந்தியாவுக்கு திரும்ப முடியும். ஐ.பி.எல் மோசடி செய்தது தொடர்பாக சுமார் நான்கு ஆண்டுகளாக அவர் இந்தியாவை விட்டு வெளியேறி லண்டனில் வசித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ரி)

## பல்தேவைக் கட்டடங்கள் அமைப்பதற்கு அடிக்கல்



மட்டக்களப்பு, ஓக. 28
கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனால் கிராமத்துக்கு ஒரு வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பின் எட்டு இடங்களில் பல்தேவைக் கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.
இந்த நிகழ்வு நேற்று புதன்கிழமை நடைபெற்றது.
மண்முனை வடக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள சேத்துக்குடா, திமிலைதீவு, வீச்சுக்கல்முனை, புளியந்தீவு, வெட்டுக்காடு, மாமாங்கம், சத்துருக்கொண்டான், மற்றும் கல்லடி ஆகிய கிராமங்களிலேயே அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.
ஒவ்வொரு கட்டட நிர்மாணத்துக்கும் தலா 10 லட்சம் ரூபா பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளது.
இதுவரை காலமும் தத்தமது பகுதிகளில் பல்தேவைக் கட்டடம் ஒன்றில்லாததால் கிராம மக்கள் தமது கூட்டங்களை நடத்துவதற்கும் ஒன்று கூடலில் ஈடுபடுவதற்கும் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வந்ததால் கிராமத்துக்கு ஒரு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பல்தேவைக் கட்டடத்துக்கு முன்னுரிமை அளித்ததாக பிரதேச செயலர் தவராசா தெரிவித்துள்ளார்.
இந்த நிகழ்வுகளில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பி.பிரசாந்தன், பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆர். ஜதீஸ்குமார் உட்பட பல அதிகாரிகளும் பொது மக்களும் கலந்து கொண்டனர். (த-10-32)

## கல்முனை அஷ்ரப் வைத்தியசாலையில் பெண் மகப்பேற்று நிபுணரை நியமிக்குக

### உலமா கட்சி கோரிக்கை

கல்முனை, ஓக. 28
கல்முனை அஷ்ரப் வைத்தியசாலையில் பெண் மகப்பேற்று நிபுணரான மருத்துவர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்க சம்மந்தப்பட்ட தரப்பினர் முன்வரவேண்டும் என உலமா கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பில் கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மௌலவி தெரிவிக்கையில்-
கல்முனை அஷ்ரப் வைத்தியசாலை 99 வீதம் தமிழ் பேசும் நோயாளிகளைக் கொண்டது. இங்கு மகப்பேற்று நிபுணராக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஆண் ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளார். இதனால் தமிழ் பேசும் பெண்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றது. இது தொடர்பில் பலர் என்னிடமும் முறையிட்டுள்ளனர்.
இவ்வாறு பெண்களுக்கான மகப் பேற்று நிபுணராக நியமிக்கப்படுவதற்கு பெண் மருத்துவர் ஒருவர் இந்த நாட்டில் கிடைக்கவில்லையா? அல்லது இது விடயத்தில் வைத்தியசாலை நிர்வாகம் முயற்சி எடுக்கவில்லையா? என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. பெண்கள் சம்பந்தப்பட்ட விடயத்துக்கு நூறு வீதம் முஸ்லிம்கள் வாழும் கல்முனைக்குடியில் மாற்றின ஆண் மருத்துவரொருவர் நியமிக்கப்பட்டிருப்பதை கல்முனை முஸ்லிம்களை அவமானப்படுத்தும் செயற்பாடாகவே நாம் பார்க்கிறோம்.
பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரை நியமித்திருப்பது என்பது எமது பிரச்சினை அல்ல. மாறாக பெண் மருத்துவர் ஒருவரை அவர் எந்த இனத்தைச் சேர்ந்தவராக இருப்பினும் நியமிக்க வேண்டுமென்பதே மக்களினதும் எமதும் கோரிக்கையாகும்.
ஆகவே இது விடயத்தில் அஷ்ரப் வைத்தியசாலை நிர்வாகமும் கல்முனையின் அதிகார அரசியல் தலைமைகளும் உடனடியாக தலையிட்டு மகப்பேற்று நிபுணராக பெண் மருத்துவர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (ஓ-10)

## வாழைச்சேனையில் கைக்குண்டு மீட்பு

வாழைச்சேனை, ஓக. 28
வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் கைக்குண்டு ஒன்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.
நேற்றுமுன்தினம் இரவு பஷீர் வீதியில் உள்ள ஏ.எல்.எம்.பாறூக் என்பவரின் வீட்டின் பின் பகுதியில் உள்ள குப்பை மேட்டில் கைக்குண்டு ஒன்றைக் கண்ட வீட்டுக்காரர்கள் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்தே பொலிஸார் கைக்குண்டை மீட்டுள்ளனர்.
கைக்குண்டைச் செயலிழக்கச் செய்வதற்காக அது இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் கைக்குண்டு அங்கு எவ்வாறு வந்தது என்பது தொடர்பான விசாரணைகளைத் தாம் நடத்தி வருவதாகவும் வாழைச்சேனை பொலிஸார் கூறினர். (த-10)

## கூட்டம் பிற்போடல்

யாழ்ப்பாணம்,ஓக.28
யாழ். மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக கேட்போர்கூடத்தில் நடைபெறவிருந்த மேற்படி கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் அறிவித்துள்ளார். (வ)

## ஏறாவூர் விபத்தில் ஒருவர் சாவு

ஏறாவூர், ஓக. 28
ஏறாவூர் நகர் பிரதான நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் சிக்கிப் படுகாயமடைந்த நால்வரில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வட்டாரங்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பை நோக்கிச் சென்று கொண்டிருந்த வாகனம் திடீரென கட்டுப்பாட்டை இழந்து ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தடியில் வீதியருகில் நின்று உரையாடிக் கொண்டிருந்தவர்கள் மீது மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.
காயமடைந்தவர்கள் உடனடியாக அருகிலுள்ள ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
விபத்தை ஏற்படுத்திய வாகனம் தப்பிச் சென்றுள்ள போதிலும் வாகன இலக்கத்தகடு கைப்பற்றப்பட்டுள்ளதால் அதனைக் கொண்டு வாகனத்தையும் சாரதியையும் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (த-10)


# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை தில்லையம்பலம்

புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட **கணபதிப்பிள்ளை** தில்லையம்பலம் நேற்று (27.08.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், விஜய லக்ஸ்மி, நித்தியலக்ஸ்மி, தர்மதேவி, வைத்தியநாதன் (ஒஸ்ரியா), பாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தரலிங்கம், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (களுமாத்தையா காலி), முருகானந்தம் (காலி), லதா (ஒஸ்ரியா), சியாமினி ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான பார்வதிப்பிள்ளை, ஐயாத்துரை, முருகேசு, நாகம்மா மற்றும் கண்ணம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான வடிவேலு, செல்லப்பா, சுப்பிரமணியம், நாகம்மா, இராசம்மா, பரமநாதன், இரத்தினம், விஸ்வலிங்கம், நாகேஸ்வரி, ராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், விஜிதா, பாக்கியலக்ஸ்மி, பிரேமதாஸ், வாணி, லவராஜா, சிறிரங்கனி, நர்மதா, நந்தனன், சமீரா, வேதிகா,கேசிகா, குமரகுருபரன், கிருஸ்ண மூர்த்தி, ஸ்ரீநிமல், ராஜரூபி ஆகியோரின் பேரனும், சாருகா, சகானா, ஜானுசா, லக்மிகா, கார்த்திக், சஜிக்கா, கன்சிகா, தானியா, சாதனா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2014) வியாழக்கிழமை அவரின் புளியங்கூடல் இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக புளியங்கூடல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 742 4880

(51290) (45.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் நல்லையா



யாழ்ப்பாணம் தாவடியைப் பிறப்பிடமாகவும் வவுனியா உக்குளாங்குளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் நல்லையா கடந்த (25.08.2014) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை நல்லையாவின் அன்பு மனைவியும், தேவேந்திரா (கனடா), மகேந்திரா (யாழ்ப்பாணம்), சாந்தினி (வ.சீ.சீ.ரி.எம்.எஸ். ஆசிரியை), மதிவதனி (கனடா), ரவீந்திரா ஆகியோரின் அன்புத் தாயும், மாலினி (கனடா), பத்மரஞ்சினி, ஜெயசீலன் (நீர்ப்பாசன திணைக்களம், வவுனியா), சிவதாசன் (கனடா), பத்மானந்தி (பிரதேசசபை, சுழிபுரம்) ஆகியோரின் அன்பு மாமியும், கஜித்ரா, மிஜித்ரா, இமாஜினி, பவாஜினி, தீபிகா, சிந்துஜா, பானுஜா, லக்ஷன், ராகவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நாளை (29.08.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தச்சனாங்குளம் இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
024 222 3499, 077 899 6516

(சி/16195) (10)

தகவல்:
குடும்பத்தினர்.

## 10ஆம் ஆண்டு நினைவு நாள்

### வேலுப்பிள்ளை செல்வநாயகி (இரத்தினம்)



திதி: பூர்வபக்க திருதியை

ஆண்டுகள் பத்து ஆனதம்மா ஆனாலும் நினைவுகள் அழியவில்லை. தங்க மகனைப் பெற்றவள் என்ற நினைவுடன் நாம் இழந்த சொத்துக்களை மீட்க உதவி செய்வார் என மன நின்மதி கொண்டீர்கள் ஆனால் தங்க மகன் பெறுமதி இழந்து போக உன் ஆசை தம்பி முருகையா ஒரு கை கொடுக்க நாம் அயராது முயற்சி செய்து எங்கள் இலக்கினை அடைய முன் நாம் படும் துன்பம் நீ அறிவாயா அம்மா உனது தங்க மகன் எப்படி பெறுமதி இழந்தார் என்பதை அறிய முடியாது எம்மனம் பரிதவிக்கின்றது. மீண்டும் அவர் தங்கமாகி பெறுமதி பெற எங்கள் குல தெய்வம் குருநாதர் தான் அருள் புரிய வேண்டும்.

சொந்த இடம்:
தெல்லிப்பழை, வித்தகபுரம்.
தற்காலிக இடம்: தாவடி வீதி,
சுதுமலை சந்தி, மானிப்பாய்.

தேவி, மகன், மகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(51404) (10)

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
11.11.1939

மறைவு
28.08.1998



அமரர்
### பொன்னையா தியாகராசா


(முன்னாள் சாலைப் பரிசோதகர் C.T.B கிளிநொச்சி, பருத்தித்துறை சாலைகள்)

அன்பின் அப்பாவே!
அன்பு காட்டி அறிவு ஊட்டி
இன்பமுடன் நாம் வாழ
இனிய பல வழிகாட்டிய அன்புத் தெய்வமே
ஆண்டுகள் பதினாறு ஆனது அப்பா!
ஆறவில்லை எமது துயரம்
எத்தனை ஆண்டுகள் போனாலும்
மறப்போமா நாம் உங்களை
மீண்டும் ஒரு பிறவி எடுத்தால்
எமக்கு அப்பாவாக வர வேண்டும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனிடம் வேண்டுகின்றோம்

47, பென்ரிகொஸ்ரல் லேன்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


# தேசிய ஒற்றுமையை வலியுறுத்தி கொழும்பில் வேலைப்பட்டறை



கொழும்பு தேசிய ஒற்றுமை மற்றும் சர்வோதயத்துக்கான பாக்கீர் மாக்கார் நிலையம் தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்பும் நோக்குடன் வேலைப்பட்டறை யொன்றை நேற்றைய தினம் கொழும்பில் நடத்தியது.

இதன் போது மத. இன ரீதியிலான முறுகல் நிலை ஏற்படும் போது அவற்றைக் கையாள்வது தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது-

சகல மதங்களையும் சேர்ந்த சமயப் பெரியார்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் வணக்கத்துக்குரிய பேராசிரியர் கொட்டஸ் பிட்டிய ராகுல தேரோ, வண பத்தேகம சமித் தேரோ, மற்றும் ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகள், சிவில் சமூகங்களின் பிரதிநிதிகள், முக்கியமான நிறுவனங்களின் தலைவர்கள், இளைஞர் அமைப் புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# இணையத்தள மோசடி: 1,300 முறைப்பாடுகள்

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் 31ஆம் திகதி வரையில், இணையத் தள மோசடி தொடர்பாக சுமார் ஆயிரத்து 300 முறைப்பாடு கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று கணினி அவசரப் பிரி வின் பாதுகாப்புப் பொறியியளாலர் ரொஷான் சந்திர குப்தா தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடுகளில், சில போலி முறைப்பாடுகளும் உள்ளடங்குவதுடன் அம் முறைப்பாடுகளில் அதிகமானவை போலி முகநூல் கணக்குகள் (பேஸ்புக்) தொடர்பான மோசடிகள் என்றும் அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

# தாக்குதலில் ஒருவர் காயம்

கண்டி, ஓக.28

இரத்தினபுரி நகரில் அரச வங்கியொன்றில் கூரான ஆயுதத்தினால் தாக்கப்பட்டு, ஒருவர் காயமடைந்துள்ளார்.

வங்கிக்கு நேற்று மதியம் வருகைதந்த ஒருவர், அங்கிருந்த ஒருவரை கூரிய ஆயுதத்தினால் தாக்குவதற்கு முற்பட்ட சந்தர்ப்பத்தில், அந்த ஆயுதத்தினை பறித்து தாக்க முயற்சித்தவரை மற்றையவர் தாக்கியுள் ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

தாக்குதலில் காயமடைந்தவர் இரத்தினபுரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற)

# தீர்த்த வாரி உற்சவம்

யாழ்ப்பாணம்,ஓக.28

ஆவணிச் சதுர்த்தியை முன்னிட்டு இருபாலை, கோப்பாய் தென்கோவை கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் விஷேட தீர்த்தவாரி உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை பக்தர்கள் தீர்த்தவாரி செய்யும் நிகழ்வும் மாலை 4 மணிக்கு விஷேட அபிஷேக பூஜை வழிபாடுகளும், 6 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் சுவாமி வீதியுலாவும் நடைபெறவுள்ளன. (த)

# ஊவா தேர்தல் தொடர்பில் கலந்துரையாடல்

கொழும்பு, ஓக.28

தேர்தல் சட்டத்திட்டங்கள் தொடர்பில் மீள்திருத்தங்களை முன்வைப்பதற்கும், ஊவா மாகாண சபையில் போட்டியிடும் அரசியல் கட்சிகளிடையே நிலவும் பிரச்சினை தொடர்பிலும் பிறிதொரு கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

சரத் பொன்சேகா
தலைமையிலான
ஜனநாயக கட்சி ம
றும் தேர்தல்க
ஆணையாளருக்
இடையில் நேற்று
கலந்துரையாட
ஒன்று இடம்பெற்று
ளது.

இதேவேளை
நாளைய தினம் தே
தல்கள் ஆணைய
ளர். ஐக்கிய தேசி
கட்சியின் பிரதிநி
களை சந்திக்கவு
ளதுடன், நாளை ம
தினம் ஜே.வி.பி
னரை சந்திக்கவு
ளார்.

முன்னதாக கடந்த 1
ஆம் திகதி ஐக்கி
மக்கள் சுதந்திர கூட்
மைப்பின் பிரதிநி
கள்தேர்தல்கள்ஆணை
யாளரை சந்தித்திரு
தனர்.

இதேவேளை, தே
தல் வன்முறைச் ச
பவங்கள் தொடர்பா
ஆராயும் இயக்கா
களிடம் இருந்
கிடைக்கும் முறை
பாடுகளும் நாளா
தம் அதிகரித்து வரு
ன்றன.

ஊவா மாகாண சபை
தேர்தலின் அடிப்ப
யில் பதுளை மாவ
டத்தை விட மொனர
கலை மாவட்டத்தி
அதிக வன்முறை
சம்பவங்கள் பதிவா
யுள்ளதாக தெரிவி
கப்பட்டுள்ளது.

ஊவா மாகாணத்தி

இதுவரை 112 முறைப் பாடுகள் பதிவாகியுள்ளதாக பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டி ஆராய்ச்சி தெரிவித் தார்.

அவற்றில் 74 முறைப்பாடுகள் மொனராகலை மாவட்டத்தில் பதிவாகியுள்ளன. .(ற)


## A/L CHEMISTRY

வெளிவந்துவிட்டது!
சு. சுரேஸ்குமார் ஆசிரியரின்
d-BLOCK Inorganic Chemistry நூல்
அனைத்து பிரபல புத்தகசாலைகளிலும்
பெற்றுக் கொள்ளலாம்.
(51402) (10) T.P: 077 555 9028

## விற்பனைக்கு

* அல்சேஸ்சன் Dog பெண் ஜேர்மன் செப்பேட்
* மோட்டார் வாகனம் MD 90
தனிப்பட்டபாவனையில் உள்ள வாகனம்.

தொடர்பு: 076 689 3550 (51239) (12.3.6)

## மரண அறிவித்தல்

### திருமதி. சிவபாக்கியம் நடராஜா



தோலகட்டி ஒழுங்கை வயாவிளானைப் பிறப்பிடமாகவும் சாமுவேல்மான் முதலாம் ஒழுங்கை கற்பக்குணை உடுவில் மேற்கு சுன்னாகத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் நடராஜா நேற்று (27.08. 2014) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு, தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் நடராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்வரட்ணம், கதிர்காமராஜா ஆகியோரின் அன்பு சகோதரியும், குணபாலன் (அரச நில அளவையாளர், கண்டி), நிர்மலராணி (பிரான்ஸ்), வதனராணி (வலயக் கல்வி அலுவலகம்-யாழ்ப்பாணம்), றஞ்சிதா (இந்தியா), ஜெயந்தா, தவபாலன் (லண்டன்), லிங்கபாலன் (ப.நோ.கூ.சங்கம்-தெல்லிப் பழை) ஆகியோரின் பாசமிகு தாயும், நவமலர், கோபாலகிருஷ்ணன் (பிரான்ஸ்), சிவசோதி, சந்திரன் (இந்தியா), யோகலிங்கம், கிருசாந்தினி (லண்டன்), புஷ்பராணி ஆகியோரின் அன்பு மாமியும், யதுராஜ், ஐஸ்வரநேசன் (பிரான்ஸ்), மதுரன் (பிரான்ஸ்), முகுந்தன், லகுபரன், மதுஷன், கஜலக்ஷி, பிரகாஸ்ராஜ் (இந்தியா), வஜீகரன், துஷாயினி, நிஷாந்தன், பிரசாந் தன், நிஷானி, கிருசாந்தி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மங்கையர்க்கரசி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சின்னையா, பராசக்தி, அன்னலக்ஷ்மி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.08.2014 வெள்ளிக்கிழமை பி.ப 4.00 மணிக்கு உடுவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

"துஷா இல்லம்"
சாமுவேல்மான் முதலாம் ஒழுங்கை,
கற்பக்குணை, உடுவில் மேற்கு,
தொ.பே: 021 490 9283

(51405) (10)

தகவல்:
குடும்பத்தினர்.

# தொடர்ச்சிகள்

## சீனாவில்

பினர் ஹர்சா டி சில்வா, இவ்வாறான நிபந்தனையற்ற உடனடி நிதியால் அரசு கவரப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசு உலகவங்கி மற்றும் சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளுக்கு கட்டுப்படாவிடின் அதற்கு எந்த நிதியும் கிடைக்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜப்பானே இலங்கைக்கு அதிகளவு கடன் வழங்கும் நாடாக தொடர்ந்தும் விளங்குகிறது. எனினும், கடந்த சில வருடங்களில் இலங்கைக்கான சீனாவின் உதவி பெருமளவு அதிகரித்துள்ளது. 1971 ஆம் ஆண்டு முதல் இரு நாடுகளுக்கும் இடையில் நெருக்கமான உறவுகள் காணப்படுகின்றன. சீனா 5 பில்லியன் டொலருக்கு மேல் நிதியுதவி வழங்கியுள்ளது. இதில் பெருமளவு உதவி போரின் முடிவுக்குப் பின்னரே வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை சீனாவுக்கு முன்னுரிமையளிக்கிறது என தெரிவிக்கப்படுவதை மறுத்துள்ள முதலீட்டு அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபயவர்த்தன, பல நாடுகளுடன் இரு தரப்பு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கிறார்.

இலங்கைக்கு அதிகளவு நிதியுதவியை ஜப்பானே வழங்குகின்றது. அந்த நாட்டு வங்கியொன்றுடன் சமீபத்தில் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளோம். நாங்கள் இலக்கு வைத்துள்ள இன்னுமொரு நாடு குவைத் என அவர் அல்ஜசீராவிற்கு தெரிவித்தார்.

இலங்கையின் உடனடி கட்டுமான திட்டங்களுக்குதவுவதில் சீனா காட்டுகின்ற விருப்பமே அந்த நாட்டுடன் ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவதற்கு காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், சீனாவின் கடனுதவிக்காக பெருமளவு வட்டியை செலுத்த வேண்டியுள்ளது எனச் சுட்டிக்காட்டுகிறார் ஹர்சா டி சில்வா.

2014 ஆரம்பத்தில் மூன்று முக்கிய திட்டங்களுக்காக சீனா, ஜப்பான், குவைத் ஆகிய நாடுகளுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டோம். இதில் சீனாவின் வட்டி வீதமே அதிகம் என அவர் சுட்டிக்காட்டுகிறார். சீனாவிடம் வாங்கிய கடன்களுக்கு செலுத்துவதற்காக நாங்கள் மீண்டும் கடன்வாங்க நிர்ப்பந்திக்கப்படுகிறோம். சீனாவின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப் பட்டதிட்டங்கள் பலனளிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கான சீனாவின் பொருளாதார உதவிக்கான நோக்கம் அரசியலை அடிப்படையாகக் கொண்டது இந்து சமுத்திரத்தை சூழவுள்ள நாடுகளில் அது தனது செல்வாக்கை அதிகரிக்க விரும்புகின்றது என ஆய்வாளர் சானக பெரேரா சுட்டிக்காட்டினார்.

சீனா அதிகளவு உட்கட்டுமான திட்டங்களுக்கே உதவுகிறது. இவையும் அனேகமாக கடலோர திட்டங்களே பிராந்தியத்தில் அவர்களது நோக்கத்தை நிறைவேற்ற அம்பாந்தோட்டை துறைமுகமும் மத்தள விமான நிலையமும் உதவியாக அமையும். இவற்றை அந்த நாடு எவ்வித தடையுமின்றி பயன்படுத்தலாம். திருகோணமலையில் விமான பராமரிப்பு நிலையமொன்றை அமைப்பது தொடர்பான உடன்படிக்கை இந்திய இலங்கை உறவுகளை பாதிக்கும். இது இலங்கை இந்திய உடன் படிக்கைக்கு எதிரானது - என்றார் அவர்.

## தமிழ்த்

பில்லை. ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்தால் அது பற்றி பரிசீலிக்கப்படும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

"இருதரப்பு பேச்சில் பங்கேற்பதற்கு தயார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளதே..." என இதன்போது அமைச்சரிடம் கேள்வி எழுப்பியபோது அவ்வாறானதொரு அறிவிப்பு இன்னும் முறையாக விடுக்கப்பட வில்லை என்று பதிலளித்தார் அமைச்சர்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று பிரதமர் மோடி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் உறுதியளித்துள்ளார். இது பற்றி இலங்கை அரசின் நிலைப்பாடு என்னவென்று எழுப்பப்பட்ட மற்றுமொரு கேள்விக்கு, அமைச்சர் பதில் அளிக்கையில்,

" தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் எத்தகைய கோரிக்கையை வேண்டுமானாலும் முன்வைக்கமுடியும். எனினும், இது விடயத்தில் மோடி எவ்வித பிரதிபலிப்பையும் வெளிப்படுத்தவில்லை. அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த 'தனிநபர் நியமன' கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. இந்தியா செல்வதாலோ அல்லது மேற்குலகம் செல்வதாலோ பிரச்சினைகள் தீரப்போவதில்லை. ஏனெனில், தேசியப் பொறிமுறை மீதே இலங்கை அரசு பூரண நம்பிக்கை வைத்துள்ளது. இதற்கு அப்பால் சென்று செயற்படமுடியாது. குறிப்பாக மேற்குலகத் தலையீடுகளால் இன்று என்ன நடக்கின்றது. ஈராக், சிரியா என பல நாடுகளில் புதிதாக பிரச்சினைகள் உருவெடுத்துள்ளன." என்றார்.

"தேசியப்பொறி முறைக்கமையவே அரசின் செயற்பாடுகள் அமையுமென நீங்கள் கூறுகின்றீர்கள். அப்படியாயின், காணாமற்போனோர் விடயத்தில் எதற்காக சர்வதேச குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது" என இதன்போது எழுப்பட்ட மற்றோரு கேள்விக்கு அமைச்சர் பதில் அளிக்கையில் ஆலோசனை பெறுவதற்காகவே அந்தக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இது சர்வதேச தலையீடாக அமையாது. ஏன்? எமது நாட்டுப் பிரதிநிதிகள் சர்வதேச பதவிகளை வகிக்கவில்லையா? என்றார்.

## அச்சுவேலியில்

மாவட்டத்திலுள்ள சகல அரச திணைக்களங்களின் தலைவர்கள், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்டவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அத்துடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் அலுவலக உடையில்லாமல் சாதாரண உடையில் பங்கேற்றிருந்தனர். அவர்களுடன் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட கிராம அலுவலர்களும் பங்கெடுத்திருந்தனர்.

மேலும் மாவட்டச் செயலகத்தின் அரச உயர் அதிகாரிகளும் வருகை தந்திருந்தனர். சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் மாவட்ட செயலகத்தினால் அனுப்பப்பட்ட வாகனங்களில் ஏற்றிக் கொண்டு வரப்பட்டனர். இதனைவிட ஈ.பி.டி.பியின் ஒவ்வொரு கிளைக் காரியாலயங்களினாலும் 2 பஸ்களில் மக்கள் ஏற்றிக்கொண்டு வரப்பட்டனர்.

நிகழ்வில் குறித்த தொகுதி மக்களுக்கே இடஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அளவுக்கு அதிகமான மக்கள் ஏற்றி வரப்பட்டதால் பொதுமக்கள் நிலத்தில் இருக்குமாறு பணிக்கப்பட்டனர்.

அத்துடன் பிரதேச செயலாளர்கள், யாழ்.மாவட்ட இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களில் ஒரு தொகுதியினர் இருப்பதற்கான இடம் கிடைக்காமையினால், படிக்கட்டில் அமர்ந்திருந்தனர். பொதுமக்களின் சேவை நாளான புதன்கிழமை, சகல அரசசேவைகளையும் முடக்கி நேற்றைய நிகழ்வுக்கு அரச அதிகாரிகளை அழைத்து அவர்களுக்கு உரிய மதிப்புக் கொடுக்காமை, அரச அதிகாரிகள் மத்தியில் சினத்தை ஏற்படுத்தியுள்ளது.

(த-5)

## மோடியுடனான

பாக குறிப்பிட்ட கருத்துகளை இலங்கை அரசு நடைமுறைப் படுத்துமாயின் அது வரவேற்கத்தக்கது. 13ஆம் திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதற்காகவே நானும் முயற்சித்து வருகிறேன்.

நாங்கள் இலங்கையர்கள். எமது நாட்டுப் பிரச்சினைக்கு இன்னுமொரு நாடு தீர்வு வழங்க முடியாது. 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நாம் இலங்கை அரசுடன் கலந்துரையாடி வந்தோம். இந்நிலையில், மோடியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திய பேச்சுகள் நியாயமற்றவை" - என்றார் அவர்.

## ஒக்ரோபர்

வழங்கி வருகின்றது. இந்த நிதியில் புனரமைக்கப்பட்ட ரயில் பாதையினூடான சேவை தற்போது கொழும்பிலிருந்து பளை வரை இடம்பெறுகின்றது. யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை விஸ்தரிப்பு கடந்த ஏப்ரல் மாதம் புதுவருடத்துடன் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் ஒகஸ்ட் மாதம் அது ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது ஒக்ரோபர் மாதம் முற்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கைப் புனரமைப்பதற்கு அடிக்கல் நடுவதற்காக வருகை தந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை. கே.சின்ஹா ஆகியோர் புனரமைக்கப்பட்டு வரும் யாழ்.மத்திய ரயில் நிலையத்தையும் சென்று பார்வையிட்டனர்.

(த-5-7)

## இலத்திரனியல்

ணுவ ஆட்சி வலுப்படும். அதனைத் தடுப்பதற்காகவே இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம் என்று சோசலிச முன்னிலைக் கட்சி தெரிவித்துள்ளது.

(ற-402)

## நவிப்பிள்ளை

அவரது இறுதி உரை உலகம் முழுவதிலும் உள்ள மனித உரிமை சமூகத்தின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இலங்கைக்கான பயணத்தின்போது அவர் பல நெருக்கடிகளை எதிர்கொண்டார். அவரது நியாயபூர்வமான செயற்பாடுகளை பக்கச்சார்பானவை என இலங்கை அரசு பிழையாக குற்றம் சாட்டியது.

இலங்கையில் எதேச்சதிகாரப் போக்கு தென்படுவதையும் பயங்கரவாதம் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களையும் மிகச் சரியாக இனம் கண்டவர் நவநீதம்பிள்ளை.

அவருடைய பணிக்காக தலை வணங்கும் அதேவேளை, அடுத்த மனித உரிமை ஆணையாளரும் அவரைப் பின்பற்றி நடப்பார் என எதிர்பார்க்கிறோம்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அரசு புதிய மனித உரிமை ஆணையாளர் மனித உரிமை விழுமியங்களுக்கு மாறாகச் செயற்படுவார் என எதிர்பார்க்கிறது.

சர்வதேச முடிவுகளும் சர்வதேச விழுமியங்களும் தனிநபர் ஒருவரின் ஆளுமையில் தங்கி இருக்கவில்லை என்பதை அரசு உணர்வதற்கான தருணம் இது"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-சி)

## இணைந்து

யாக பல ஒற்றுமையான அம்சங்கள் காணப்படுகின்றன. இரண்டு நாடுகளுக்கிடையிலான உறவுகளும் தற்போது பலமடைந்து வருகின்றன. இலங்கை மக்களின் அபிலாஷைகளை அறிந்து அதற்கமைய இந்திய அரசின் உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் புனரமைக்கப்பட்ட அச்சுவேலி கைத்தொழில்பேட்டையில் முதலீடு செய்வதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

எமது 145 மில்லியன் ரூபா நிதியுதவியில் துரையப்பா விளையாட்டரங்கு புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. யாழ்ப்பாணத்தில் கலாசார மையம் 1.2 பில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் நடப்பட்டு 2017 ஆம் ஆண்டு பணிகள் பூரணப்படுத்தப்படும். யாழ்.பல்கலைக் கழகத்தின் விவசாய - பொறியியல் பீடங்கள் அமைப்பதற்கு 600 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்திய அரசின் நிதியுதவியில் இதுவரையில் 15 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு இறுதிக்குள் 27 ஆயிரம் வீடுகள் நிர்மாணித்து முடிக்கப்படும்.

இதனை விட முக்கியமானது, வெகுவிரைவில் கதிர்காமத்தில் புகையிரத ரிக்கெட்டை வாங்கிக் கொண்டு இலங்கை முழுவதும் மட்டுமல்ல இந்தியாவின் முக்கியமான இடங்களுக்கும் சென்று வர முடியும்.

இறுதியாக ஒன்றை மாத்திரம் தெரிவித்துக் கொள்கின்றேன். வடக்கு மக்களின் சுபீட்சத்துக்காக வடக்கு மாகாண சபையும், இலங்கை மத்திய அரசும் எங்களுடன் இணைந்து செயற்பட வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார்.

(ற-5)

## அதிகரிக்கும்

குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"88 முறைப்பாடுகளில் அதிகமானவை மொனராகலை மாவட்டத்திலேயே இடம்பெற்றுள்ளன. சொத்துக்களுக்கு நாசம் விளைவித்தல் மற்றும் தேர்தல் விதிமுறைகளை மீறிய பரப்புரைகள் தொடர்பில் 21 முறைப்பாடுகளும், காயப்படுத்தல் மற்றும் அச்சுறுத்தல் தொடர்பில் 5 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

பொதுச்சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தல், அரச ஊழியர்களைப் பயன்படுத்துதல், நியமனம் வழங்குதல் இடமாற்றம் வழங்குதல் என்பன தொடர்பில் 17 முறைப்பாடுகளும் அவற்றில் உள்ளடங்குகின்றன. அடுத்த கட்டத்தில் பதுளை மாவட்டத்தில் 19 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ஆணையாளர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு எழுத்துமூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது"- என்று அந் தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-4)

## அச்சுவேலி

225 மில்லியன் ரூபா நிதி யும், இலங்கை அரசால் 50 மில்லியன் ரூபா நிதியும் வழங்கப்பட்டது. அதனைக் கொண்டு, இலங்கையின் 19 ஆவது கைத்தொழில் பேட்டையாக அச்சுவேலி கைத்தொழில் பேட்டை அமைக்கப்பட்டது. இதனை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

இங்கு முதலீடு செய்வதற்காக 61 விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதும் அதிலிருந்து 7 பேரே முதல் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு 30 வருட குத்தகைக்கு அங்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளன. அதனூடாக 4 ஆயிரத்து 500 பேர் நேரடியாகத் தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்ளவுள்ளனர். மறைமுகமாக 2 ஆயிரத்து 500 பேர் தொழில் வாய்ப்பை பெறுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாண எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா, மாகாண சபை உறுப்பினர்களான எம். கே. சிவாஜிலிங்கம், ரிப்கான் பதியுதீன் ஆகியோரும், நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திரகுமார், அலென்ரின் ஆகியோரும், யாழ்.மாநகர சபை முதல்வரும் அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

(ற-5.21)

## தீர்வை

பூநகரி சந்தைக் கட்டடத் தொகுதியை நேற்றுத் திறந்து வைத்து உரைநிகழ்த்தும் போதே அமைச்சர் பஸில் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்று பூநகரிக்குச் சென்ற அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பூநகரி பிரதேச மருத்துவமனை, பூநகரி சந்தைக் கட்டடத் தொகுதி, பூநகரி பஸ் தரிப்பிடம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார். அதன்பின்னர் பூநகரி சந்தைத் தொகுதியில் நடைபெற்ற நிகழ்வில் அவர் உரை நிகழ்த்தினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

கட்டடங்களை திறப்பது முக்கியமல்ல மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதே எமது நோக்கம்.

பஸ் தரிப்பிடம் சந்தைக் கட்டடம் என்பன வடமாகாணத்துக்கு எமது வரவு வழங்கிய வசதியாகும்.

2009 இல் எனது தலைமையிலான குழுவுக்கு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க ஜனாதிபதி நிதி வழங்கியிருந்தார்.

வட மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளுக்கு அப்போது யாரும் வர முடியாது மிதிவெடிகள், பதுங்குகுழிகள் காணப்பட்டன, வயல்கள், வாய்க்கால்கள் அழிக்கப்பட்டிருந்தன. பாடசாலைகள் அழிக்கப்பட்டிருந்தன.

கிளிநொச்சி மருத்துவ மனை பெரும் அழிவுகளை எதிர் கொண்டிருந்தது.

மின்சாரம் இப்பகுதிகளில் இல்லை குடிதண்ணீர் வசதிகள் இல்லை.

பிரதேச சபைகள், மாகாண சபை கூட இல்லை யாருமே நினைத்துப்பார்க்க முடியாத சங்குப்பிட்டிப் பாலத்தை நாங்கள் உருவாக்கியுள்ளோம்.

ஜனாதிபதி அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பது நாட்டு மக்களுக்காகவே யாருக்கும் பயந்து இப்பணிகளை அவர் முன்னெடுக்கவில்லை. எங்களிடம் குறைபாடுகள் இல்லாமல் இல்லை எமது குறைபாடுகளை ஜனாதிபதியிடம் கூறாமல் வெளிநாடுகளுக்கு சென்று கூறுவதன் மூலம் அபிவிருத்திகளை செய்யமுடியாது.

எமது நாட்டுக்கு சமாதானம், அபிவிருத்தி, சுபீட்சம் எல்லாவற்றையும் கொண்டுவந்தவர் ஜனாதிபதி. எங்களின் அபிவிருத்திப் பணியில் ஒத்துழைத்து செயற்படுங்கள் அரசுக்கெதிராக செயற்பட வேண்டாம் அரசுக்குக் குழிபறிக்க வேண்டாம். இடையூறாக இருக்க வேண்டாம் - என்றார்.

(த-18)

யாழ்ப்பாணம் - கொழும்பு

## சைக்கிள் பேரணியில் இரண்டு முதியவர்கள்



யாழ்ப்பாணம், ஒக.28

யாழ்ப்பாணத்தில் இருதய சத்திரசிகிச்சை நிலையம் ஒன்றை அமைக்கும் நோக்கில் யாழ்.மருத்துவ பீட மாணவர்களால் நடத்தப்பட்ட யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிய சைக்கிள் பேரணியில் இரு முதியவர்களும் கலந்து கொண்டுதமது பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

அவ்வாறு பங்களிப்பு வழங்கியவர்களான அளவெட்டியைச் சேர்ந்த வை.கைலநாதன் (வயது- 59), வத்தளையைச் சேர்ந்த ஏ.வீரசிங்க (வயது-71) ஆகிய இருவரும் சைக்கிள் பேரணியில் கொழும்பைச் சென்றடைந்தனர். (வ-17)

# மாடுகளுக்கு கால்வாய் நோய்; இறைச்சிக்காக வெட்டத் தடை

### கரவெட்டிப் பிரதேசத்தில்

நெல்லியடி, ஒக.28

கரவெட்டி பிரதேசத்திலுள்ள கிளான், குடவத்தை, துன்னாலை கிழக்கு, துன்னாலை தெற்கு, கப்புது ஆகிய பிரதேசங்களில் மாடுகளுக்கு கால்வாய் நோய் பரவியுள்ளதால் மறு அறிவித்தல் வரை இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளதாக கரவெட்டி பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். குறித்த பிரதேசங்களில் பால் சேகரித்தல், கால்நடைகளை வேறு பிரதேசங்களுக்குக் கொண்டு செல்லல், எரு சேகரித்தல் என்பவை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

அத்துடன் மாடுகளை வெட்டுதல், இறைச்சி விற்பனையில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகள் முற்றாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் நோயுற்ற மாடுகள் உள்ள பிரதேசத்தில் மாடுகளை வெளியில் நடமாடவிடாது வீடுகளில் கட்டி வளர்க்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை - வடமராட்சி பிரதேசத்திலுள்ள கால்நடைகளில் கால்வாய் நோய் தாக்கம் கண்டறியப்பட்டால் உடனடியாக அருகிலுள்ள கால்நடை வைத்தியசாலைக்கு தெரியப்படுத்துமாறு கரவெட்டி பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

இந்த நோயின் அறிகுறிகளாக மாடுகளின் வாய்ப் பகுதியிலுள்ள முரசு, நாக்கு போன்றவற்றில் புண்கள் ஏற்பட்டு உமிழ்நீர் வடிந்தபடி காணப்படும். குழம்பில் புண்கள் ஏற்பட்ட மாடுகள் நடக்கும்போது நொண்டும், ஓரிரு நாள்களுக்கு உணவு உண்ணாது சோர்வுற்று காணப்படும். சிறிய கன்றுகள் திடீரென இறக்கும். இவை போன்ற அறிகுறிகள் காணப்படின் உடனடியாக தமக்குத் தெரியப்படுத்துமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதிப்புக்குள்ளாகியுள்ள பசு மாடுகளில் இருந்து பால் எடுக்க முடியாத நிலையும் மாடுகளை இறைச்சிக்காக வெட்டி முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதால் பண்ணையாளர்கள் தாம் நட்டமடைவதாக தெரிவிக்கின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-422)

## ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தின் மாடிக் கட்டடத்துக்கு அடிக்கல்

தென்மராட்சி, ஒக. 28

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயத்துக்கு வகுப்பறைத் தொகுதிகளைக் கொண்ட மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று மு.ப. 11.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

குறித்த கட்டடத் தொகுதியை சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தினர் 24 மில்லியன் ரூபா செலவில் அமைத்துக் கொடுக்கவுள்ளனர்.

வித்தியாலய அதிபர் க.கஜேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கி.சத்தியசீலனும், சிறப்பு விருந்தினர்களாக சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவன நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் மார்ட்டீன் ஸ்ருடர், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், வடமாகாண கல்வித் திணைக்கள கணக்காளர் கே.கமலரூபன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

2000 ஆம் ஆண்டு போர் வேளையில் வித்தியாலய பௌதிக வளங்கள் முற்றாக அழிக்கப்பட்டன.

2012 ஆம் ஆண்டு வித்தியாலயம் மீள ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் தற்காலிக கொட்டகைகளில் வகுப்புகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)



ஆயிரம் ஆண்டுகள் பழைமைவாய்ந்த மறவன்புலவு திருக்கோயில் போர்க் கால இடிபாடுகளில் இருந்து மீளமைக்கும் திருப்பணிகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (வ)

## அபராதம்

தென்மராட்சி,ஒக.28

சாவகச்சேரி பொதுச் சந்தை பழவகை விற்பனை நிலையத்தில் அனுமதிப் பத்திரமின்றி சாராயம் விற்பனைக்கு வைத்திருந்த பெண்ணொருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இதேவேளை- மீசாலைப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி சாராயம் விற்பனைக்கு வைத்திருந்த நபரொருவருக்கும்25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும், வீடுகளில் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேலதிகமாக கள்ளு வைத்திருந்த சீவல் தொழிலாளர் 10 பேருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரி நிலையத்தால் தாக்கல் செய்யப்பட்ட குறிப்பிட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளையால் மேற்குறித்த விதத்தில் அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

## வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குக் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம்,ஒக.28

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் இடர் முகாமைத்துவ அமைச்சு மற்றும் யாழ். மாநகர சபை என்பன குடிதண்ணீரை வழங்க உதவி வருவதுடன் கரித்தாஸ் நிறுவனமும் பவுஸர் மூலம் அந்தப் பகுதிக்கான குடிதண்ணீரை வழங்கி வருவதாக வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தெரிவித்தார்.

யாழ்.அரச அதிபரின் நடவடிக்கையை அடுத்து 1.4 மில்லியன் ரூபா நிதியை குடி தண்ணீர் வழங்கும் சேவைக்கென இடர் முகாமைத்துவ அமைச்சு வழங்கியுள்ளது. குடிதண்ணீருக்காக சிரமப்பட்ட மண்டைதீவு, வேலணை, சரவணை, புங்குடுதீவு பகுதிகளுக்கு தற்போது நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. வேலணை பிரதேச சபை பவுஸர் மூலம் நயினாதீவுக்கான குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறுவதாகவும் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (வ-7)

## வட மாகாண மீன்பிடி அமைச்சால் பல்வேறு திட்டங்கள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஒக. 28

வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சால் 15 மில்லியன் ரூபா செலவில் பல்வேறு செயற்றிட்டங்கள் வடக்கு மாகாணத்தில் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வடக்கு மாகாண போக்குவரத்து, வர்த்தக - வாணிப, மீன்பிடி, கிராமிய அபிவிருத்தி அமைச்சுக்கு கடந்த ஆண்டு 55 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதில் நன்னீர் மீன்பிடி தொடர்பிலான அபிவிருத்தித் திட்டங்களுக்கு 15 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நன்னீர் குளங்களில் விடுவதற்குரிய மீன் குஞ்சுகள் வளர்ப்புக்கு 6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், சுண்டிக்குளத்தில் இறால் சேகரிப்பு நிலையத்துக்காக ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறு நன்னீர் குளங்களின் பராமரிப்புக்காக 5 மாவட்டங்களுக்கும் சேர்த்து 0.25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீன்பிடி நடவடிக்கையில் தொழில்நுட்பரீதியான மேம்பாட்டுக்காக 5 மாவட்டங்களுக்கும் சேர்த்து 0.25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி வளங்களைச் சரியான முறையில் பயன்படுத்தலுக்காக வடக்கின் சகல மாவட்டங்களுக்கும் 0.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பின் தங்கிய மீனவர் சமூகத்தின் மேம்பாட்டுக்காக 50 சத வீதமான மானியத்துடன் மீன்பிடி உபகரணங்கள் வழங்கலுக்காக வடக்கின் 5 மாவட்டங்களுக்கும் 7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (வ-5)

## பணம் கொடுக்காமல் ஏமாற்றிய கோண்டாவில் வாசிக்கு பிணை

கொடிகாமத்தைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து மோட்டார் சைக்கிளை வாங்கிவிட்டு பணம் கொடுக்காமல் ஏமாற்றி வந்த கோண்டாவில்வாசியொருவர் சாவகச்சேரி நீதிமன்றினால் ஒரு லட்சம் ரூபா ஆள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். கோண்டாவில் வாசியொருவர் கொடிகாமத்தைச் சேர்ந்த ஒருவரிடம் மோட்டார் சைக்கிளை விலை பேசிவாங்கிவிட்டுபணம் கொடுக்காமல் ஏமாற்றி வந்துள்ளார்.

இது தொடர்பாக மோட்டார் சைக்கிள் உரிமையாளர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இது தொடர்பான வழக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை பணம் செலுத்தாது ஏமாற்றி வந்த நபரை ஒரு லட்சம் ரூபா ஆள் பிணையில் செல்ல அனுமதித்தார். (வ-9)

## வீட்டுத் திட்டத்துக்கு தெரிவாகி பின்னர் நீக்கப்பட்ட குடும்பங்கள் முறைப்பாடு

### பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில்

யாழ்ப்பாணம், ஒக.28

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட அல்வாய் வடக்கு (ஜே/400) கிராம அலுவலர் பிரிவில் இந்திய வீடமைப்புத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 4 குடும்பங்கள் அந்தத் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

இதனால் பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பங்கள் யாழ். அரச அதிபரிடமும், வீடமைப்புத் திட்டப் பொறுப்பதிகாரிகளிடம் முறையிட்டுள்ளன.

அல்வாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் இந்திய வீடமைப்புத் திட்டத்துக்குப் பயனாளிகளைத் தெரிவு செய்யும் பணிகள் இடம்பெற்ற போது புள்ளிகள் அடிப்படையில் 30க்கு மேற்பட்ட குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டன.

தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டபோது அவர்களில் நால்வருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததால் அந்த நான்கு குடும்பங்கள் தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

விசாரணைகளை மேற்கொண்ட குழு குறித்த குடும்பங்களும் வீட்டுத் திட்டம் பெறுவதற்குத் தகைமையுடையவர்கள் எனபரிந்துரைசெய்து அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

அதன் அடிப்படையில் இரண்டாவதாக பிரதேச செயலகத்தால் வெளியிடப்பட்ட பட்டியலில் குறித்த நான்கு குடும்பங்களின் பெயர்களும் இணைக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

இரண்டாவது பட்டியல் வெளியிடப்பட்ட பின்னர் அந்த 4 குடும்பங்களுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டது.

அதனையடுத்து நான்கு குடும்பங்களின் பெயர் விவரங்கள் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டன.

இது தொடர்பாக பருத்தித்துறை பிரதேச செயலர் எந்தவொரு விளக்கமும் வழங்காததால் பாதிக்கப்பட்ட நான்கு குடும்பங்களும் அரச அதிபருக்கும் , வீடமைப்புத் திட்டப் பொறுப்பதிகாரிக்கும் முறையிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# ஐக்கிய இலங்கையே இந்தியாவின் விருப்பம் அதனால் பிரிவினையை நாம் கோர முடியாது

## சென்னையில் கூறினார் சம்பந்தன்

சென்னை. ஓக. 28

ஒருங்கிணைந்த இலங்கையில் போதிய அதிகாரங்களுடன் த்மிழர்கள் வாழவேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பமாக உள்ளதால் நாட்டைப் பிரித்துத் தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்று தாங்கள் கோரமுடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சென்னையில் தெரிவித்திருக்கிறார்.

தமிழ் மக்கள் தமது பூர்வீக நிலத்தில் சமூக, பொருளாதார, கலை, கலாசார விழுமியங்களுடன் சுதந்திரமாக வாழவே விரும்புகின்றனர். எனவே, தமிழ் மக்கள் அதிகம் வாழும் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் எப்போதும் இணைக்கப்பட்டே இருக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்த பின்னர் தமிழகம் சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குழுவினர் நேற்றுச் சென்னையில் பாரதீய ஜனதாக் கட்சியின் நிர்வாகிகளைச் சந்தித்துப் பேசினர். இதன்பின்னர் பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழகப் பிரமுகர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கலந்துகொண்ட ஊடகவியலாளர் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது. அப்போதே இரா.சம்பந்தன் மேற்படி விடயங்களைத் தெரிவித்தார்.

### பேச்சுக்களில் முன்னேற்றமில்லை

பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழக நிர்வாகிகளுடன் நடத்தப்பட்ட பேச்சு திருப்தியாக அமைந்தது என்று தெரிவித்த அவர், இலங்கையில் அதிகாரப் பரவலாக்கலுக்கு வழி செய்யும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறினார்.

இலங்கை அரசுடன் இது வரை நடத்திய பேச்சுக்களில் எந்த முன்னேற்றமும் இல்லை என்று குறிப்பிட்ட அவர், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மாற்றம் ஏற்படும் என பிரதமர் நரேந்திர மோடி தங்களுக்கு உறுதியளித்துள்ளார் என்றும் கூறினார்.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அந்தச் செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமக்கும் இலங்கை அரசுக்குமிடையில் 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதன்போது நாம் வாய் மூலமாகவும் எழுத்து மூலமாகவும் எமது நிலைப்பாட்டை அரசுக்குத் தெரியப்படுத்தியிருந்தோம். ஆனால் இலங்கை அரச தரப்பினர் தமது பக்கப் பதிலைத் தருவதற்கு அவகாசம் கேட்டார்கள். ஐந்து மாதங்கள் கடந்தன. ஏழு சுற்றுப் பேச்சுக்கள் முடிவுற்றன. எனினும் அவர்கள் பதில் தரவில்லை. 2011 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற சந்திப்பில் நாம் அரசு தரப்புப் பதில் வரவில்லை என்பதை எடுத்துக் கூறினோம். பதில் தராவிட்டால் தொடர்ந்து பேசுவதில் அர்த்தமில்லை என்பதையும் அரசுக்குத் தெரியப்படுத்தினோம். அத்துடன் பதில் தரும் வரை அடுத்த கூட்டத்தை கால வரையறையின்றி ஒத்திவைப்பது என்றும் அறிவித்தோம். அரசு உலகத்தை ஏமாற்றுகிறது. எனவே, இந்தப் பேச்சுக்களில் நாம் கலந்துகொள்வதால் அரசு உலகை ஏமாற்றுவ தற்கு துணையாக நாம் இருந்துவிடக்கூடாது என்று கருதி, அரசிடம் மீண்டும் முடிவைக் கோரினோம். பதில் தந்தால் அடுத்த கூட்டத்திற்கான திகதியை அறிவிப்போம் என்றும் தெரிவித்தோம். அவர்கள் பதில் தரவில்லை.

### என்னை அழைத்து பேசினார் மஹிந்த

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்னை அழைத்துப் பேசினார். இதன்போது தமது தரப்பில் இருந்து பதில் தரமுடியாதுள்ளது என்றும் அதற்குப் பல காரணங்களையும் அவர் சொன்னார். நான் அதை எதிர்த்து பதில் தரவேண்டும் என்று கூறினேன். அதற்கு ஜனாதிபதி விரும்பவில்லை. இந்த நிலையில் அவருக்கும் எனக்குமிடையில் ஒப்பந்தம் ஒன்று வந்தது. 13 ஆவது அரசியல் திருத்தம் குறித்துப் பேசும் போது முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நீங்கள் ஜனாதிபதியாக உள்ள காலப்பகுதியில் இந்தத் திருத்தம் குறித்து பேசப்பட்ட எல்லா விடயங்களும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்று நான் கூறினேன். அவர் அதை ஏற்றுக் கொண்டு நாடாளுமன்றத் தெரிவுக்குழு குறித்து என்னிடம் பேசினார். நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டாலும் இருதரப்புப் பேச்சு இடம்பெறவேண்டும் என்று நாம் ஜனாதிபதியிடம் 2011 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வலியுறுத்தினோம். இதன்போது, இருதரப்புப் பேச்சு இடம்பெறும் என்றும் அதில் ஏற்படுத்தப்படும் ஒப்பந்தங்கள் நாடாளுமன்றத் தெரிவுக் குழு மூலம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப் படுத்தப்படும் என்றும் அந்த அடிப்படையில் பேச்சு இட்ம் பெறும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

### தெரிவுக்குழு இழுபறியில்

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அரச தரப்பில் 19 பேரும் எதிர்க்கட்சிகள் சார்பில் 12 பேரும் நியமிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. இதன்படி, எமது கட்சிக்கு 3 இடங்கள் கிடைத்திருக்கக் கூடும். எதிர்க்கட்சிகள் தெரிவுக்குழுவை ஏற்றுக்கொள்ளாத நிலையில் இழுபறிகள் தொடர்ந்தன. மீண்டும் இரு தரப்புப் பேச்சுகள் 2011 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் ஆரம்பித்தன. அடுத்தடுத்து 3 கட்டப் பேச்சுக்கள் இடம்பெற்றன. எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. அரசு ஆக்கபூர்வமாக நடந்து கொள்ளவுமில்லை. இந்த நிலையில் 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17ஆம், 18 ஆம், 19 ஆம் திகதிகளுக்குப் பேச்சு ஒத்திவைக்கப்பட்டது. ஆனால் அந்தத் திகதிகளில் அரசு பேச்சுக்கு வரவில்லை. இந்த நிலையில் நாம் எவ்வாறு தெரிவுக் குழுவுக்குப் போவது என்ற கேள்வி எழுந்தது. இது ஒருபுறமிருக்க, ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அரச அமைச்சர்கள், ஆளும் கட்சியிலுள்ள வேறு அங்கத்தவக் கட்சித் தலைவர்கள் எனப் பலரும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் நீக்கப்படவேண்டும் என்றும் அதில் உள்ள அதிகாரங்க்ள் குறைக்கப்பட வேண்டும் என்று பகிரங்கமாகப் பேச ஆரம்பித்தனர். இந்த நிலையில் நாம் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

### ஏமாற்றப்படுவதை விரும்பவில்லை

அரசுக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சு இடம்பெற்று நாம் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தினால் - அதனை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு உதவுமானால் - அந்தக் குழுவில் அங்கம் வகித்தத் தயாராக இருந்தோம். ஆனால் அடுத்த கட்டப் பேச்சுக்கு அரசு வராத நிலையில் எமது முயற்சி தோல்வியடைந்தது. ஓர் உறுதியான நிலைப்பாடின்றி நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குச் சென்று அவர்களால் ஏமாற்றப்படுவதை எங்களுடைய மக்களின் பெயரால் நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதில் எப்போதும் நாம் உறுதியாக இருக்கிறோம். இந்த விடயம் சம்பந்தமாக முன்னர் ஆட்சியிலிருந்த இந்திய மத்திய அரசுக்குப் பல தடவை நாம் தெளிவுபடுத்தியிருக்கிறோம்.


### மோடிக்கும் தெளிவுபடுத்தினோம்

அதேபோலவே இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிக்கும் எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினோம். இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பாக அரசு தரப்பு உயர்மட்டப் பேச்சுக்கள் இடம்பெற்று வரு கின்றன. அது குறித்து நாம் கருத்துச் சொல்ல முடியாது. இரு தரப்பு மீனவர்களும் பாதிப்பு ஏற்படாத வகையில் புரிந்துணர்வு அடிப்படையில் தொழிலில் ஈடுபட வேண்டும் என்பதே எமது விருப்பம். தமிழகத் தலைவர்கள், பல்வேறு அமைப்புக்கள், தமிழ் மக்களுக்காக குரல் கொடுப் பதை நாம் வரவேற்கிறோம். ஆனாலும் எமது மக்கள் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அந்தத் துன்பத் தைத் தொடர அனுமதிக்க முடியாது. இலங்கை இனப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணப்படு வதையே நாம் விரும்புகின்றோம். அதற்காக அவர்கள் இணைந்து குரல் கொடுக்க வேண்டும்.

### சர்வதேசம் எமக்காக குரல் கொடுக்கிறது

சர்வதேசம் இன்று தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்து வருகின்றது. அதுபோலவே இந்தியாவும் குரல் கொடுக்க வேண்டும். எமது மக்கள் தமது பாரம்பரிய இடங்களில் நிரந்தர சமாதானத்துடன் நிரந்தரமான அமைதியைப் பெற்று போதிய அதிகாரத்துடன் வாழும் ஆட்சி முறை ஒன்றையே விரும்புகின்றனர். நாட்டைப் பிரித்து தீர்வு பெற்றுவிடமுடியாது. ஒருமித்த இலங்கைக்குள் நியாயமான, நடைமுறைப்படுத்தக்கூடிய ஒரு தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதையே மக்கள் விரும்புகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்திய அதிகாரிகளைச் சந்திக்க அனுமதி வழங்கப்படாது என்ற போர்வையில் சுப்பிரமணிய சுவாமி கருத்துத் தெரிவித்திருந்தாரே? என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, அவர் ஓர் இந்திய அரசியல்வாதி இப்போது ஆட்சியில் இருக்கும் பா.ஜ.கவில் முக்கிய பிரதிநிதியாக உள்ளார். அவன்ர நாம் விமர்சிக்க முடியாது. அதை நாம் விரும்பவும் இல்லை. - என்றும் தெரிவித்தார்.

(த)





*பூநகரிப் பிரதேச மருத்துவமனையை அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்றுத் திறந்து வைத்தார். அத்துடன் அங்குள்ள நோயாளிகளுக்கு சத்துணவுகளைய்யும் அவர் வழங்கினார்.*

*(த-18)*

# பொலிஸுக்கு மது விற்றவர் செலுத்தினார் ரூ. 20 ஆயிரம்

யாழ்ப்பாணம், ஓக. 28

சட்டவிரோதமாகப் பொலிஸாருக்குச் சாராயம் விற்றவருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது நீதிமன்று.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. நாரந்தனையைச் சேர்ந்த ஒருவரே சட்டவிரோதமாக 250 மில்லிலீற்றர் சாராயத்தை. வந்திருந்தவர்கள் பொலிஸார் என்று தெரியாமல் விற்பனை செய்துள்ளார்.

அதனால் அவருக்கு எதிராக ஊர்காவற்றுறைப் பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர். நீதிமன்றில் அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதனையடுத்து அவருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

(த-4)

# இறுவட்டு வெளியீடு

கோண்டாவில் மேற்கு மகா கணபதி பிள்ளையார் ஆல யத்தின் மீது திருமதி ஜெனித் திரா ஜெகனினால் பாடப்பட்ட குடமுழுக்குப் பாடல்கள் அடங்கிய இறுவட்டு வெளியீடு இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் பேராசிரியர் எஸ்.தேவராசா தலைமையில் நடை பெறவுள்ளது.

(த-86)

# சாரதி அனுமதி இல்லாதவருக்கு 11,500 ரூபா அபராதம் விதிப்பு

சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட ஆவணங்கள் இன்றி மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் நீதிமன்றுக்கு 11 ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்தினார். ஊர்காவற்றுறையைச் சேர்ந்த குறித்த நபர் சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்தி ரம், வரி அனுமதிப் பத்திரம் மற்றும் தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்று கொண்டிருந்தபோது பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார்.

அவருக்கு எதிராக ஊர்காவற்றுறைப் பொலிஸார் ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். நீதிமன்றில் அவர் தன் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதனையடுத்து அவருக்கு 11 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

(த-4)

**A/L CHEMISTRY**

DAY CLASSES ஆரம்பம் : 02.09.2014

- ★ அலகு ரீதியான மீட்டல்
- ★ 10 years F.W.C Paper
- ★ 10 years Past Paper
- ★ 2015 - அயன் சமநிலை
- ★ 2016 - வெப்ப இரசாயனம்

ஆசிரியர்: சு. சுரேஸ்குமார் BSc (Hons) MBA (Lon)

**New Science Corner**

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(51403) (10)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.